60 மணி விழா மலர்

# வரதோதயம்




திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை
(SLPS-1,Com.Trd, BA, PGD.ED,M.Ed(Merit))
அதிபர், யா /இளையதம்பி இந்து வித்தியாலயம்

வெளியீடு

பாடசாலைச் சமூகம்


யாழ் /இளையதம்பி இந்து வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதோதயம் மணிவிழா மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மதவடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை
ஸ்ரீ வாலாம்பிகை அம்பாள் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரதோதயம்

## மணிவிழா மலர்

**திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை**

[*SLPS - 1, Com.Trd, BA,*
*PGD.Edu, M.Ed(Merit)*]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- மணிவிழாக்குழு 1
- மலராசிரியரின் உள்ளத்திலிருந்து ..... 2
- விழா நாயகி பற்றி 3
- வண்ணை வடமேற்கு ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி 4
- அருளாசிச் செய்தி 5
- சின்மயா மிஷன் 6
- எனது ஜனனமும் பயணமும்.... 8
- கல்விச் சேவையாற்றிய சேவையாளர் 11
- ஓய்வு நிலை மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி 12
- அர்ப்பணிப்பான சேவையாளரை வாழ்த்துகின்றேன் 13
- முன்மாதிரியான சேவையாளர் 14
- ஓய்வைப் பயனுறக்கழிக்க வேண்டும் 15
- அன்பும் பண்பும் நிறைந்த மாணவி 16
- சாதனைப் பெண்ணே வாழ்க! 17
- மணிவிழா நாயகியே வாழி! வாழி! 18
- பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி 19
- கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி 20
- மூன்று தசாப்தகாலம் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர் 21
- பெண் அதிபர்களுக்கு உதாரணமானவர் அதிபர் வரதலட்சுமி 23
- பாடசாலைச் சூழலை வெற்றிகொண்ட அதிபர் 25
- அர்ப்பணிப்பு மிக்க சேவையாளர் 26
- ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளரின் உள்ளத்தில் இருந்து 27
- கல்விப்பணியே கடவுட் பணியாகக் கொண்டவர் 29
- மாணவர்களின் ஆளுமையை வளர்த்தவர் 30
- சகல துறை ஆளுமை கொண்ட அதிபர் 31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆளுமையும் ஆற்றலும் மிக்கவர் 33
- சேவை நலன் பாராட்டு 34
- அகில இலங்கை இந்து மாமன்றம் 35
- உளமார வாழ்த்துகின்றோம் 36
- "கல்வி சொல்ல வல்ல நல் வித்தகி" 37
- மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றேன் ! 39
- ஆளுமை மிக்க அதிபர் 40
- கல்விச் சேவையையே நோக்கமாகக் கொண்டவர் எங்கள் ஆசிரியர் 42
- இளைய தம்பிக்குக் கிடைத்த பொக்கிஷம் "வரதா" அம்மா 44
- ஆளுமையும் அர்ப்பண சிந்தனையும் மிக்க அதிபர் 46
- "உள்ளத் தனையது உயர்வு" 47
- இளையதம்பி இந்துவில் இனிய பதிவுகள்.... 49
- அவள் எனக்கோர் குழந்தை .... 51
- எமது பாடசாலை அதிபர் கதிரேசபிள்ளை வரதலட்சுமி அவர்களின் பணி நிறைவு வாழ்த்துரை 52
- அன்பின் சிகரமாய் உலாவரும் காரிகையே .... 53
- கலைத்தாய் 55
- நிறைவாழ்வு வாழ்க என வாழ்த்துகின்றோம் 56
- எமை வடித்த அதிபர் 57
- பாடசாலையின் தரமேம்பாட்டிற்கு அதிபரின் பங்களிப்பும், பொறுப்பும் 59
- ஆரம்ப பாடசாலை மட்டத்தில் பெற்றோரின் பங்களிப்பு 64
- இன்றைய பாடசாலைகளின் போக்கும் அவை பற்றிய விமர்சனங்களும் 68
- புகை என்னும் பகையை வெல்வோம் 71
- நன்றியுரை 73

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக்குழு

| | | |
|---|---|---|
| மணிவிழாகுழு தலைவர் | : | திருமதி.ச.சண்முகநாதன் (ஆசிரியர்) |
| உபதலைவர் | : | திருமதி.உ.பேரானந்தம் |
| | | (பழைய மாணவி, ஓய்வு நிலை ஆசிரியர்) |

**உறுப்பினர்கள்**

திரு.ந.கலாவர்ணன் (பழைய மாணவன்)

திரு.M.மணிமாறன் (பழைய மாணவன்)

R.அனுஷ்காந் (பழைய மாணவன்)

த.துளசிராம் (பழைய மாணவன்)

ரதீஸ்வரன் (பழைய மாணவன்)

திருமதி.S.சௌந்தலா (பழைய மாணவி)

திருமதி.ச.கீர்த்திசிங்கன் (பழைய மாணவி)

திருமதி.ச.நிவேதினி (செயலாளர்.பா.அ.ச)

திருமதி.கோ.சுபாசினி (பழைய மாணவி)

திருமதி.தி.கணேசமூர்த்தி ஆசிரியர் (யா/உயரப்புலம் மெ.மி.த.வி)

திருமதி.மா.சுரேஸ் அசிரியர் (யா/இளையதம்பி இந்து.வித்)

திருமதி.இ.புஸ்பராஜா ஆசிரியர் (யா/இந்து மகளிர் கல்லூரி)

திரு.வீ.ஜெயக்குமார் ஆசிரியர் (யா/இளையதம்பி இந்து.வித்)

திரு.லோ.விமலகாந்தன் ஆசிரியர் (யா/இளையதம்பி இந்து.வித்)

திரு.ந.மயூரன் அதிபர் (யா/புங்குடுதீவு றோ.க.த.க பாடசாலை)

திருமதி.ய.ஜெயக்குமார் ஆசிரியை (யா/திருநெல்வேலி றோ.க.த.க.பா)

திரு.P.சுபதீசன் - ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து .......

எமது வித்தியாலய அதிபர் திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள் தமது அறுபதாவது அகவையை பூர்த்தி செய்து மணிவிழா காணும் இவ் பொன்னான நாளில், அவருடைய ஒரு தசாப்தகாலஅதிபர் சேவையினையும், இரண்டு தசாப்தங்களிற்கு மேலான ஆசிரிய சேவையினையும் போற்றுவதற்காகவும் பாராட்டுவதற்காகவும், அவர் ஆற்றிய சேவைகளுக்கு மதிப்பளிப்பதற்கும் அவருடைய வாழ்க்கை தடங்களை நினைவு கூரவும் இந்நாளில் இம் மணிவிழாவினை எடுத்துள்ளோம்.

மதிப்பிற்குரிய அதிபர் அவர்கள் ஒரு பெண்ணாக இருந்தும் தம்மை முழு நேரமும் பாடசாலைக்காக தியாகம் செய்து மாணவர்களின் உயர்ச்சிக்காகவும், பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் அல்லும் பகலும் அயராது உழைத்துள்ளார் என்பது யாவரும் அறிந்த விடயம். இது பாராட்டப்படவும், போற்றப்படவும் வேண்டியதொன்றாகும்.

அந்த வகையில் நாம் **"வரதோதயம்"** எனும் மணிவிழா மலரினை காலத்தால் அழியாத கல்வெட்டாக வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

***"தோன்றிப் புகழொடு தோன்றுக அஃதிலார்***
***தோன்றலின் தோன்றாமை நன்று"***

என்பதற்கு ஏற்ப பணியாற்றி ஓய்வு பெறும் எம் அதிபர் அவர்கள் சேவை ஓய்வின் பின் சகல சௌபாக்கியங்களும் பெற்று தன்குடும்பத்தாருடன் நலமுடன் வாழ இறையாசியை வேண்டி நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம் மற்றும்
மணிவிழாக்குழு சார்பில்
***திருமதி. யசிந்தா ஜெயக்குமார்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி விழா நாயகி




திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை – இலங்கை அதிபர் சேவை தரம் – 1

*(SP.Trd.Com,BA,Dip in Edu.M.Ed Merit)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி விழா நாயகி ஆசிரிய குழாத்துடன்



## மாணவச் செல்வங்களுடன்
## மணி விழா நாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா நாயகி பற்றி

| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை |
| **தகைமை** | : | இலங்கை அதிபர் சேவை - தரம் I |
| | | Com.Trd, BA, PGD.Ed, M.Ed(merit) |
| **பிறப்பு** | : | 1959.04.26 |
| **பிறப்பிடம்** | : | 7ம் வட்டாரம், நயினாதீவு |
| **வதிவிடம்** | : | கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் |
| **தந்தையார்** | : | திரு.சி.நா.முத்தையா |
| **தாயார்** | : | திருமதி.மு.இலக்குமியம்மா |
| **கணவர்** | : | திரு.க.கதிரேசபிள்ளை (ஓய்வு நிலை உ.க.ப) |
| **பிள்ளைகள்** | : | (1) திரு.க.தர்ஸனன் (மருத்துவர்) |
| | | (2) திரு.க.கீர்த்தனன் (மென்பொருள் பொறியியலாளர்) |
| | | (3) செல்வி.க.பவந்தினி (மென்பொருள் பொறியியலாளர்) |
| **மருமக்கள்** | : | (1) திருமதி அபர்ணா தர்ஸனன் (மருத்துவர்) |
| | | (2) திருமதி.சியாமா கீர்த்தனன் (ஆசிரியர்) |
| **பேர்த்தி** | : | செல்வி த.சைதன்யா |
| **ஆரம்ப கல்வி** | : | யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட ம.வித்தியாலயம் |
| **இடைநிலைக் கல்வி** | : | யா/நயினாதீவு மகா வித்தியாலயம் |
| **உயர் நிலைக்கல்வி** | : | யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம் |
| **ஆசிரிய சேவை முதல் நியமனம்** | : | 17.08.1988 |
| **அதிபர் சேவை நியமனம்** | : | 01.07.2009 |

## சேவை விபரம்

| | | |
|---|---|---|
| 1. | யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட ம.வி (ஆசிரியர்) | **17.08.1988 - 26.01.1992** |
| 2. | யா/பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை (ஆசிரியப் பயிற்சி) | **27.01.1992 - 31.12.1993** |
| 3. | யா/மண்டைதீவு மகா வித்தியாலயம் (ஆசிரியர்) | **01.01.1994 - 15.01.1998** |
| 4. | யா/ வைத்தீஸ்வரா கல்லூரி (ஆசிரியர்) | **16.01.1998 - 30.06.2009** |
| 5. | யா/ இளையதம்பி இந்து வித்தியாலயம் (இலங்கை அதிபர் சேவை - அதிபர்) | **01.07.2009 - 25.04.2019** |
| | சேவையில் இருந்து இளைப்பாறல் : | **26.04.2019** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா நாயகி தனது நாயகருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி விழா நாயகியின் முதுகலைமாணிப் பட்டமளிப்பு
விழாவும் மகனாரின் மருத்துவமாணி பட்டமளிப்பு விழாவும்
ஒரே நாளில் நடைபெற்ற போது





மணி விழா நாயகியின் கல்விப் பின்
டிப்ளோமா பட்டமளிப்பின் போது



இரண்டாவது மகனாரின் பட்டமளிப்பு விழாவின் போது
மணி விழா நாயகி குடும்பத்தினருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வண்ணை வடமேற்கு ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி

மனித வாழ்வில் மாதா, பிதா, குரு, தெய்வம் நாம் வணங்கும் கடவுளர் என்றே எமது இந்துமதம் போற்றி நிற்கின்றது. அவ்வரிசையில், மனிதன் தன் பெற்றோருக்கு அடுத்த நிலையில் அறிவுக் கண்ணைத் திறக்கும் குருவை போற்றி வணங்குதல் வேண்டும்

**"குருர் பிரம்மா குருர் விஷ்ணு**
**குரு தேவா மகேஸ்வரஹா,**
**குரு ஷாஷாத் பரப்பிரம்மம்**
**தஸ்மை ஸ்ரீ குரவே நமஹ"**

எனும் வேத சுலோகமும் குருவை தெய்வ நிலையில் வைத்துப் போற்றுகின்றது. அவ்வகையில் இன்று எமது யாழ் மண்ணின் வண்ணார்பண்ணைக் கிராமத்தில் சிறப்புற்று விளங்கும் இந்துப் பாடசாலைகளில் ஒன்றான யாழ் இளையதம்பி இந்து வித்தியாலயத்தில், 2009 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அதிபராக விளங்கி பாடசாலையின் பல்வேறு கல்வி முன்னேற்றங்கள், அபிவிருத்திகளை மேற்கொண்டு மாணாக்கரையும், ஆசிரிய பெருந்தகைகளையும் நல்வழிப்படுத்தி, ஓர் கல்விச் சமுதாயத்தை வளர்த்துவிட்ட பெருமையை தாங்கி நிற்கின்றார் உங்கள் அதிபர், இன்றைய மணிவழா நாயகி திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள், இவரது கல்விச் சேவையின் பயணத்தில், யாழ் இளையதம்பி இந்துப் பாடசாலையின் பத்து ஆண்டுகளில், எண்ணிய பணிகளெல்லாம் திண்ணியமாய் முடிக்க வல்ல கண்ணியக் கலங்கரை விளக்கமாக விளங்கியுள்ளார் என்பதை நான் நன்கறிவேன். அதற்கு ஏற்ப, ஆசான் குழு இங்கு புண்ணியக் குன்றுகளாய் தொடர்ந்த அதிபர்களால் ஆளப்பட்டு வருவதும் கண்கூடு.

**"மன்னிய புகழ் பூத்த மாணாக்கப் பரம்பரை**
**பண்ணிய நல்லதிபர்கள் வரிசையில்**
**அம்மணியின் செம்மைச் செயல்கள் பல**

அம்மையாரது பணி அதிபர் சேவையுடன் முடிவுறாது, தொடர்ந்தும் எமது பாடசாலைக்கும், இங்கு கற்கும் மாணாக்கருக்கும் பல்வேறு வகையில் கிடைக்க வேண்டும் எனவும், அவரது ஓய்வுக் காலம் பயனுற அமைய அவர் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும் எனவும் வாழ்த்தி, ஆசி கூறி எல்லாம் வல்ல விசுவேச விநாயகரைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

நன்றி

*பிரம்மஸ்ரீ. க. பாஸ்கரக்குருக்கள்*
பிரதம சிவாச்சாரியார்
**வண் வடமேற்று ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலயம்,**
**வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

021 222 2870 ஸ்தாபிதம் : 1966 பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

03.04.2019.



## அருளாசிச் செய்தி

கல்விச் சேவை ஒரு சிறப்பான நல்ல சேவை. அத்தகைய கல்விச் சேவையை திறம்படச் செய்து அகவை அறுபதில் ஓய்வு பெறுகின்ற யாழ்.இளையதம்பி இந்து வித்தியாலய அதிபர் திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களது மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

தன்னலமற்ற அளப்பரிய சேவை செய்து மாணவ சமூகம் முன்னேற உதவிய அதிபர் அவர்கள் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து புனிதப் பிறவியான மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெற்றுச் சிறப்புற வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து எல்லாம் வல்ல நல்லூர் முருகனுடைய பொற்கமலத் திருவடிகளையும் வணங்கி வாழ்த்தி ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

எல்லோரும் வாழ வேண்டும் என்ற பரந்த நோக்குடன் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து கீர்த்தி பெற எமது நல்லாசிகள்உரித்தாகட்டும்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

***- ஆதீன குருமுதல்வர்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
CHINMAYA PRAGATI : NO.32, 10TH LANE, OFF SCHOFIELD PLACE, COLOMBO 03, SRI LANKA. TEL : + 94 11 259 1344
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org

சின்மயா மிஷன்,
இல 9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.
20.04.2019

"ஆச்சார்ய தேவா பவ"
- தைத்ரிய உபநிஷத் -

ஆசிரியரைத் தெய்வமாகப் போற்றுக

புனிதமான ஆசிரியரப் பணியை சுய விருப்புடன், அர்ப்பணிப்புடன் செய்யும் பொழுது அதற்கு நிகர் எதுவும் இல்லை. அவ்வாறு பணி புரிபவர்கள் நடமாடும் தெய்வங்களே.

இத்தகைய புனிதப் பணியில் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக சுய விருப்புடனும் அர்ப்பணிப்புடனும் பணி ஆற்றி வந்த திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அம்மா அவர்கள் நயினாதீவில் பிறந்து நாகபூஷணி அம்பாளின் அருட்கடாட்சம் பெறும் பாக்கியம் பெற்றவர். கடந்த பத்து ஆண்டுகளாக யாழ் இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் அர்ப்பணிப்பு, ஆளுமை கொண்ட அதிபராக பணியபற்றி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என அனைத்துத் தரப்பினரினதும் இதயங்களிலும் அழியா இடம் பிடித்துள்ளார்.

மாணவர்களிடையே உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏழை, பணக்காரன் என எந்தவித பாகுபாடும் காட்டாது அனைவரையும் அணைத்து கல்வி வளர்ச்சியில் மட்டுமல்லாது உடல், உள ஆரோக்கியத்திலும் அக்கறை காட்டி ஓர் சிறந்த ஆசிரியராக மட்டுமற்றி தாயாகவும் செயற்பட்டுள்ளார்.

இவ்வகையான அரிய பண்புகளைக் கொண்டவர்கள் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவது சுதந்திரமாக சமூக சேவையில் ஈடுபட வாய்ப்பளிக்கின்றது. எனவே அவர்கள் தமது அனுபவம், ஆளுமை, இயல்பாகவே அமைந்த அன்பு, ஆதரவு ஆகிய பண்புகளை தொடர்ந்தும் எமது இளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்கு வழங்கி நல்லதோர் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

அம்மா அவர்களும் அவரது கணவரும் இணைந்து தமது வானப்பிரஸ்த்த ஆச்சிரம காலத்தை அதற்கென விதிக்கப்பட்ட தர்மப்படி வாழ்ந்து, வாழ்வில் அடைய வேண்டிய இலக்கை அடைந்து இன்புற வேண்டுமென்று ஆசிவேண்டி எல்லாம் வல்ல இறைவனையும் புஜ்ய குரு தேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

**இறைபணியில்**
***சுவாமி. சிதாகாசானந்தா***
**சின்மயாமிஷன்,**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி விழா நாயகியின்
திருமண நாள் அன்று



குடும்பத்தவருடன்
மணி விழா நாயகி



மணி விழா நாயகியின்
திருமண நாள் அன்று



மணி விழா நாயகியின்
பெற்றோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது ஜனனமும் பயணமும்....

தீவகத்தின் முத்தான நயினை மண்ணில், எங்கள் பெற்றோர் நாகமுத்து முத்தையா, பெரியதம்பி இலக்குமியம்மா தம்பதியினரின் நற் தவத்தால் 26.04.1959 இல் அவதரித்து அவர் களின் சீராட்டினாலும், பாராட்டினாலும் வளர்ந்து வந்தேன் மூத்த சகோதரனுக்கு அடுத்த தலைம களாக இருந்து ஏனைய ஐந்து சகோதரங்களை யும் அரவணைத்து மகிழ்ந்திருந்தேன். எமது தந்தையாரின் கணக்குப்பிள்ளை தொழில் மூலமான சிறு வருமானத்தில் எங்கள் ஏழுபேரை யும் கல்வி கற்க வைத்த பெருமை எமது பெற்றோருக்கே உரியது. எமது கல்விச் சிறப்பி னால் அவர்கள் களிப்பெய்தி வாழ்ந்தனர்.

எனது ஆரம்பக் கல்வியை நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் நிறைவு செய்த பின்னர் இடைநிலைக்கல்வியை யா/நயினாதீவு மகா வித்தியாலயத்தில் பெற்று க.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறு பேற்றுடன் சித்தியடைந்தேன். அதன் பின் உயர் தரக் கல்வியினை யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் கற்கும் பெரும் பேறு எனக்குக் கிட்டியது. க.பொ.த (உ.த) பரீட்சை யில் 1977 இல் தேறிய பின்னர் சிறிது காலம் எனது சகோதரங்களின் கல்வி மேம்பாட்டில் எனது பெற்றோருடன் சேர்ந்து மகிழ்ந்திருந் தேன். இவ்வேளையில் 1980களில் யாழ்/ தொழில் நுட்பக் கல்லூரியில் வர்த்தக டிப்ளோமா கற்கையினை மேற்கொண்டு அதில் மூன்று ஆண்டுகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருந் தேன். இறுதியாண்டு பரீட்சைக்காக ஆயத்த மாகிக் கொண்டிருந்த நிலையில் எங்கள் தாயாரின் உடலில் புற்றுநோயின் தாக்கம் தென் படவே சிகிச்சைக்காக தந்தையார் மற்றும் உறவினருடன் கொழும்பு கொண்டு சென்று, மகரகம வைத்தியசாலையில் சிகிச்சைபெற ஆயத்தமானோம்.

இந்நாளில் எமது மூத்த சகோதரர் வெளிநாட் டுக் கப்பலில் செய்தியை உள்வாங்கி, அனுப்பும் அதிகாரியாக (Radio operator) பணியாற்றிக் கொண்டிருந்தார். அக்காலச் சூழலில் அவருட னான தொடர்பு அரிதாகவேயிருந்தது. தாயாரின் உடல்நிலை பற்றி அவர் அறிந்திருக்கவில்லை. எனக்கு அடுத்த சகோதரர் க.பொ.த (உ/த) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டார். அண்ணா மற்றும் தம்பியின் தொழில் நிலமை யினால் தந்தையாரின் குடும்பச்சுமை சற்றுக் குறைந்து காணப்பட்டது. எனினும் தனது தொழி லில் ஈடுபாடு கொண்டிருந்தார். இந்நிலையில் அம்மாவின் நோயின் தாக்கம் பற்றி அறிந்து நிலை குலைந்திருந்தார்.

இவ் வேளையில்தான் வைத்திய சிகிக்சைக் காக அம்மாவைக் கொழும்பு கொண்டு சென் றோம். வைத்திய சிகிச்சைக்காகக் கொழும்பில் தங்கியிருந்த போதுதான் 1983 இனக் கலவரம் தொடங்கியது. மகரகம வைத்தியசாலை செல்லும் வழியில் குண்டர்களினால் வழிமறிக்கப்பட் டோம். தாயாருக்கு அப்போது வயிற்றில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்ததினால் இரங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை விட்டு விட்டார்கள். என்றாலும் மகரகம வைத்தியசாலை செல்ல முடியவில்லை. மோட்டார் வாகன சாரதியினதும், நன்மனம் படைத்த சகோதர இன குடும்பத்தினரது ஆதரவினால் அகதிகள் முகாம் சென்றடைந்தோம். அதுவரை எமது நிலை பற்றி எவரும் அறிந்திருக்கவில்லை. எமது எண்ணம் யாவும் அம்மாவின் உடல் நிலையில் தான் இருந்தது. மிகவும் சந்தோஷமாகக் கதைத்துக் கொண்டிருந்தவர். 1983 ஆகஸ்ட் 2ம் திகதியன்று திடீரென ஏற்பட்ட வலிப்பினால் விண்ணுலகை அடைந்தார் எமக்கு என்ன செய்வதென்று தெரியாத நிலையில் இந்து சமய, கிறிஸ்தவ மத பெரியவர்களின் உதவியினால் அம்மாவின் உடலினை கனத்தையில் தகனம் செய்து கவலையுடன் இருக்கையில் கப்பலில் யாழ்ப்பாணம் திரும்ப ஏற்பாடாகியிருந்தது. புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில் அம்மாவின் "அஸ்தியை" அந்த இந்துமத பெரியவர் கொண்டுவந்து எம்மிடம் தந்தார். சோகத்தின் நடுவே இது எம் எல்லோருக்கும் சந்தோஷத்தைக் கொடுத்தது. அம்மாவை இழந்து தந்தையாருடனும், உறவினர்களுடனும் அம்மாவின் அஸ்தியை நயினாதீவு வீட்டுக்கு கொண்டு வந்தோம். தாயாரின் இறப்பின் பின் எமது குடும்பம் நீண்ட காலம் சோபை இழந்து தான் இருந்தது. அண்ணாவைக் கண்டு பல நாட்கள் ஆகிவிட்டன.

நாட்கள் பல கடந்த நிலையில் 1985இல் எமது திருமணம் ஏற்பாடாயிற்று. எமது குடும்ப உறவில் ஆறுமுகம் கதிரித்தம்பி, கதிரேசு யோகம்மா தம்பதிகளின் தவப்பேற்றில் அவதரித்த ஆசிரியர் கதிரேசபிள்ளை அவர்களை அன்புக் கணவராய் கரம்பிடித்தேன். அதன் பின் எமது குல தெய்வம் செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகரதும், நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மனதும் திருவருளினால் 1986, 1989, 1995ம் ஆண்டுகளில் முறையே புதல்வர்கள் இருவரும் அதன்பின் புதல்வியும் நல்மக்களாய் பிறந்தனர்.

1988ல் ஆசிரியராய் நியமனம் பெற்று நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட்ட மகா வித்தியாலயத்தில் எனது பணியினை ஆரம்பித்தேன். அதன் பின் 1992/93 காலப்பகுதியில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரிய பயிற்சி பெற்று அதன்பின் 1994ல் யா/ மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் பணியினைத் தொடர்ந்தேன்.

அப்போது தீவகப் பாடசாலைகள் போர்க் காலச் சூழலில் இடம்பெயர்ந்து யாழ் நகரத்தில் இயங்கிக் கொண்டிருந்தன. 1995இறுதிப் பகுதியில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் நாங்கள் உயிரைப் பணயம் வைத்து எமது 6மாதக் குழந்தை மகளுடனும், ஏனைய குடும்பத்தவர்களுடனும் தென்மராட்சிப் பகுதிக்குச் சென்று பாதுகாப்பின்றி வாழ்ந்திருந்தோம். தந்தையாரின் உடல் நலம் குறையவே அவரை அனுமதி பெற்று கொழும்பில் கொண்டு சென்று சகோதரருடன் விட்டு விட்டு வந்தோம். ஒரு சில மாதங்களில் தந்தையாரும் எம்மை விட்டுப் பிரிந்து இறைபதமடைந்தார். மரணச் சடங்கில் கூட கலந்து கொள்ள முடியாது கலங்கி நின்றோம். சமகாலத்தில் (1996) மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி வர வழி ஏற்படவே யாழ் நகர் வந்து சேர்ந்தோம். மண்டைதீவு மகா வித்தியாலயம் தனது சொந்த இடத்தில் ஆரம்பித்து நடைபெறவே நாம் தினமும் சைக்கிளில் மண்டைதீவு சென்று வந்தோம். இதனால் உடல் நிலையில் தாக்கம் ஏற்படத் தொடங்கியது. இதனை அறிந்து கொண்ட அந்நாள் கல்விப் பணிப்பாளர் அமரர் இரட்ராஜா அவர்கள் எனக்கு யா/வைத்தீஸ்வரா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் வழங்கி உதவினார். அதனை என்னால் எளிதில் மறந்து விட முடியாது. திரு.சந்தோஷம் அதிபர் மற்றும் திரு.வன்னியசிங்கம் அதிபர் அவர்களின் நிர்வாக கட்டமைப்பின் கீழ் பணியாற்றியமை எனக்குப் பல அனுபவங்களை தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனிடையே அதிபர் நியமனப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நியமனம் வழங்கப் பட்டதன் அடிப்படையில் யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் அதிபராக 2009 முதல் நியமிக்கப்பட்டேன் பல தடைகளின் மத்தியில் இப்பாடசாலையில் கலைத்திட்ட மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை என்னால் முடிந்தவரை முன்னெடுத்து, ஆசிரியர்களினது அர்ப்பணிப்புடன் மாணவர்களின் கல்வி மேம் பாட்டினைச் செய்யக்கூடியதாகவிருந்தது.

அக்கால கட்டத்தில் எமது மூத்த புதல்வர் தர்ஸனன் அவர்கள் மருத்துவராகி அபர்ணா (மருத்துவர்) அவர்களைக் கரம்பிடித்து சைதன்யா என்னும் நல் பேர்த்தியைப் பெற்றுத் தந்துள்ளார் கள். இளைய புதல்வர் கீர்த்தனன் அவர்கள் மென்பொருள் பொறியியலாளராகி சியாமா (ஆசிரியை) அவர்களை திருமணம் செய்து கனடாவில் வாழ்ந்து வருகின்றார்கள். இளைய புதல்வி பவந்தினி அவர்களும் மென்பொருள் பொறியியலாளராகி தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள் பிள்ளைகளால் நாம் பெருமை பெற்றுள்ளோம் எனலாம்

நிறைவாக பல சாதனைகளை எமது பாடசாலை செய்வதற்குக் காரணமாகவிருந்த ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் கல்விப் புலம் சார்ந்த திணைக்கள அதிகாரிகள், சமயத் தொண்டு அமைப்புக்கள், கல்விச் செயற்பாடு களுக்கான அனுசரணை வழங்கிய அமைப்புக் கள் யாவருக்கும் எனது இதயபூர்வமான நன்றி யினை எனது மணிவிழா நாளில் வழங்குவதில் பெருமகிழ்வடைந்து, உங்களை வாழ்த்தி வணங்கிப் பணிகின்றேன்.

***திருமதி. வரதலட்சுமி கதிரேசபிள்ளை***
**அதிபர் (2009 - 2019),**
**யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விச் சேவையாற்றிய சேவையாளர்.

யா/இளையதம்பி இந்து வித்தியாலத்தில் அதிபராக கடமையாற்றி தனது அறுபதாவது அகவையில் ஓய்வுபெறவிருக்கும் திருமதி.வரதலெட்சுமி கதிரேசபிள்ளை அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள் 17.08.1988 ஆம் ஆண்டு முதல் நியமனம் பெற்று யா/நயினாதீவு ஸ்ரீகணேச கனிஸ்ட மகா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை முன்னெடுத்தார். தன் அயராத முயற்சியால் 2009 ஆம் ஆண்டு அதிபராக பதவியுயர்வு பெற்று அரச சேவையில் 31 வருடங்கள் தன் கல்விப் பணியை செவ்வனே ஆற்றியுள்ளார்.

பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும் என்ற பாரதியின் கவிகளுக் கமைய கல்வியுடன் சேர்த்து ஒழுக்கத்தையும் மாணவர்களுக்கு கற்றுக்கொடுத்து மாணவர்களை நல்வழிப்படுத்தி அவர்கள் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக வாழ்வதற்கு வழிகாட்டியாக இருந்துள் ளார். இவர் தனது கடின உழைப்பினாலும் விடாமுயற்சியினாலும் வாழ்க்கையில் உயர்ந்தவர். பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டுள்ளார். பௌதீக கட்டமைப்பு மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்கு தன்னாலான பெரும்பணியை ஆற்றி தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெறுகின்றார்.

கல்விச் சமூகத்திற்கு அளப்பெரிய பணியினை ஆற்றியதுடன் இவர் தனது கடமைக்காலத்தில் சமூகம் சார் பணிகளில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு மாணவர்களினதும் சமூகத்தினதும் முன்னேற்றத்தில் பங்கேற்றமையினை பாராட்டுவதோடு இவர் தனது ஓய்வுகாலத்தில் பல சமூக, சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம்வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப்பிராத்திக்கின்றேன்.

*சி.சத்தியசீலன்*
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓய்வு நிலை மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள் கல்விச்சேவையில் ஆசிரியராக, அதிபராக நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெறும் இந்நாளில் இவரை வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகிறேன். நயினாதீவு ஸ்ரீ கணேச வித்தியாசாலையில் ஆரம்பித்த இவரது கல்விச் சேவை அகவை அறுபதில் யா/இளையதம்பி இந்து வித்தியாசாலையில் அதிபராக உயர்வு பெற்று ஓய்வு பெற இறையருள் கைகூடியுள்ளது.

அமைதியான சுபாவமுள்ள இவர் பயிற்றப்பட்ட வர்த்தக ஆசிரியராக பணியை ஆரம்பித்து முது கல்விமாணிப்பட்டத்தை தனது முயற்சியால் பெற்றுள்ளார். அதிபர் தரம் 1 பதவி உயர்வு கிடைத்த போதும் தனக்கு வழங்கப்பட்ட சிறிய பாடசாலையில் பிள்ளைகளின் விருத்தியில் கரிசனையோடு அர்ப்பணிப்பான சேவையை நிறைவு செய்துள்ளார்.

இவர் ஓய்வு காலத்தில் நோய் நொடியின்றி தனது குடும்பத்தினருடன் சந்தோஷமாக வாழ எல்லாம் வல்ல நாகபூஷணி அம்பிகையின் திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

*திரு. ப. விக்னேஸ்வரன்*
ஓய்வு நிலை வட மாகாணக்கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்ப்பணிப்பான சேவையாளரை வாழ்த்துகின்றேன்

கடந்த 31 வருடங்களாக கல்வித்துறையில் நிறைவான சேவையை ஆற்றி மணிவிழாக் காணும் திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

உயர்வான கல்வித் தகைமையும் கல்விப்பின்புலத்தையும் கொண்ட அவரின் தன்னலமற்ற சேவை மாணவர்கட்கு கிடைத்த பெரும்பேறாகும். இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் 10 வருடங்களாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர். தனது பாடசாலைக்கான தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றுவதில் மிகுந்த ஆர்வமுடையவர். தனது ஆசிரியர் குழாத்தை அரவணைத்து அவர்கள் முழுமையான சேவையைப் பெற்ற முகாமையாளராக திகழ்ந்தார். அத்தோடு மாணவரின் கல்வி, இணைபாடவிதான விருத்தியில் அக்கறையுடன் செயற்பட்டு அவர்களின் அன்பைப் பெற்றார். பாடசாலைச் சமூகத்துடன் இடர்பாடுகளுக்கு மத்தியிலும் இணைந்து செயற்பட்டவர்.

கல்வித்திணைக்களத்துடன் உயர்வான நல்லுறவுகளைப் பேணி உத்தியோகத்தர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஓர் அதிபராவார். தனது சேவைக்காலத்திலேயே அதிபர் பதவியின் தரம் 1 ஐப் பெற்றவர்.

அவரது நேர்மையும், பணிவும், தன்னடக்கமும், குடும்பத்தலைவிக்குரிய பண்புகளும் அவர்தம் பிள்ளைகளை உயர் பதவியிலும், தகுதியிலும் வைத்திருக்கிறது என்றால் அது மிகையில்லை. தனது கணவர், பிள்ளைகள், மருமக்கள் உயர்கல்வித் தகைமைகளைக் கொண்டிருப்பதையிட்டு அவர் பெருமைப்பட முடியும்.

அவரது தன்னலமற்ற அர்ப்பணிப்பான சேவை அவரையும், குடும்பத்தையும் என்றும் வாழவைக்கும். அவரது ஓய்வுக்காலம் சிறக்க இறைவனைப் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் இதய சுத்தியுடன் தெரிவிக்கின்றேன்.

*ந. தெய்வேந்திரராஜா*
**ஓய்வுபெற்ற**
**வலயக்கல்விப் பணிப்பாளர்**
**யாழ் கல்வி வலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்மாதிரியான சேவையாளர்

நயினாதீவைச் சேர்ந்த எமது பேரன்புக்குரிய சகோதரி அதிபர் திருமதி கதிரேசபிள்ளை வரதலட்சுமி sp.com.Trd, B.A, PGD.Ed, M.Ed, அவர்களின் அறுபதாவது அகவையினைச் சிறப்பிக்குமுகமாக வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

மிகவும் கண்ணியமான குடும்பத்தில் பிறந்த இவர், சுமார் முப்பது ஆண்டுகளாக கல்விப் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து அரும்பணியாற்றிய சிறப்புக்குரியவர். யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் கடந்த பத்து ஆண்டுகளாக ஆளுமை மிக்க அதிபராகப் பலரும் பாராட்டத்தக்க விதத்தில் பணியாற்றிப் பணி நிறைவு பெற்ற பெருமைக்குரியவர். கண்ணியம்மிக்க கல்விமானைக் கணவராகப் பெற்றவர். பாடசாலையை வளர்த்தெடுப்பதில் அல்லும் பகலும் அயராது உழைத்தவர். இவர் தனது அறுபது வயதையும் வெறுமனே கழித்தவரல்லர். வாழ்க்கையில் வென்று வெற்றி வாகை பெற்ற பெறுமதி மிக்கவர்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து கல்வி ஒழுக்கத்தில் சிறந்த பல ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய சிறப்பும் இவருக்குண்டு.

இவர் மென்மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து இன்னும் பல சமய சமூகப் பணிகளை ஆற்ற எங்கள் குல தெய்வம் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் துணைபுரிய வேண்டுவதுடன், மணி விழா நாயகியை மீண்டும் "வாழ்க வளமுடன்", என வாழ்த்துகின்றேன்.

***டாக்டர். மா. வேதநாதன், Ph.D,***
மேனாள் தலைவர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
மேனாள் பேராசிரியர் & தலைவர்,
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வைப் பயனுறக்கழிக்க வேண்டும்

நயினை ஒரு சின்னஞ்சிறிய தீவு. அங்கு எம்பிராட்டி நாகபூஷணி கோயில் கொண்டு அருள் பாலிக்கின்றாள். அவ்வூர் மக்கள் அவள் அருட்காவலில் இன்புற்று வாழ்கிறார்கள். எளிய, இனிய சுபாவம் கொண்டவர்கள் விருந்தோம்புவதில் ஈடிணையற்றவரர்கள். சிவநெறியின் மீதும் தமிழ் மொழியின் மீதும் அளவற்ற பற்றுடையவர்கள். நாகமணிப் புலவர் தொடக்கம் தொடர்ந்து வரும் ஒரு புலமைப் பாரம்பரியம் நயினையில் உண்டு.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நான் ஆசிரியப் பயிற்சி பெற்ற காலத்தில், நயினாதீவிலிருந்து பெரும் எண்ணிக்கையில் வணிகத்துறையில் பயிற்சிபெற இளம் ஆசிரியர்கள் வருவார்கள் யாரோ மூத்தவர்கள் நல்ல வழிகாட்டல் செய்கின்றனர் என்று ஊகித்துக் கொள்வேன்.

இந்த மரபு தவறாமல் 1992 இல், ஆசிரியப் பயிற்சி பெற, பலாலிக்கு வந்து சேர்ந்தவர்கள் தான் வரதலட்சுமி கதிரேசபிள்ளை, போரினால் எங்கள் கலாசாலையே இடம் பெயர்ந்து அல்லாடிக் கொண்டிருந்தகாலம். ஆனால் சவால்களுக்கு முகம் கொடுத்து விரிவுரையாளர்கள் தம்மாலானதனைத்தையும் செய்தனர். வரதலட்சுமி வர்த்தகத்தில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியை ஆனார். கணவர் கதிரேசபிள்ளையை நான் முன்பே அறிவேன். போலவலானையில் ஆங்கில ஆசிரியராகப் பயிற்சி பெற்ற அவர் சில காலம் என்னிடமும் கற்றவர். இத் தம்பதியின் கல்விப்பணி போற்றற்குரியது.

ஓய்வு என்பது செயலற்றிருப்பது என்று அர்த்தமாகாது. ஓய்வின்பின் பொதுப்பணிக்குத்தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணித்த பலர் நம்மிடையே வாழ்கின்றனர். அந்த வரிசையில் வரதலட்சுமி சேர்ந்து கொள்வாராக இருந்தால் சமூகம் பயன்பெறும். அவர் வழிபடும் அன்னை நாகபூஷணி அவருக்கு உடனலத்தையும் நீடித்த ஆயுளையும் அருளுவாளாக !

*திரு. சோ. பத்மநாதன்*
**ஓய்வுநிலை அதிபர்**
**பலாலி ஆசிரியர் கலாசாலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பும் பண்பும் நிறைந்த மாணவி

அன்பும் பண்பும் நிறைந்த மாணவி நயினை நாகபூசணி அம்பாள் கடாட்சம் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர் திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை பண்புமிகு கூட்டுக் குடும்பத்தில் பிறந்த சோதரி எளிமை நிறைந்த நல்வாழ்வு முறையை இளமையிலேயே தன் பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொண்டவர் மூத்த சகோதரர்களின் வழிகாட்டலில் தன் ஆரம்ப, இடைநிலைக் கல்வியை பெருமை மிகு நயினை மகா வித்தியாலயத்தில் கற்றுக் கொண்டார். நயினை மக்களின் உயர் இலட்சியம் கல்வியில் கரை காண்பதும் ஒழுக்கத்தில் உயர்வடைவதும் இவ்விரண்டு இலக்கையும் சகோதரி தன் வாழ்வில் பெற்றுச் சிறப்படைந்துள்ளார். இவற்றுக்கு அவரின் கடவுள் வழிபாடே தோன்றாத் துணையாக அமைந்துள்ளது எனலாம்.

சகோதரி அவர்கள் உயர்தரக் கல்வியை யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் கற்றுத்தேறி, ஆசிரியப் பணியை விரும்பி ஏற்று நற்பணியாற்றியவர். ஆசிரியப் பயிற்சிக்காக பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் 1992இல் இணைந்து கொண்டார். கலாசாலையில் காலடி வைத்தது முதல் இரண்டு வருடப் பயிற்சி நிறைவு வரை அதிபர், விரிவுரையாளர்களின் நம்பிக்கைக்கும் அபிமானத்திற்குமுரிய மாணவியாகத் திகழ்ந்தவர் சகோதரியுடன் அன்று தொடங்கிய சகோதர உறவு இன்று வரை நீடித்ததில் பெருமையடைகிறேன். அவரது அன்புக் கணவர், பிள்ளைகள், சகோதரர்கள் யாவரும் எங்கள் குடும்ப நிகழ்வுகளில் முதன்மை வகிப்பதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

சகோதரி அவர்கள் ஆசிரியப் பணியில் கடமையுணர்வோடு செயற்பட்டு, அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று, யா/இளையதம்பி வித்தியாலயத்தில் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர். கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக சிறப்புப் பணியாற்றியுள்ளார். நெருக்கடியான நாட்டுச் சூழ்நிலையிலும் ஏழைச் சிறார்களின் கல்விக்காக அர்ப்பணிப்பான பணியாற்றி, ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்பவர். இன்று இளையதம்பி வித்தியாலய சமூகமே திரண்டு அதிபரின் கடவுட் பணிக்காக நன்றி செலுத்தும் விழா எடுத்து மகிழ்கின்றனர். அவர் ஆற்றிய தன்னலமற்ற நற்பணி அவரது பிள்ளைகள் உயர்கல்வி பெற்று சிறப்பான வாழ்க்கை வாழ வழிவகுத்துள்ளது. அன்பும் பண்பும் நிறைந்த அதிபரை வாழ்த்தி அமைகிறேன்.

நன்றி

***ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி***
**அன்பு ஆசான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதனைப் பெண்ணே வாழ்க!

அதிர்ந்திடா அமைதிப் பேச்சு அழகிய வதனம் தன்னில்
மறைந்திடா நகைப் பூங்கொத்து மனதினில்
இரக்கம் அன்பு பிரிவிலாத்தூய எண்ணம்
பிறர் நலம் பேணும் பாங்கு அனைத்துமே ஒருங்கே பெற்ற
அரிவையள் நயினை தந்த சிறப்புறு குணத்தாள்
என்றும் சீர்மை பெற்றுயர் வரதா!

அறிவுசால் கதிரேசரின் அன்புடை மனையாளாகி
பெற்ற தம் மக்கள் பேர் சொல்ல உயர்த்தி வைத்து
கொண்ட தன்பணிச் சிறப்பால் குடும்பமாய் கல்விச்சாலை
நின்றுயர்வடைந்து ஓங்கி நிமிர்ந்திட வழிசமைத்தாய்
பெற்ற உம் மக்கள் போல பேணியே சிறார்கள் தம்மை
உற்றிடு ஒழுக்கம் கல்வி உணர்வினை ஊட்டி நின்றாய்

பட்டங்கள் பலவும் பெற்று பதவிக்கு அழகு சேர்த்தாய்
உற்றிடு அதிபர் சேவை உன்னால் உயர்வு காண
நற்பணி பலதுமாற்றி நலனோங்கச் சேவை செய்தாய்
சாதனைப் பெண்ணாய் ஆகித்தகவுறு சிறப்புக்கண்டாய்
ஓய்வினில் நிறைவாய் வாழ்ந்து உச்சங்கள் தொட்டு ஓங்க
தாயவள் நயினை அம்பாள் தாள் பணிந்தேத்துகின்றோம்.

***திரு. இ. மருதலிங்கம்***
**ஓய்வுநிலை விரிவுரையாளர்**
**பலாலி கோப்பாய் ஆசிரிய கலாசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**

**SRI NAGAPOOSHANI AMMAN KOVIL**

Regd.No / பதிவு இல: HA/5/JA/567

தொலைபேசி / Telephone — யாழ்ப்பாணம் / Jaffna 070-213024

நயினாதீவு
NAINATHIVU
SRI LANKA

# மணிவிழா நாயகியே வாழி! வாழி!

ஆசிரிய சேவையின் மகத்துவத்தை அளவு கோல் கொண்டு அளவிட முடியாது. அதி உயர் பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கும் ஆரம்ப ஆசிரியர் ஒருவர் இருந்தே இருப்பார். அந்த வகையில் பெருமை மிக்க கல்விப் பணியில் 21 வருடங்கள் நல் ஆசிரியராகவும் 10 வருடங்கள் நல் அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் பிறப்பிலிருந்து எமது இரத்த உறவினராக இருந்தது மாத்திரமல்லாது அந்த உறவைப் பலப்படுத்த எமது மதிப்பிற்குரிய உறவினரான திரு.கதிரேசபிள்ளை சித்தப்பாவை திருமணம் செய்ததால் பெருமை பெற்றார். மேலும் எமது மதிப்பிற்கும், பாசத்திற்கும் உரியவரானார். இந்த உறவும், பற்றும் இன்றுபோல் என்றும் நிலைத்து நிற்க வேண்டும்.

மணிவிழா நாயகி அவர்கள் சமய, சமூக பணிகளிலும் அதிக ஈடுபாடு உடையவர். கல்விப் புலத்தில் அரும்பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி.வரதலட்சுமி அவர்கள் எமக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருந்து பல்லாண்டுகள் வாழ வேண்டும் என்று அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

*ஆ.தியாகராசா*

**தலைவர்**

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**

**ஓய்வு நிலை உதவி அரச அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/ இளையதம்பி இந்து வித்தியாலய அதிபர் திருமதி.வரதலட்சுமி கதிரேசப்பிள்ளை அவர்கள ஓய்வு பெறுவதையிட்டு வெளியிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குதில் மகிழ்வடைகின்றேன்.

ஒரு மனிதனின் வாழ்க்கைப் பயணத்தில் ஒரு மைல்கல் மணிவிழாவாகும் . ஒரு மனித வாழ்வின் அறுபது வருட காலப்பகுதியில் ஒருவரது சாதனை, சேவை போன்றவற்றை எடைபோடும் சந்தர்ப்பத்தை மணிவிழா உருவாக்குகின்றது. அந்த வகையில் தனித்துவமான தகைமைகள் பல கொண்டு யா/இளைய தம்பி இந்து வித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றி தமது சேவைக் காலத்தை வெற்றிகரமாக செயற்படுத்தி பாடசாலைக்கு நலன்களை சேர்த்தமைக்காக சேவை நலனை போற்றி பாராட்டுகின்றேன்.

ஓய்வு என்பது அரச தொழிலுக்கானதன்றி, வாழ்க்கைக்கானதல்ல எனவே சேவைக்காலத்தில் தம்மால் பெற்றுக் கொண்ட அனுபவ அறிவு, ஆற்றல்களை காலத்தின் தேவைகருதிப் பங்களிப்புச் செய்ய வேண்டும். இது இன்றைய காலகட்டத்தில் மாணவர்களின் தேவை கருதிய ஒன்றாகும்.

அதிபர் அவர்கள் பாடசாலை சமூகத்தினதும் மாணவர்களினதும் முன்னேற்றத்தில் பங்கேற்றமையை பாராட்டு வதோடு, இவர் தனது ஓய்வுக்காலத்தில் பல சமூக, சமய, கல்விசார் பணிகளை மேற்கொள்வதுடன் கல்வித் துறையின் முன்னேற்றத்திற்கு தொடர்ந்தும் பங்பளிப்புச் செய்ய வேண்டுமென்று கேட்டு, தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும் வாழ எல்லாம் வல்ல இறைவனினருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

***திரு.தங்கவேலு பாலராஜ்***
**பிரதி கல்விப் பணிப்பாளர் - கல்வி அபிவிருத்தி**
**யாழ்ப்பாண கல்வி வலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைப் பதிவுகளிற் சில









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

மணி விழா நாயகி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கட்கு வாழ்த்துரைப்பதில் மகிழ்வுறுகின்றேன். கல்விப் பணியிலே 31 அகவைகளை நிறைவு செய்து பணிவோய்வு பெறும் அம்மணி அவர்கள் , ஒரு தசாப்த காலமாக யாழ். வண்ணை. இளையதம்பி இந்து வித்தியாலயத்திலே அதிபராக அரும்பணியாற்றியவர்

இலங்கை அதிபர் சேவை தரம்- 1 ஐ சேர்ந்த இவர் அர்ப்பணிப்புமிகு சேவையாலும், அன்பான அணுகுமுறைகளாலும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், சமுகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர். இவரது சேவைக்காலத்தில் இவ்வித்தியாலயம் அடைவுகளிலும், வளவிருத்தியிலும் பெரும் முன்னேற்றம் கண்டது. கல்விப் புலமையிலும், தொழில்சார் வாண்மையிலும் உயரிய பட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள மணிவிழா நாயகி அவர்கள் சக அதிபர்களுக்கும், ஆசிரியர்கட்கும் சிறந்த முன்னுதாரணமாகும்.

தொண்மையும், சைவப் பாரம்பரியமுமிக்க யாழ்.இளையதம்பி இந்து வித்தியாலயம் யாழ்.இந்துக் கல்லூரியின் சகோதரப் பாடசாலைகளினொன்றாகும். இப்பாரம்பரியத்தை இன்றளவும் சிறப்புறப் பேணுவதிலேய அதிபர் வரதலட்சுமி அவர்களின் பங்களிப்பு கணிசமானது. இவரது சேவையும், சகோதர மனப்பாங்கும் நல்லூர் கல்விக் கோட்டத்திற்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதமாகும். எனவே என் நன்றிதனை இத் தருணத்தில் நயக்கின்றேன். பணிவோய்வு பெற்றாலும் சமுகப்பிரக்ஞைமிகு இவர்பணி சமூகத்தில் வியாபிக்க ஆசிக்கின்றேன். அவரும், அவர் குடும்பத்தினரும் இறையருளில் நலமுடன் வளமுடன் நீடு வாழ வாழ்த்துகின்றேன்.

***திரு.எப்.எக்ஸ்.அன்ரன்***
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்**
**நல்லூர் கல்விக் கோட்டம்,**
**யாழ்ப்பாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூன்று தசாப்தகாலம் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்

யாழ்ப்பாணம் இளைய தம்பி இந்து வித்தியாலயத்தில் 10 ஆணடுகள் அதிபர் பதவிக்கு பெருமை சேர்த்த திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள் 26.04.2019 அரச பணியில் இருந்து ஓய்வு பெறுவதையிட்டு வெளியிடப்படவுள்ள மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கல்விக் களத்தில் தான் கற்ற பாடசாலையிலேயே ஆசிரிய நியமனத்தைப் பெற்று 31 ஆண்டு கள் பல்வேறு கல்வி, தொழில் தகைமைகளை வளர்த்து இலங்கை அதிபர் சேவையில் தரம் 1 இனை பெற்று அதிபர் பதவிக்கு பெருமை சேர்த்தமை பாராட்டுவதற்கும் வாழ்த்துவதற்கும் உரியது.

எந்தவிதமான ஆரவாரமோ ஆர்ப்பாட்டமோ எதுவும் இல்லாமல் தனது கடமையை மிக நேர்த்தியாக, கண்ணியமாக ஆற்றிய பெருமை இவருக்கு உண்டு. தாம் பிறந்த நயினை மண்ணில் ஆரம்பக்கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் பெற்று அங்கேயே ஆசிரியப் பணியைப் பொறுப்பேற்று 03 தசாப்தங்கள் சமூகத்திற்காக அர்ப்பணிப்போடு பணியாற்றி 10 வருடங்கள் அதிபர் பதவிக்குப் பெருமை கொடுத்துப் பணியாற்றியுள்ளார்.

பிரபல்யமான பாடசாலைகளின் சூழலுக்குள் உள்வாங்கப்படாது அனுமதி மறுக்கப்பட்ட சாதாரண ஏழை மாணவர்களின் கல்விக் கண்ணைத்திறந்து இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் அதிபர் பணியை சவாலாக ஏற்று அர்ப்பணிப்போடு பணியாற்றியமையினால் உங்களின் அதி உன்னத தியாகத்தின் வெளிப் பாட்டை கல்வி உலகிற்குத் தெரியப்படுத்தியுள்ளீர்கள். எங்கு நல்ல கதிரை கிடைக்கிறது என்று அல்லாடும் சூழலில் உங்களுடைய பணி போற்றுதற்குரியது.

உங்களுடைய பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய கலைத்திட்ட, இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளை முழுமையாக முன்னெடுத்தமையை நான் நன்கு அறிவேன்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் இந்து வித்தியாலய மாணவர்களின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளை சிறப்பாக நடத்தியமை உங்களின் ஆளுமை மிக்க, ஆற்றல் மிக்க, துணிச்சல் மிக்க சிந்தனையின் செயற்பாடாக நான் பார்த்து வியந்ததுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் தலைமைத்துவ, முகாமைத்துவ, நிருவாக செயற்பாடுகளை பல தடவைகள் கடமை நேரத்தரிசிப்பின் போது உணர்ந்து கொண்டேன். உங்கள் வித்தியாலய ஆசிரியர் கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஒரே குடும்பமாக இணைந்து பணியாற்றியமை நல்ல ஒரு முன்னுதாரணமாகும்.

பல்வேறு மட்டுப்பாடுகளும், வசதிகளும், வாய்ப்புகளும் தடைகளாக இருந்த போதிலும் உங்கள் பாடசாலையை ஒரு அழகான பூஞ் சோலையாக மாற்றியிருக்கிறீர்கள். எல்லோரும் மகிழ்ச்சியாகக் கற்ற, கற்பித்த சூழல் மன நிறைவு தரும். "சிறியது, அழகானது" என்ற கூற்றுக்கு உங்கள் பாடசாலை மிக நல்ல அடை யாளம் ஆகும்.

உங்களுடன் பணியாற்றியவர்களுக்கும், உங்களின் மாணவர்களுக்கும் ஆசிரியராக, அதிபராக, நல்ல வழிகாட்டியாக, பின்பற்றத் தக்க மாதிரியாக, எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு தாயாக நீங்கள் காட்டிய அர்ப்பணிப்பு மிக்க ஆதரவு காலத்தினால் பதிவு செய்யப்படும். கல்விப் பணியைக் கடவுள் பணியாகக் குறிப்பிடுவர். அதனை நீங்கள் மிக உன்னத மாக நிறைவேற்றியுள்ளீர்கள். அந்த மனநிறை வோடு ஓய்வு பெறுகிறீர்கள் என நம்புகின்றேன்.

ஓய்வு பெறும் அதிபர் வரதலட்சுமி அவர்கள் எனது மிக நெருங்கிய குடும்ப நண்பர் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கதிரித்தம்பி கதிரேசபிள்ளை அவர்களின் துணைவி ஆவார். நாங்கள் இருவரும் வேலணை மத்திய கல்லூரியில் 1970வது களில் ஒன்றாகக் கல்வி கற்றபின்னர் 1990களில் நான் வேலணை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றியபோது நண்பர் கதிரேசபிள்ளையை மிக நீண்ட காலத்தின் பின்னர் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. தொடர்ந்து தீவக கல்வி வலயத்திலும் ஒன்றாகப் பணியாற்றினோம். அக்காலம் துன்பங்களுக்குள்ளும் மனமகிழ்வைத் தந்தது.

இவர்களது குடும்பம் ஒரு கல்விக்குடும்பம். இப்போதும் கல்விச் செயற்பாடுகளில் இணைந் திருப்பது மகிழ்ச்சிக்குரியது. இவர்களது ஓய்வு காலம் சிறப்பாகவும், வளமாகவும், மகிழ்வாக வும் அமைய எல்லாம் வல்ல நயினை நாக பூஷணித்தாயின் பாதார விந்தங்களைப் பணிந்து எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

***பொன்னம்பலம் அருணகிரிநாதன்***
**ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் அதிபர்களுக்கு உதாரணமானவர் அதிபர் வரதலட்சுமி

திருமதி வரதவட்சுமி கதிரேசபிள்ளை அதிபர் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அதிபர் அவர்கள் என் நீண்ட கால நண்பர். அவர் கடமையாற்றிய பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் தன் திறமைகளை வெளிப்படுத்திய சிறப்புக்குரியவர்

நயினை அம்மனின் மண்ணில் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்கும் உயர்பண்பும் திறமையும் இவரிடமும் கண்டு மகிழ்ந்திருக்கின்றேன். யா/இளையதம்பி வித்தியாலயத்தின் அதிபராக பொறுப்பேற்ற காலத்தில் இருந்து இன்றுவரை அந்தப் பாடசாலையினை கல்வி, மற்றும் பௌதீக வளரீதியாக வளர்ப்பதற்கு அவர்பட்ட கஸ்ரங்கள், மன உலைச்சல்கள் வேறு எந்தவொரு பெண் அதிபராலும் நின்று பிடிக்கமுடியாது. ஆயினும் அவரது முகத்தில் அந்தப் பாடசாலையுடன் கஸ்ரப்படுகிறேன் என்ற களைப்பினை அல்லது சோர்விணைக்காண முடியாது. பாடசாலையில் கல்வி கற்பவர்கள் அனைவரும் மிகமிக வறுமைக்கோட்டிற்கு கீழ்ப்பாட்டவர்கள். ஆயினும் தன்னிடம் உள்ள ஆசிரியர்களை தன் நிர்வாகத்திறமையால் கவர்ந்து ஒற்றுமையாக வைத்துக்கொண்டு, ஏனைய பெரிய பாடசாலைகளில் நடைபெறுவது போன்ற சகல சிறப்பான செயற்பாடுகளையும் நடாத்தி முடித்த பெருமைக்குரிய அதிபர் ஆவார்.

இளையதம்பி வித்தியாலயத்திற்கு விளையாட்டு மைதானம் இல்லை. ஆயினும் அப்பாடசாலையிற் கல்வி கற்கும் மாணவர்கள் இந்துக்கல்லூரி மைதானத்தில் விளையாடும் அளவுக்கு துணிச்சலை தன்னைப் போன்று தன் மாணவர்களுக்கு ஏற்படுத்திய பெருமைக்குரியவர்.

பாடசாலை ஒன்றில் நடைபெறும் அத்தனை நிகழ்வும் இப்பாடசாலையிலும் நடைபெறுவதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் பிள்ளைகளின் பெற்றோரிடம் ஒரு ரூபாய் வாங்க முடியாத வறுமை ஆயினும் தன் நேர்மையான செயற்பாட்டினால் பல நல்லுள்ளங்களின் மனதில் அவர் இடம் பிடித்திருந்தகாரணத்தினால் ஒவ்வொரு நிகழ்வுக்கும் ஏதோவகையில் பாடசாலைக்கு பணம் வந்து சேர்ந்த நிலைமைகளை அவதானித்துள்ளேன்.

அத்தகைய சிறப்புமிக்க அதிபர் அவர்கள் தன்பெருமைமிகு அதிபர் சேவையினை யாழ்/இளையதம்பி வித்தியாலயத்தில் நிறைவு செய்து, தன் வாழ்நாளில் கல்விச் சேவைக்காக 31 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து, ஆயிரம் ஆயிரம் மாணவச்செல்வங்களை சமூகத்திற்கு ஏற்ற பிரசையாக கொடுத்துள்ளேன் என்ற மனத்திருப்தியுடன் ஓய்வு பெறுகின்றார் என நினைக்கும் போது பெருமையாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது குடும்பமே கல்விச்சேவைக்கு அர்ப்பணித்த நிலைமையை மணிவிழா நாயகியின் துணைவரிலும் காணக்கூடியதாக உள்ளது. துணைவர் கதிரேசபிள்ளை அவர்கள் தீவக கல்வி வலயத்தின் ஆங்கில பாட உதவிக்கல்விப்பணிப்பாளராக சிறப்பாகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற பெருமைக்குரியவர்.

அதே வண்ணம் **"பிறர் பிள்ளை தடவ தன்பிள்ளை தானே வளரும்"** என்ற கூற்றுக்கு இவரது குடும்பமும் பொருத்தப்பாடாக அமைந்தது. சிறப்பிடம் பெறுகின்றது. மூத்தமகன் சிறந்த வைத்தியராக கடமையாற்றுகின்றார். இரண்டாவது மகன் கணனி மென் பொருள் பொறியியலாளராகி கனடா நாட்டில் வேலை செய்கின்றார். மூன்றாவது மகள் கணனி மென்பொருள் பொறியியல் பட்டத்தை முடித்துள்ளார். ஆகவே தான் மணிவிழா நாயகி மற்றும் அவர் கணவர் ஆகியோரின் ஏழைப்பிள்ளைகள் மீதான தன்னல மற்றசேவை அவர்கள் பிள்ளைச்செல்வங்களை உயர்நிலை அமைய செய்துள்ளது.

ஓய்வுக்காலத்தில் மணிவிழா நாயகி, நோய் நொடி இன்றி சகலசெல்வங்களும் பெற்று வாழ இறைவனை வேண்டுகிறேன்.

***திரு. சி. மாணிக்கராசா***
பிரதிக்கல்விப் பணிப்பாளர்,
பொதுநிர்வாகம் (ஓய்வு)
வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைச் சூழலை வெற்றிகொண்ட அதிபர்

நயினை மண் பெற்றெடுத்த அதிபர் திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களின் சேவைநலன் பாராட்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி

யாழ் கல்வி வலயத்தில் தரம் II பாடசாலைகளில் குறைவான நிலப்பரப்பில் நெருக்கமான கட்டிடங்களுடன் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் பாடசாலையாக யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் விளங்குகின்றது. இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவும், கல்விக்கான சூழல் அற்ற பின்னணியைக் கொண்டவர்களாகவும் உள்ளனர்.

பள்ளி அமைந்துள்ள சூழலில் இருந்து மாணவர்கள் கல்வி கற்பதற்கு வருவதில்லை. அத்துடன் கற்கும் மாணவர்களிடையே இடைவிலகல், அடிக்கடி வரவின்மை, தொழிலுக்குச் செல்லுதல், குடும்பத்தவர்களின் தொழிலுக்கு உதவுதல் போன்ற காரணங்களால் கல்வி கற்பதில் ஆர்வம் குன்றியவர்களாக உள்ளனர்.

இத்தகைய பின்னணியிலிருந்து வருகின்ற மாணவர்களை அன்புடனும் மிக்க பண்புடனும் அரவணைத்து உற்சாகமூட்டி, மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்குவதில் வெற்றிகண்ட அதிபராக மணிவிழாக் காணும் அதிபர் திருமதி.கதிரேசபிள்ளை அவர்கள் விளங்குகின்றார். தனது ஆசிரியர்களை சிறந்த முறையில் வழிநடத்தி மாணவர்களுக்கு அடிப்படைக் கல்வியை வழங்கு வதிலும் வெற்றி கண்டவராக விளங்கினார்.

மாணவர்களுக்கு சிறப்பான மதிய உணவை வழங்கி வருவதோடு பல்வேறு நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு அவ்வப்போது உதவிகளை வழங்கி யுள்ளார்கள். வலய மற்றும் கோட்ட மட்ட உள்ளக மேற்பார்வையின் போது பூரண ஒத்துழைப்பை வழங்கியதுடன், வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தார்

இத்தகைய ஆபத்தின் விளிம்பில் பாடசாலையை சிறப்பாக வழிநடாத்திய அதிபர் அவர்கள் ஓய்வு காலத்தில் நலமுடன் சிறப்புற்றிருக்க இறைவனை வேண்டுகின்றேன்.

*அ. அகிலதாஸ்*
ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்
யாழ் கல்வி வலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்ப்பணிப்பு மிக்க சேவையாளர்

திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அதிபர் தரம் 1, யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் அவர்களின் மணிவிழா மலருக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது நயினாதீவு கிராமத்தில் பிறந்து ஆரம்பக்கல்வியை நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஸ்ட வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை நயினைதீவு மகா வித்தியாலயத்திலும் உயர் இடை நிலைக் கல்வியை யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்திலும் கல்வி கற்று பட்டதாரி பட்டத்தை பெற்றுக் கொண்ட இவர் 1988ம் ஆண்டு ஆசிரியப்பணியை தொடங்கி ஆசிரியராக பகுதித் தலைவராக ஏறத்தாழ 20 ஆண்டுகள் மிகவும் அர்ப்பணிப்பான ஆசிரிய பணியை சிறப்பாக மேற்கொண்டார்.

பின் அதிபர் தர போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து 1.7.2009ம் ஆண்டு தொடக்கம் அதிபராக நியமானம் பெற்று இன்று அதிபர் தரம் 1 இனையும் பெற்றுக் கொண்டு இன்று மணிவிழாக்காணும் அதிபர் அவர்கள் தனது செயற்றிறனாலும் அர்ப்பணிப்பான சேவையினாலும் உயர்வு பெற்றுள்ளார்.

நான் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் அதிபராக இருந்த காலப்பகுதியில் யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிகள் எமது கல்லூரி மைதானத்தில் நடைபெற்று இன்று வரை தொடர்ந்து நடைபெறுகின்றது. இப் பாடசாலை எவ்வாறு வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியை நடாத்துகின்றதோ அதைவிட சிறப்பாக தனது முகாமைத்துவ திறனால் குறைந்த அளவு மாணவர்களைக் கொண்டு சிறப்பான முறையில் நடாத்தி முடிக்கின்ற ஆற்றலை எம்மால் பார்க்க முடிந்தது. அத்துடன் சமூகத்தின் ஒத்துழைப்பும், பழைய மாணவர்களின் ஒத்துழைப் புடன் பெற்றுக் கொண்டு தனது பாடசாலையின் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டினை மிகச்சிறப்பாக செயற்படுத்தி தனது முகாமைத்துவ கடமையில் வெற்றியும் அடைந்துள்ளார்.

அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும் தங்களது சேவை எமது நயினாதீவு மண்ணிற்கும், சமூகத்திற்கும் சேவை தொடர வேண்டும் என வாழ்த்துவதுடன் ஓய்வுக்காலம் நோய் நொடிகள் இன்றி இன்னும் மகிழ்வாய் இன்னும் பயனுடையதாய், இன்னும் இனிதாய், இன்னும் சிறப்பாய் அமைய நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாளினதும் யாழ் இந்துவின் சிவஞான வைரவ பெருமானினதும் அருட்கடாட்சமும் கிடைக்க வேண்டி எனது வாழ்த்தினை நிறைவு செய்கின்றேன்.

**திரு. வீ. கணேசராஜா**
ஓய்வுநிலை அதிபர்
யாழ் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளரின் உள்ளத்தில் இருந்து

யாழ்/இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் தனது அறுபதாவது அகவையை பூர்த்தி செய்து அதிபர் பணிலிருந்து ஓய்வு பெறும் திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளையை நான் நன்கு அறிவேன். நான் ஆசிரியராக யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் பணியாற்றும் காலங்களில் அவருடைய மகன் க.தர்ஸனன் எனது அன்புக்குரிய மாணவன். இன்று அவர் ஒரு வைத்திய கலாநிதியாக சமூகப் பணியாற்றுகின்றார். அடுத்த மகனும், மகளும் மென்பொருள் பொறியியலாளராக பட்டம் பெற்று பணியாற்றுகின்றார்கள். இவற்றிற்கு உறுதுணையாக இருந்த ஒரு நல்ல தாயாக வரதலட்சுமி அம்மாவை அன்று கண்டேன். மகாத்மா காந்தியின் வளர்ச்சிக்கும் அர்ப்பணிப்பான நாட்டுப் பற்றுக்கும் அவருடைய தாய்தான் காரணம். வரதலட்சுமி என்ற தாய் தனது மூன்று பிள்ளைகளையும் நல்ல துறையில் தடம்பதிக்க தனது கணவனின் துணையுடன் பணியாற்றினார் என்பதை வெளிப்படையாகக் கூற விரும்புகின்றேன். கணவனும் மனைவியும் கல்விப்பணியில் சிறப்பாக ஈடுபட்டுக் கொண்டு நல்ல தாயாக நல்ல மனைவியாக, நல்ல குடும்பப் பெண்ணாக வாழ்ந்து காட்டியுள்ளார் வரதலட்சுமி.

ஆசிரியப் பணியில் 21 வருடங்கள் நல்ல ஆசிரியராக பணியாற்றியதன் பேறாக கடந்த 10 வருடங்கள் நல்லதொரு அதிபராக பணியாற்றியுள்ளார். அவர் கடைசியாக அதிபராக பணியாற்றி இளையதமபி இந்து வித்தியாலயத்திற்கு பகவான், சத்திய சாயி நிலையத்தினால் மாணவர்களுக்கு காலை நற்சிந்தனை சொல்லுவதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நான் பாடசாலைக்கு செல்லும் போதெல்லாம் வரதலட்சுமி அம்மாவை உன்னிப்பாக அவதானித்துள்ளேன். முக மலர்ச்சியுடன் எல்லோரையும் அன்பாக வரவேற்பார். நேரமுகாமைத்துவம் பாடசாலை முகாமைத்துவம் என்பவற்றை மிகவும் சிறப்பாக நிறைவேற்றுவார். ஆசிரியர்களுடன் நட்புறவுடன் ஒரு தாய் போல பேசிப்பழகி அவர்களின் உச்சப் பணிகளை பாடசாலைக்கு பெற்றுத் தருவார்.

மாணவர்கள் காலையில் பாடசாலைக்கு வந்ததும் அதிபரின் கால்களை தொட்டு வணங்கி ஆசீர்வாதம் பெறும் காட்சி என் உள்ளத்தை தொடும். மாணவர்களின் முன்னேற்றத்திற்காக அதி உச்ச முயற்சிகளையும் எடுத்துள்ளார். இந்தப் பாடசாலையில் இப்படியான ஒரு தியாக உணர்வுள்ள அதிபர் வாய்த்தது பாடசாலை மாணவர்கள் அவர்தம் பெற்றோர்கள் செய்த தவப்பயன் என்றே கூற வேண்டும்.

"சிறுகக் கட்டி பெருக வாழ்தல்" என்று கூறுவார்கள். சிறிய பாடசாலையாக இருந்தாலும் இவருடைய காலப்பகுதியில் பல முன்னேற்றமான மாற்றங்களை அவதானித்துள்ளேன். நான் கல்வி அலுவலராக பல பாடசாலைகளை நேரடியாக சென்று மதிப்பீடு செய்துள்ளேன். அந்த வகையில் இளையதம்பி வித்தியாலயத்தின் வளர்ச்சிகளை வெளிப்படையாக கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாடசாலையின் வெற்றிக்கு நல்லதொரு அதிபரின் வழிநடத்தலே மூலகாரணம் என்பதற்கு வரதலட்சுமி அம்மையார் சான்றாக உள்ளார். அவர் 60 வயது பூர்த்தி செய்ததால் ஓய்வு பெறுகின்றாரே தவிர கல்விப் பணியில் அவரின் இறுதி மூச்சுவரை நற்பணியாற்றுவார் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை அவருடைய கணவரும் நல்லதொரு கல்வியலாளர், பொறுப்பான கல்வி அலுவலராக பணியாற்றி உள்ளார்.

இவர்களுடைய ஓய்வுகாலம் எழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஏணிப் படிகளாக அமைய வேண்டுமென்று பகவானைப் பிரார்த்திக்கின்றேன்.

***"பிறப்பொக்கு மெல்லா வுயிர்குஞ் சிறப் பொவ்வா***
***செய் தொழில் வேற்றுமையான்"***

நீண்ட ஆயுள் ஆரோக்கியத்துடன்
மகிழ்வான எதிர்காலம் அமைய வேண்டி வாழ்த்துகின்றேன்.
வாழ்க வளமுடன்
ஓம் சாயிராம்

***இ. இராஜேஸ்வரன்***
ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்
வடமாகாண் கல்வித் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விப்பணியே கடவுட் பணியாகக் கொண்டவர்

நயினை மண் உவந்தளித்த அதிபர் திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள் நிறைந்த அன்புள்ளமும் உயர்ந்த கல்வித்தகைமைகளும் கொண்டவர். அவரது மணிவிழா மலருக்கு நல் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் நல்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**" கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றையவை"**

என்பது வள்ளுவர் வாக்கு. அழியாத செல்வமாகிய கல்விக்கு ஆற்றும் தொண்டு என்றும் காலத்தால் அழியாது. திருமதி வ.கதிரேசபிள்ளை அவர்கள் பல பாடசாலைகளில் நல்லாசிரியராகப் பணியாற்றி பல்லாயிரக்கணக்கான நல்மாணாக்கர்களை உருவாக்கிய பெருமைக்குரியவர். அதிபர் பரீட்சையில் சித்திபெற்று யா/இளையதம்பி வித்தியாலயத்தின் அதிபராக பொறுப்பேற்று அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்ததன் பயனாக் மாணவர் தொகையை அதிகரித்து பௌதீக வளத்தேவைகளை நிறைவு செய்து 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை என்பனவற்றில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று அவரால் சாதிக்க முடிந்தது எனலாம். இதனால் இன்று யாழ் நகரப்பாடசாலைகளில் குறிப்பிடத்தக்க ஓர் சிறந்த பாடசாலையாக இவ்வித்தியாலயம் விளங்குகின்றது என்றால் மிகையல்ல.

"**கல்விப் பணியே கடவுட்பணி**" என வாழ்ந்தது இவரது குடும்பம். இவரது கணவரான சகலகலாவல்லவர் திரு க.கதிரேசபிள்ளை அவர்கள் ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளராக இருந்து நற்சேவையாற்றியவர். அதிபர் அவர்கள் நல்ல மனைவியாக இருந்து அவர்களது பணிகளுக்கு மிக்க உதவியாக விளங்கினார். அத்துடன் தமது மூன்று பிள்ளைகளையும் சிறப்பாக வளர்த்து கல்வியில் சிறந்தவர்களாக ஆக்கி உயர் பதவிகள் வகிக்கவும் செய்ததுடன் இரண்டு ஆண்பிள்ளைகளுக்கும் திருமணம் செய்தும் வைத்துள்ளனர். எனவே குடும்பப் பொறுப்பையும் பாடசாலைப் பொறுப்பையும் சமூகப் பொறுப்புக்களையும் பூரணமாக நிறைவுசெய்த மனத்திருப்தியுடன் இன்று மணிவிழாக் காண்கிறார்.

மணிவிழாக் காணும் அம்மையாரின் சேவை மகத்தானது. அவர் பணியை மனதாரப் போற்றுவதுடன் ஓய்வு காலத்தில் அவரும் குடும்பத்தினரும் சகல செல்வங்களையும் பெற்றுச் சிறப்படைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இம்மணிவிழாவை ஆர்வத்தோடு முன்வந்து நடத்துகின்ற அன்பர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

*சோ.தில்லைநாதன் J.P,*
**ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்,**
**தீவகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர்களின் ஆளுமையை வளர்த்தவர்

திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்திற்கு அதிபராக வந்த காலத்தில் இருந்து அவரோடு கடமையாற்றும் சந்தர்ப்பங்கள் எனக்கு கிடைத்தது. பாடசாலை மாணவர்களின் இணைபாடவிதான செயற்பாடுகளில் அதிகம் அக்கறை கொண்டவர் இடவசதி என்பது இல்லாதபோதும் Keepit செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருந்து மாணவர்களை ஆளுமை உள்ளவர்களாக மாற்றுவதில் வெற்றி கண்டவர் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்த போதும் தனது பாடசாலை மாணவர்கள் இல்ல விளையாட்டுப் போட்டியில் பங்குபற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு கடந்த பல வருடங்களாக மற்றைய பாடசாலைக்கு நிகராக தனது பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்திலேயே மிகவும் சிறப்பாக நடாத்திக் காட்டியவர். பாடசாலை மைதானத்தை பெறுவதில் ஏற்பட்ட சிக்கல்களை தனது சிநேக பூர்வ அணுகுமுறையால் வென்றவர் அத்தனை ஆசிரியர்களையும் ஒன்று சேர்த்து பாடசாலையை வழி நடாத்தியவர்.

பல பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய அனுபவத்தின் ஊடாக இளைய தம்பி இந்து வித்தியாலயத்தை கடந்து பத்து ஆண்டுகளாக சிறப்பாக வழி நடாத்திய அதிபர் திருமதி.க.வரதலட்சுமி அவர்கள் நோய் நொடியின்றி நயினை நாகபூசணி அம்மனின் அருள் பெற்று நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

*சண் தயாளன்*
ஒய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்
(உடற்கல்வி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகல துறை ஆளுமை கொண்ட அதிபர்

யா/இளையதம்பி வித்தியாலயத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அதிபராக அரும்பணி புரிந்து தனது 60 வது வயதில் ஓய்வு பெற்று மணிவிழாக் காணுகின்ற அதிபர் திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். யா/இளையதம்பி வித்தியாலயத்திற்குச் சேவையாற்ற வருமுன்னர் யா/வைத்தீஸ் வராக் கல்லூரியில் சமூகக்கல்வி, புவியியல், வணிகக்கல்வி போன்ற பாடங்களுக்கு பொறுப்பா சிரியராக இருந்து கல்விப்பணியாற்றி இருந்த வேளையில் நான் குறித்த பாடசாலையின் அதிபராக இருந்த காரணத்தினால் அவரின் நடத்தை பற்றி நன்கு அறிந்தவன் என்ற வகையில் அவரின் பண்பு பற்றி, கற்பித்தல் நுட்பம் பற்றி தொடர்பாடல் பற்றி, நிர்வாகத்திற்கு அவர் ஆற்றிய அளப்பரிய சேவை பற்றி, ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் எல்லோருடனும் அவர் கொண்டிருந்த உறவு பற்றி, கல்வித் திணைக்களத்தில் அவருக்கிருந்த மதிப்பு பற்றி, கூறுவதற்கு உரிமை உள்ளவன் என்பத னால் வாழ்த்துவதில் மேலும் பேருவகையடைகின்றேன்.

யா/வைத்தீஸ்வராக் கல்லூரியில் கிட்டத்தட்ட 10 அண்டுகளுக்கு மேலாக அவர் சமூகக்கல்வி, வணிகக்கல்வி, புவியியல் போன்ற பாடங்களை தரம் 06 தொடக்கம் தரம் 13 வரையான வகுப்பு மாணவர்களுக்கு இலகுவான முறையில் கற்பித்து பெறுபேறுகளில் 100%தை வருடா வருடம் தக்க வைத்துக் கொண்டது. பாடசாலைக்கு நற்பெயர் ஏற்பட வழி சமைத்து அர்ப்பணிப்புடன் செயற்பட்டு பாடசாலையை யாழ் வலயத்தில் சிறந்த பாடசாலையாக திகழ்வதற்கு மூலாதாரமாக விளங்கியவர். அதை என்னால் இன்றும் மறக்கமுடியாது. வலயமட்ட பரீட்சைகளுக்கும் வைத்தீஸ்வராக் கொத்தணிப்பாடசாலைகளுக்குமான பாடசாலை மட்ட தான் சார்ந்த பாடங்களுக்கும் சிறந்த வினாத் தாள் தயாரிப்பாளராக இருந்து செயற்பட்டவர் இவருக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்டு அமரராகிவிட்ட திருமதி கு.இராஜேந்திரனும் நினைவு கூர வேண்டியவர். ஆசிரியர்களுக்கு முன்னு தாரணமாக திகழ்ந்தவர். கடைமையே தனது உயிர் மூச்சு என்று செயற்பட்டவர். நிர்வாகத்தினர் என்ன வேலை கொடுத்தாலும் சீறிச் சினங்காமல் இன்முகத்துடன் பொறுப்பேற்று கச்சிதமாக செய்து முடிப்பவர். சிறந்த கற்பித்தலோடு இலவசப்பாடநூல் விநியோகம் இவர் பொறுப்பிலேயே நீண்ட காலம் இருந்தது. எதுவித குறைகளுமின்றி அதை நிறைவேற்றியவர். நிர்வாகத்திற்கும் பாடசாலை அபிவிருத்திச்சங்க கணக்கு, தர உள்ளீட்டு கணக்கு போன்றவற்றை பல வருடங்களாக பராமரித்து வலயக்கண்ணகானிப்புக் குழுவினரின் தரிசனத்தின் போது அவர்களின் பாராட்டுக்களைப் பெற்றவர். கற்பித்தல் மட்டுமன்றி இணைபாடவிதான செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து அவற்றின் விருத்திக்கும் மாணவரின் ஆளுமைத்திறன் வளர்ச்சிக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக திகழ்ந்தவர். சமூக விஞ்ஞான மன்றத்தின் பொறுப்பாசிரியராக நீண்டகாலம் பணி புரிந்து மாணவரின் தலைமைத்துவ பண்பு விருத்தியாவதற்கும் பாட அறிவுத்திறனுக்கும் நன்கு உதவியவர். இவரின் வகுப்பறைக் கற்பித்தலை நான் பல முறை அவதானித்திருக்கிறேன். பாடம் போதிக்கும் போது முன் ஆயத்தத்துடன் சென்று சுறுசுறுப்பாக கற்பிப்பதும் வகுப்பறையை தனது கட்டுப்பாட்டிற்குள் பாடம் முடியும் வரை வைத்திருப்பதும் நேர முகாமைத்துவத்தை பேணுவதும் இவரிடம் நான் கண்ட கற்பித்தல் பண்புகளில் முக்கியமானவையாகும். இவர் அதிபராக பதவி உயர்வு பெற்று இடம் மாறிச் சென்ற போது வைத்தீஸ்வராச் சமூகமே பெரும் கவலையில் ஆழ்ந்தது என்றால் இவர் எப்படியாக பணியாற்றியிருப்பார் என்று நான் கூறித்தான் தெரியவேண்டிய அவசியமில்லை.

இவர் யா/இளையதம்பி வித்தியாலயத்தில் கடமை ஏற்று பணியாற்றிய இன்று வரைக்குமான காலப்பகுதியில் பல முறை நான் இப்பாடசாலைக்கு வந்து அவரின் செயற்பாடுகளை கூர்ந்து அவதானித்திருக்கிறேன். ஆசிரியர்களோடும், மாணவர்களோடும் தாயுள்ளத்துடன் புரிந்துணர்வோடு பழகுவதையும் பெற்றோர், பாடசாலை உறவு, திணைக்கள அதிகாரிகளுடனான உறவு போன்றவை நன்கு பேணியுள்ளதையும் கண்டிருக்கின்றேன். முன்பு இவர் பணிபுரிந்த எனது பாடசாலையில் தான் கற்று வந்த நிர்வாகத் திறன்களையே தான் பின் பற்றி தனது பாடசாலையை வளமாக்குவதாக நான் சந்திக்கும் வேளையில் அடிக்கடி கூறுவார். பழகுவதற்கு இனிமையானவர். சமூக உறவை வளர்ப்பதில் இவருக்கு நிகர் இவரே என்று கூறினால் அது மிகையல்ல. இவ்வாறான நற் பண்புகளை தன்னகத்தே கொண்ட திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளைக்கு 60 வது வயது என்பதை என்னால் நம்பமுடியவில்லை. அரச சேவையில் இணைந்து கொண்ட எவரும் குறித்த 60 வயதிற்குப் பின்னர் ஒரு நாள் கூட பணியாற்ற முடியாது என்பது இலங்கை அரசின் நிர்வாக சேவை விதி என்பதால் அதற்கு இவரும் விதிவிலக்காக இருக்க முடியாது. அதனால் அவர் ஓய்வு பெற்று மணி விழாக் காணும் இன்றைய நாளில் அவரை வாழ்த்துவதோடு அவரின் எதிர்காலம் கல்விப்பணி, சமூகப்பணி, சமயப்பணி என்று விரிந்து செல்ல வேண்டும் என்றும் கணவன், பிள்ளைகள், பேரக்குழந்தைகளுடன் சந்தோஷமாக வாழக்கூடிய உடல் ஆரோக்கியத்தையும் மனத்தென்பையும் நீண்ட ஆயுட்பலத்தையும் எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்மன் அருள வேண்டும் என்றும் இறையாசி வழங்கி அமைகின்றேன்.

***நா. வன்னியசிங்கம்***
ஓய்வுநிலை அதிபர்
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆளுமையும் ஆற்றலும் மிக்கவர்

யாழ் இளையதம்பி வித்தியாலய அதிபர் திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இவர் தான் அதிபராக பதவி ஏற்ற காலத்திலிருந்து அப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு அதில் வெற்றியும் கண்டவர் அவரது பொறுமையும் இனிய பேச்சும் இறை நம்பிக்கையும் அவரது பணிக்கு மெருகூட்டின எனலாம்.

தனது பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்கள், மாணவர்களோடு நல்லுறவைப் பேணியதோடு, பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் என பாடசாலைச் சமூகத்தினரோடும் மிகுந்த அன்போடு பழகி பாடசாலைக்கும் சமூகத்துக்குமான இடைத்தொடர்பினையும் பலப்படுத்தி உள்ளார்.

ஆளுமையும் ஆற்றலும் மிக்க இவர் தமது ஓய்வுக் காலத்தில் குடும்பத்தாருடன் இனிதாக வாழ இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறி நிறைவு செய்கின்றேன்.

***திருமதி. மிமலாதேவி விமலநாதன்***
அதிபர்,
யாழ் இந்து மகளிர் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு

யா/ வண் இளையதம்பி இந்து வித்தியாலய அதிபராக சென்ற பத்து ஆண்டுகளாக கடமை ஆற்றிய திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள் இக்காலப்பகுதியில் சத்யசாயி சர்வதேச நிறுவனத்துடன் இணைந்து பல மனித விழுமிய செயற்பாடுகளில் தமது பாடசாலை மாணவர்களை ஈடுபடுத்தினார்.

தனது கடமை என்ற கருத்தில் செயற்படாது கடமைக்கு மேலாக தன் பாடசாலையில் கற்கின்ற மாணவர்கள் சமூகத்தில் ஒழுக்கமுள்ள சிறந்த மாணவர்களாக திகழ வேண்டும் என்ற கோட்பாட்டைப் பின்பற்றி அவர்கள் ஒழுக்கமுள்ள சிறந்த மாணவர்களாக திகழ சில திட்டங்களை செயற்படுத்தினார்.

பாடசாலை மாணவர்களிற்கு வெள்ளிக்கிழமை காலை நற்சிந்தனை நிகழ்வு ஒன்றினை நடாத்துவதற்கு எம்மோடு இணைந்து ஒழுங்கு செய்திருந்தார். இதன் மூலம் மாணவர்கள் வெள்ளிக்கிழமைகளில் இதில் கலந்து கொண்டு நற்கருத்துகளை அறிந்து கொள்ள முடிந்தது.

இதற்கு மேலாக மாணவர்களது நாளாந்த செயற்பாடுகளில் உன்னதமான பண்புகளை பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டு பதினைந்து வாரங்கள் பாடசாலை முடிந்த பின் அந்த மாணவர்களிற்கு ஒழுக்க கல்வி கற்பதற்கு ஒழுங்கு செய்திருந்தார்.

இந்த நிகழ்வின் முடிவில் ஓர் பெற்றோர் – மாணவர் ஆசிரியர் ஒன்றுகூடல் விழாவினை ஒழுங்கு செய்து மாணவர்களது வாழ்க்கை முறையில் நல்மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்பதை பெற்றோர் மூலம் அறிய முயன்றார்.

அத்தோடு எம்மால் நடாத்தப்பட்ட அன்பு வார போட்டிகளில் 270 பாடசாலை மாணவர்களோடு போட்டியில் இணைந்து தமது பாடசாலை மாணவர்களை உற்சாகப்படுத்தியமையும் மாணவர்கள் பரிசில்கள் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து சமூகத்தில் நல் ஓய்வு காலத்திலும் தொடர்ந்து சமூகத்தில் நல் மாற்றம் ஏற்பட செயற்பாடுகளில் ஈடுபடவேண்டுமென அன்புடன் வாழ்த்துகிறோம்.

*K.V. சிவநேசன்*
தலைவர்,
சத்தியசாயி சர்வதேச நிறுவனம்
வடபிராந்தியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AUM

# அகில இலங்கை இந்து மாமன்றம்

# ALL CEYLON HINDU CONGRESS

(Federation of Hindu Religious Associations and Trusts in Srilanka)
Head Office: No 91/5, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo-02, Sri lanka.
Phone: - 0112434990 Web-Hinducongress.lk Mail.- [illegible] Fax:- 0112344720

## கல்விப் பணியில் மூன்று தசாப்த காலத்தை நிறைவு செய்யும் அதிபர் திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை

எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்று சொல்வதுண்டு. எத்தனையோ பணிகள் இருந்தாலும் உலகின் உன்னதமான பணியாகப் போற்றப்படும் ஆசிரியப் பணிக்கு ஒரு தனித்துவமான சிறப்பு இருக்கிறது. இத்தகைய புனிதப்பணியில் தன்னை அர்ப்பணித்து முப்பத்தொரு வருடங்களை பூர்த்திசெய்த பெருமையில் ஓய்வுபெறும் திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களது சேவை போற்றுதற்குரியது.

1988ஆம் ஆண்டு யாழ்.நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை ஆரம்பித்த இவர் பின்னர் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் இணைந்து பயிற்சியை நிறைவு செய்து கொண்டு, மண்டைதீவு மகா வித்தியாலயத்திலும், யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் கடமையாற்றியிருக்கிறார். இதனைத் தொடர்ந்து அதிபராக பதவியுயர்வு பெற்று 2009 ஜீலை மாதத்திலிருந்து இவ்வருடம் ஏப்ரல் மாதம் வரையிலான ஒரு தசாப்த காலம் யாழ்.இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.


இவர் அதிபராகப் பணியாற்றிய ஒரு தசாப்த காலம் சக ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் அன்பாகப் பழகி வந்திருப்பதுடன், பாடசாலையின் வளர்ச்சியிலும் மாணவர்களது கல்வி மேம்பாட்டுக்கும் பெரிதும் உதவி வந்தவர் என்பதை மறக்க முடியாது. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செயற்றிட்டங்களுள் ஒன்றான பாடசாலைகளில் சிவதொண்டர் அணியை உருவாக்கி, அதனூடாக மாணவர்கள் மத்தியில் சமய சமூக சிந்தனைகளை வளர்க்க வேண்டும் என்ற நன் னோக்கத்திற்கு இவர் உரிய மதிப்பளித்து, யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் சிவ தொண்டர் அணியை அமைத்து அதனை வெற்றிகரமாக செயற்படுத்தி வந்திருப்பது சிறப்பானதொரு விஷயமாகும். சிவ தொண்டர் அணியில் இணைந்து கொண்ட பத்து மாணவர்களுக்கு தவணை தோறும் புலமைப்பரிசில் வழங்கும் செயற்பாட்டையும் இந்து மாமன்றம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இங்கு 2016ஆம் ஆண்டு நடத்த சிவதொண்டர் அணி அங்குரார்ப்பண நிகழ்வின் போது இந்து மாமன்ற முன்னாள் தலைவராகவிருந்த அமரர் கந்தையா நீலகண்டன் அவர்களுடன் மாமன்ற உறுப்பினர்களும், மாமன்ற உபதலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் இணைந்து கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் நிதியுதவியை வழங்கி வைத்து நிகழ்வை சிறப்பித்திருந்ததும் வரலாற்றுப் பதிவாகியிருக்கிறது. ஆசிரிய சேவையில் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ள திருமதி வரத லட்சுமி அவர்களை அகில இலங்கை இந்து மாமன்றம் பெரிதும் பாராட்டுவதுடன், இவர் சுகநலத்துடன் வாழ்ந்து எதிர்காலத்திலும் சமயம், சமூக, கல்விப் பணிகளில் பங்களிப்பு வழங்குவதற்கு இறையருள் துணை நிற்க வேண்டும் என பிரார்த்தித்து வாழ்த்துகிறது.

***அகில இலங்கை இந்துமாமன்றம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம்சக்தி அன்பேசிவம்

**ஓம் ஸ்ரீ விராட் விஸ்வ் பிரம்மனே நமஹ!**

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்"

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

"அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே"

"கலியுக வரதன் கந்தனைக் கைதொழ கடுவினை அகலும்"










**Mr. Rasiya Sritharan** வில்லிசைக்கலைஞர், சொற்பொழிவாளர், ஆன்மீக எழுத்தாளர்

☎ 0215671166

**திரு.இராசையா ஸ்ரீதரன்**

"சைவமும் தமிழும் தழைத்தோங்கட்டும்"

ஆதீன சமயப்பிரசாரகர்,

யாழ்ப்பாணம்.


07.04.2019



"சைவப்புலவர்"
(அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், யாழ்ப்பாணம். 1972)

"கவிமணி"
(இந்துப் பேரவை, யாழ்ப்பாணம். - 2000)

"சிவநெறித் தொண்டர்"
(டைபிராந்திய இந்துப் பேரவை, யாழ்ப்பாணம். - 2001)

"சைவநெறிப் புலவர்"
(ஸ்ரீதேவி குருகுலபீடம், கொழும்பு. - 2002)

"சிவநெறிக்கலாநிதி"
(சர்வதேச இந்துமத குருபீடம், கொழும்பு. - 2003)

"மரபுக் கலைச் சுடர்"
(பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம், யாழ்ப்பாணம். - 2004)

"ஆன்மீகச் செம்மல்"
(சைவத்தும் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர்கழகம், கொழும்பு. - 2004)

"கலை ஞானச்சுடர்"
(கலாசாரப் பேரவை, நல்லூர், யாழ்ப்பாணம். - 2005)

"வில்லிசைச் செல்வர்"
(அத்தியடிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை - 2006)

"சமூக திலகம்"
(கிராம அபிவிருத்திச் சங்கம் கொட்டடி, யாழ்ப்பாணம் - 2010)

"கலாபூஷணம்"
(இலங்கை அரசு - 2011)

"கலைத்தென்றல்"
(வலிகிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம், கோப்பாய். - 2012)

## உளமார வாழ்த்துகின்றோம்

காலத்தால் அழிக்க முடியாத கல்விச் செல்வத்தை ஊட்டி வளர்த்து அளப்பரிய அருஞ்சேவையாற்றி அகவை அறுபதில் ஓய்வு பெறுகின்ற எங்களுடைய அன்புக்கும் மதிப்புக்குமுரிய அதிபர் திருமதி வரதலட்சுமி கதிரேசப்பிள்ளை அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றோம்.

இவருடைய சேவைக் காலத்தில் யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் வளர்ச்சி அபரிமிதமானது. மாணாக்கர்களின் தேவை அறிந்து அவ்வப்போது சேவையாற்றிய அதிபரின் ஆளுமை வரவேற்கத் தக்கது. அத்தகைய அன்பு மிக்க அதிபர் அவர்கள் இன்னும் நீண்ட நாள் வாழ்ந்து கல்விச் சேவை செய்து சிறப்புற வேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றோம்.

எமது குலதெய்வமாக விளங்குகின்ற அன்னை ஸ்ரீ காமாட்சி அம்பாளுடைய திருவருட் கருணையினால் எல்லா வளங்களும் பெற்றுச் சீரோடுஞ் சிறப்போடும் வாழ வேண்டுமென்று பிரார்த்தித்து அமைகின்றோம்.

வாழ்க வளமுடன் !

**"கலாபூஷணம்" தெய்வத்தமிழ்ச்சுடர்"**

**"சிவநெறிக்கலாநிதி"**

***இராசையா ஸ்ரீதரன்***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கல்வி சொல்ல வல்ல நல் வித்தகி"

**திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை**
com Trd, BA, PGD Rd, MEd (merit), SLPS - I

திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள் நல்லாசிரியர் சேவையிலிருந்தும் உத்தம அதிபர் சேவையிலிருந்தும் 26.04.2019ம் திகதி ஓய்வு பெறும் உன்னத நாளில் அவரை நீடூழி வாழ்க என வாழ்த்துவதில் பெரிதும் உவகை அடைகின்றேன்.

திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள் எனது நல்மாணாக்கள் வரிசையில் முதல் மாணவி எனக் குறிப்பிடத்தக்கவர் நான் நயினாதீவு கணேசகனிஷ்ட மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக பணியாற்றிய ஆரம்ப காலங்களில் என்னிடம் கல்வி கற்றவர்.

அவர் மிகவும் மதிநுட்பமும், கல்வியில் சிறந்த ஊக்கமும், விடாமுயற்சியும், நல்லொழுக்கமும் உடைய நல் மாணவியாகத் திகழ்ந்தார். நல்ல தமிழில் மொழி நடை கைவரப் பெற்றவர். பேச்சாளர், எழுத்தாளர், தலைமை தாங்கும் பண்பு: என்பன அவரது சிறப்பியல்புகளாகும். இவரது குறிப்பிட்ட சிறந்த திறமைகளே பின்னர் விருத்தி அடைந்து சிறந்ததோர் நல்லதிபராகத் திகழ்வதற்கு உறுதுணையாக அமைந்தன.

அதிபர் அவர்கள் தனது இடைநிலைக் கல்வியை நயினாதீவு மகா வித்தியாலயத்திலும், உயர் தரக் கல்வியை யா/கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்திலும், ஆசிரிய பயிற்சியை யா/பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் பெற்றுக் கொண்டார். ஆசிரியராக தான் ஆரம்பக்கல்வியைப் பெற்ற தன் ஊர்ப்பாடசாலையில் ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். மண்டைதீவு ம.வித்தியாலயத்தில் தனது ஆசிரிய சேவையை நன்கு ஆற்றி பலரது பாராட்டையும் பெற்றுள்ளார்.

திருமதி வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள் தாம் கற்பித்த மாணவர்களைக் கல்வியில் உயர்வடையச் செய்ததோடு மட்டுமன்றி தனது சொந்தப்பிள்ளைகளையும் உலகோர் போற்றும் வண்ணம் உயர் நிலையில் வைத்துள்ளார். இத்தோடு அவரது ஊக்கம் நின்று விடவில்லை. தாமும் கற்றுக் கொண்டே இருந்தார். "கல்வி கரையில என்பதற்கேற்ப மேலும் மேலும் கற்றுத்தேறி பட்டங்களையும் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார். கலை மாணிப் பட்டம், PGD Ed, பட்டம், MED (merit) போன்றவை இவர் மேலதிகமாகப் பெற்றுக் கொண்ட கல்விசார் பட்டங்கள். இவை எதனை உணர்த்துகின்றன என்றால் ஒருவர் வாழ் நாள் முழுவதும் கற்றுக் கொண்டிருக்க முடியும் என்பதை உணர்த்துகின்றன. அதிபர் அவர்களின் இந்த முன் மாதிரி யாவர்க்கும் ஓர் எடுத்துக்காட்டாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது குடும்பமே ஓர் பல்கலைக் கழகம். சகோதரர்கள் வைத்திய கலாநிதிகளாகவும், ஆசிரியர்களாகவும் திகழ்கின்றார்கள். இவரது கணவர் திரு.க.கதிரேசப்பிள்ளை அவர்கள் சிறந்த கல்விமான். ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பிள்ளைகளில் மூத்தவர் வைத்திய கலாநிதி இளையவர்கள் இருவரும் மென்பொருள் பொறியியலாளர்களாகத் திகழ்கின்றார்கள்.

கல்வியில் நிறைவும், பண்பில் உயர்வும் கொண்ட அதிபர் அவர்கள் தமது அதிபர் சேவையில் பத்து ஆண்டுகள் காலம் யா/இளையதம்பி இந்து வித்தியாலத்தில் சேவையாற்றி தனது 60வது வயதில் ஓய்வு பெற்றுள்ளார்.

**"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனதிட்பம்**
**மற்றைய எல்லாம் பிற" என்பது குறள்.**

"வினைத்திட்பம்" என்றால் செயலாற்றும் திறன் ஒவ்வொருவனும் தான் மேற்கொள்ளும் பணியை செவ்வனே நிறைவேற்றுவதற்கும் அதன் மூலம் சமூகமும், நாடும் நலம் பெறுவதற்கும் மன உறுதிப்பாடு முக்கியமானது அதிபர் க.வரதலட்சுமி அவர்கள் நல்லதோர் அதிபராகத் திகழ்ந்து நல்லதோர் மாணவ சமுதாயத்தை உருவாக்கியது மட்டுமன்றி, நல்லாசியர்களின் அர்ப்பணிப்பையும், நற்சேவையையும் பாடசாலைக்குப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள். "அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி" என்பார்கள். அதற்கேற்ப அதிபரின் வழிகாட்டலும், ஊக்கமுமே உடனாசிரியர்களையும், மாணாக்களையும் ஊக்குவித்து உயர்வடையச் செய்யும்.

எனவே திருமதி.வரதலட்சுமி கதிரேசப்பிள்ளை அவர்கள் நல்லாசிரியராகவும், நல்லதிபராகவும் காட்டிய நல்வழியில் ஆசிரிய உலகமும், மாணவர் சமுதாயமும் மென்மேலும் உயர்வடைய வாழ்த்துவதடன் அதிபர் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து தமத ஓய்வு நிலையிலும் கல்வி சார்ந்த பல பணிகளை ஆற்ற வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் அவருக்கு நீண்டாயுளும், நிறைந்த செல்வமும் அருள வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

நீடூழி வாழ்க !

***திருமதி.தவமணி சபாநாதன்***
**ஓய்வு நிலை அதிபர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றேன் !

யாழ் இளையதம்பி இந்து வித்தியாலய அதிபர் திருமதி.வரதலட்சுமி கதிரேச பிள்ளை அவர்களின் மணிவிழா சேவைநயப்புச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1974 ஆம் ஆண்டு யா/நயினாதீவு மகா வித்தியாலயத்தில் சிறப்புமிக்க வர்த்தக மாணவியாக எனக்கும் அறிமுகமாகிய நாள் தொடக்கம் அவரின் கல்வி முன்னேற்றம், ஆற்றிய பணிகள், புரிந்த சாதனைகள், திறமைகள், குண நலன்கள் முதலியவற்றை நான் நன்கறிவேன். அவர் பாடசாலை மாணவியாக இருந்த காலத் தில் அவரிடம் காணப்பட்ட இளமைத்துடிப்பும், கடமையுணர்வும், புதுமை நாட்டமும் எதிர்காலத்தில் சிறந்த நிர்வாகியாகத் திகழ்வார் என்பதை எடுத்துக் காட்டின. பல்கோணப் பார்வையில் அதிபர் அவர்கள் ஒழுக்கத்திலும் கல்வியிலும் சிறந்த மாணவியாகவும் கற்பித்தலில் சிறந்த ஆசிரியராகவும், நிர்வாகத்தில் ஆளுமை மிக்க அதிபராகவும் சமூகப் பணியிலும், இறைபணியிலும் சிறந்த சேவகியாகவும் விளங்கினார்.

மூன்று தசாப்த காலத்துக்கு மேலாக கல்விப் பணியாற்றி ஆயிரக் கணக்கான நன்மாணாக்கர்களைச் சமூகத்திற்கு உருவாக்கிக் கொடுத்த பெருமைக்குரியவர். பத்து ஆண்டுகளாக அதிபராகக் கடமையாற்றி கல்வி வளர்ச்சியிலும் மாணவர் நன்னடத்தையிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் கண்ணும் கருத்துமாக இருந்து மாணவர்களைச் செயற்பட வைத்த பெருமைக்குரியவர். அதிபர் அவர்களது பொறுமையும் பொறுப்புணர்வும் ஆசிரியர்களை ஒன்றிணைத்து ஒத்துழைப்புப்பெறும் சாந்த நோக்கமும், ஆற்றலும், கற்றல் கற்பித்தல் தடங்கலின்றி நடைபெற பெரிதும் உதவியது எனலாம். அதிபர் அவர்களது பணி பாடசாலை வரலாற்றில் என்றும் மறக்க முடியாத தூய பணியாகும்.

இன்றுவரை அயராது உழைத்து ஓய்வு பெறும் அவரது சேவையைப் பாராட்டுவதுடன் அவரது கல்விப்பணியும் இறைபணியும் சமூகப் பணியும் தொடர்ந்து சிறக்க இறைவனை வேண்டுகின்றேன்.

***திருமதி. லெட்சுமி பரராசசிங்கம்***
**ஓய்வுநிலை ஆசிரியர்**
**முன்னாள் தொலைக் கல்வி**
**சிரேஷ்ட போதனாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமை மிக்க அதிபர்

யா/இளையதம்பி வித்தியாலயத்தின் அதிபராக ஏறத்தாழ 10 ஆண்டுகள் கடமையாற்றி மணிவிழாக் காணும் நாயகியாகிய திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களைக்குறித்து வெளிவரும் மலரில் எனது செய்தியும் வெளிவருவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

அவர் சிறந்த ஆசிரியராக ஆளுமைத்திறன் மிக்க அதிபராக, உற்றார், உறவினர்கள், ஊரலர்களிடம் மதிப்பு மிக்க குடும்பத்தலைவியாக பொறுப்புமிக்க அன்னையாக என பல்வேறு வகிபாகங்களில் சிறப்புடன் செயலாற்றும் வல்லமையைக் கொண்டு விளங்குபவர் நயினாதீவில் பிறந்து அம் மண்ணுக்கேயுரிய சிறப்புடன் கல்வி கற்று ஆசிரியராக பணியாற்றும் போதே கல்லூரியில் சக ஆசிரியர்களின் மதிப்பினைப் பெற்றுக் கடமையாற்றியவர் அதிபர் தரம் II ற்கான பரீட்சையில் சித்தியடைந்து அதிபர் தரத்திற்கு உயர்ந்தார். அவருடன் நயினாதீவினைச் சேர்ந்த எட்டுப்பேருக்கு மேற்பட்டோர் அப் பரீட்சை மூலம் அதிபர் பதவியினைப் பெற்றுக் கொண்டனர். அதில் நானும் ஒருவர். அவர் யா/இளையதம்பி வித்தியாலயத்திலும் நான் யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத் திலும் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டோம்.

கடமை உணர்வு மிக்க அதிபர் வரதலட்சுமி அவர்களோடு நானும் பாடசாலைகள் சம்பந்தமான கூட்டங்கள் நிகழ்வுகள் கருத்தரங்குகள் எல்லாவற்றிலும் கலந்து அவர்கள் கூறும் செயற்பாடுகளை பாடசாலையில் அமுல்படுத்துவதில் முழு முயற்சியுடன் செயற்படுவோம்

காலத்தின் கோலத்தினால் மறைந்து கிடந்த யா/இளையதம்பி வித்தியாலயத்தினை இன்று எல்லோரும் வியக்கும் வகையில் சகல துறைகளிலும் முன்றேற்றிய பெருமை கொண்டவர். மிகவும் அடிப்படை வசதிகள் அற்ற பெற்றோரின் பிள்ளைகளே கல்வி கற்கும் அப்பாடசாலையிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவரைச் சித்தியடைய வைத்தமை, க.பொ.த (சா.த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டமை. ஆங்கில தினம் தமிழ்த்தினம், கோட்டமட்ட, வலயமட்ட விளையாட்டுப் போட்டிகள் கணித விஞ்ஞான போட்டிகள் சமூக விஞ்ஞான போட்டிகள் என்பவற்றில் கோட்டம், மாகாணம் வரை மாணவர்கள் சென்று பரிசில்கள் பலவற்றைப் பெறக்கூடிய வகையில் மாணவர்களின் கல்வித்தரத்தினை உயர்த்தியவர் அத்துடன் பாடசாலையின் தேவைகளை அறிந்து கல்வித் திணைக்களம், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் உதவியுடன் நிறைவேற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய சேவைக்கால செயற்பாடுகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். இவற்றையெல்லாம் செய்வதற்கு அவருடைய தன்னடக்கமான பொறுமைமிக்க ஆளுமைச் சிறப்பே அவருக்கு கை கொடுத்தது. ஆசிரியர்களிடம் அன்பு கொண்டே, புரிந்துணர்வு கொண்டே சகோதரியாகவும், மாணவர்களிடம் அவர்களுக்கு வழிகாட்டும் பொறுமை மிக்க அன்னையாகவும் பெற்றார், பழைய மாணவர்கள் நலன் விரும்பிகளிடம் நேசம் கொண்ட ஓர் வழிகாட்டியாகவும் செயற்பட்டு பாடசாலை வளர்ச்சி அடைய அரும்பாடுபட்டார். அதற்கு அவரின் கணவரான முன்னாள் ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.கதிரேசபிள்ளை அவர்களும் மிகவும் ஒத்துழைப்பினை வழங்கினார்கள். அவரின் பிள்ளைகளும் அப்பாடசாலை நலனில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டனர். அவர் ஆற்றிய சேவை காரணமாக அவரின் பிள்ளைகள் உயர்ந்த நிலைகளில் காணப்படுகின்றனர். அந்த வகையில் அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைந்து அவரும் அவரது குடும்பமும் சகல வளங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ நயினை நாகபூசணி அம்மன் திருவடிகளை வேண்டி நிற்கின்றேன்.

***திருமதி. விமலராஜா கடம்பமலர்***

ஓய்வு நிலை அதிபர்

யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தீஸ்வராக்கல்லூரியில் மணி விழா நாயகியின் பதிவுகளில் சில







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விச் சேவையையே நோக்கமாகக் கொண்டவர் எங்கள் ஆசிரியர்

26.04.2019 அன்று மணிவிழாக் காணும் திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர் களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

மணிவிழா நாயகி நாகதீபம் என்று அழைக் கப்படும் நயினையம்பதியிலே பிறந்து அவ்வூரிலே ஆரம்பக்கல்வியில் தொடங்கி உயர் கல்வி வரை அவ்வூரிலேயே கற்றுத்தேர்ந்து சிறப்பு வர்த்தகப் பட்டதாரி ஆசிரியராக வெளியேறி அவரது இடத்திலேயே கல்விப் பணியைத் தொடர்ந்து இருந்தார்.

1995ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையின் நிமித்தம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தவர் 1996ம் ஆண்டு யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரிய குழாத்தில் எம்முடன் இணைந்து கொண்டார்.

இவர் எம்முடன் இணைந்த காலந்தொட்டு யா/இந்து இளைய தம்பிப் பாடசாலைக்கு அதிபராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும் வரை எமது கல்லூரிக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியது.

இவரது அடக்கம் பொறுமை, தன்நலம்அற்ற சேவை, பலன்களை எதிபாராது செய்யும் உதவிகள், கடமை உணர்வு, மாணவர்களை தன்பிள்ளைகள் போல் கருதி பிள்ளைகளுக்கு வழங்கிய கல்விச் சேவை என்பன இவரது சிறப்பம்சங்களுக்கு மேன்மேலும் மெருகூட்டுவதாக அமைந்தவையாகும்.

இவரது காலத்தில் எமது கல்லூரி பெற்றுக் கொண்ட பயன்கள் காலத்தால் அழியாதவை நல்ல மாணவர்களை உருவாக்கி சாதனை புரிய வைத்த ஆசிரியையின் மாணவர்கள் இன்றும் பல இடங்களில் உயர் பதவிகள் வகிப்பதை நன்கு அறிவேன்.

நான் பிரதி அதிபராக இருந்த காலத்தில் கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் என்னுடன் இணைந்து எனக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்ததை இன்றும் என்னால் மறக்க முடியாது. கல்லூரியிலிருந்து மருத்துவபீடத்திற்கும், சட்டக் கல்லூரிக்கும் தெரிவாகிச் சென்ற மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் இவருக்கும் பெரும் பங்கு உண்டு.

இவரது திறமையையும், ஆற்றல்களையும் அறிந்த அதிபர்கள் வர்த்தக மன்றப் பொறுப்பாசிரியராக, ஆசிரிய நலன்புரிச் சங்க செயலாளராக, ஒழுக்காற்றுக் குழு உறுப்பினராக, உயர்தர மன்ற உறுப்பினராக இணைத்துக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் இளையதம்பி இந்து வித்தியாலயத்திற்கு முதல்வராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற காலந் தொடங்கி மணிவிழாக் காணும் இன்று வரை சிறந்த நிர்வாகத்திறனுடையவராகவும் ஆசிரியர்கள் மாணவர்களுடன் நல்ல சமூக உறவைப் பேணுகின்றவராயும், கல்லூரியில் அதிக பற்று வைத்து அர்ப்பணிப்பான சேவை யாற்றியவராயும் பல மாணவ தலைமுறையினை நல்ல முறையில் வழிநடாத்தி சென்றவராயும், சிறந்த ஆளுமைத் தொடர்புடையவராகவும் உள்ள தமது முதல்வருக்கு கல்லூரி சமூகம் பெருவிழா எடுக்கும் இந்த வேளையில் நானும் வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பூரிப்படை கின்றேன்.

இவ்வளவு நல்ல அம்சங்கள் பொருந்திய எமது முதல்வர் நயினை அம்பாளின் ஆசியுடன் நீண்ட ஆயுளுடன் நோய் நொடியின்றி ஓய்வு காலத்தில் சிறப்பாக வாழவும் வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

*செல்வி ச.சின்னத்துரை*
முன்னாள் பிரதி அதிபர்
யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய தம்பிக்குக் கிடைத்த பொக்கிஷம் "வரதா" அம்மா

31 வருடங்கள் அர்ப்பணிப்புமிக்க, இணையில்லா சேவைபுரிந்து ஓய்வு பெறும் திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வு கொள்கின்றனர் எமது பாடசாலை ஆசிரிய நலன்புரிச்சங்கத்தினர்.

1988 இல் ஆசிரியராக நியமனம் பெற்று, ஆக்க பூர்வமாகச் செயற்பட்டு வருகையில் 2009 யூலை மாதத்திலிருந்து எமது பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்றார் வரதா அம்மா. தனது சேவைக்காலத்தில் எத்தனையோ தடைகள், சவால்கள், வளப்பற்றாக்குறைகள் வந்தபோதும் தனது ஆர்வம், ஆற்றல் ஆன்மீகத்தன்மையினாலே அத்தனையும் வென்று நிறுவனத்தை நேரிய பாதையில் வினைத்திறனாக நடத்திச் சென்றவர்.

எமது பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் இல்லை. இருப்பினும் இல்ல விளையாட்டுப் போட்டி யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்திலே இந்த அதிபர் தலைமையிலே வெகு சிறப்பாக நடந்தேறி வருகின்றமை யாவரும் அறிந்ததே. மாணவர்களிடையே மனித விழுமியப்பண்புகளை வளர்ப்பதற்கு நாளாந்த பிரார்த்தனைக் கூட்டங்களில் நற்சிந்தனைகள், பத்திரிகைச் செய்திகள், பொது அறிவு விடயங்கள் என்பன மாணவர்களைச் சென்றடைவதற்கு ஒழுங்கமைப்புச் செய்பவரும் இவரே. இதுமட்டும் இல்லை பிரதி வியாழக்கிழமைகள் தோறும் சத்திய சாயி நிறுவனத்திலிருந்து வருகை தரும் அன்பரால் சிறப்பான தலைப்புக்களிலேயே நற்சிந்தனைகளும் வழங்கப்படும். இவற்றையும் விட க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வில் மாணவர்கள் தமது பெற்றோர், ஆசிரியர்களிடமும் ஆசீர்வாதம் பெறும் நிகழ்வு எமது அதிபர் அவர்களின் வழிப்படுத்தலில் இடம் பெறுவது பாராட்டத்தக்கது.

மாகாண, வலய கல்வித்திணைக்களங்களிலிருந்து கிடைக்கின்ற சகல அறிவுறுத்தல்கள், கையேடுகள் யாவும் உரிய ஆசிரியர்களுக்கு, உடனுக்குடன் கிடைக்கச் செய்வதுடன் அவற்றை நடைமுறைப்படுத்தும் நிர்வாகத்திறன் துணிவு மெச்சத்தக்கது. கோட்ட, வலய ரீதியாக நடைபெறும் சகல போட்டிகளிலும் மாணவர் பங்குபற்றல் உறுதிப்படுத்தப்படுவதுடன் அவர்களை வாழ்த்தி அனுப்பும் அதிபரின் பாங்கு மகிழ்ச்சியளிக்கிறது.

மேலதிகாரிகளினால் பாடசாலை தொடர்பான தரவுகள் கோரப்படுமிடத்து, அவற்றைத் தெளிவாக அழகான எழுத்திலே உடனுக்குடன் அனுப்புதல் மற்றும் திட்டங்கள், அறிக்கைகள் தயாரித்தலும் முன்மாதிரியாகவே அமைந்திருக்கும் சிறப்பான வாசிப்புத்திறன், பேச்சாற்றல் என்பவை கூட அவரின் திறமைக்கு வலுச் சேர்க்கும்.

எமது பாடசாலை ஒரு குடும்பம் போன்று ஆசிரியர்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒரே குழுவாகச் செயற்படுவதற்கு வழிப்படுத்துபவரும் எமது அதிபரே. இவர் எமது பாடசாலையில் கடமையேற்ற ஆரம்ப காலத்துடன் ஒப்பிடும் போது தற்போது எவ்வளவோ பௌதீக வள அபிவிருத்திகள், கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றங்கள், க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றி உயர்தரத்திற்குத் தகுதி பெறும் மாணவர் எண்ணிக்கை அதிகரித்தல், மாணவர் வங்கிச் சேமிப்புக்கள், சுகாதார மேம்பாடு போன்ற செயற்பாடுகளூடாக பாடசாலை முன்னேற்றப்பாதையில் நடைபோட வழிவகை செய்தவரும் இவரே. மேலும் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவராக செயற்பட்ட திரு.கந்தையா நீல கண்டன் அவர்களின் தலைமையில் 2016ம் ஆண்டு நவெம்பர் 11ம் திகதி சிவத்தொண்டன் அணி எமது பாடசாலையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதன் பயனாக எமது பாடசாலையைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதி கிடைத்தது. அதாவது தவணை ஒன்றிற்கு மாணவர் ஒருவருக்கு ரூ 3000 வீதம் 2016, 2017 ஆண்டுகளில் கிடைத்தது. 2018ம் ஆண்டு ரூபா 2000 வீதம் வழங்கப்பட்டது.

இவை மட்டுமா பாடசாலையிலே வகை வகையான விழாக்கள் வரிசையாக நடைமுறைப்படுத்தப் படும். அதாவது தைப்பொங்கல் விழா, ஆடிப்பிறப்பு, சிறுவர் முதியோர் தின விழா, வாணி விழா, மணி விழாக்கள், பரிசளிப்பு விழா, தமிழ், ஆங்கில மொழி தின விழாக்கள் போன்றவற்றுடன் சமயக்குரவர்களின் குரு பூசை தினங்கள், முக்கியமான தினங்கள், வாரங்கள் மன்றங்கள் போன்றவை மூலம் மாணவர் களின் ஆளுமையை வளர்த்தெடுப்பதில் முன்னின்று செயற்படத் தவறமாட்டார் எமது அதிபர்.

பாடசாலையிலேயே சரஸ்வதி சிலையைத் தனது சொந்த செலவிலே அமைத்து மாணவர்களின் சமயப்பற்றிற்கு மேலும் வலுச் சேர்த்துள்ளமை பாராட்டிற்குரியது. இதனைவிட கிளிநொச்சி மாவட்ட நாடாடுமன்ற உறுப்பினர் உயர்திரு.ஈ.சரவணபவன் அவர்களின் கம்பறலியா - RRDP - 2019 பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ் கல்வி வலயத்தின் அனுமதியோடு நல்லூர் பிரதேச செயலகத்தால் எமது பாடசாலைக்கு நீர்வடிகட்டி இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. மாணவர்கள் சுத்தமான குடிநீரைப் பருக வேண்டும் எனும் நல்ல நோக்கத்திற்கு மேற்படி செயற்பாட்டிற்கு அதிபர் எடுத்த பெருமுயற்சி போற்றுதற்குரியது.

சுற்றுலாவை ஒழுங்கமைப்புச் செய்து மாணவர் மனங்களை மகிழ்ச்சிப்படுத்தவும் தவறவில்லை எமது அதிபர், ஆசிரியர்கள் வாண்மை விருத்தி பெறவும், வினைத்திறனுடன் செயற்படவும் தன்னாலான பங்களிப்பை வழங்கியே வந்துள்ளார். அதிபரின் உன்னத சேவைக்குச் சான்று பகர்வதாக அவரது பிள்ளைகள் வைத்தியராக, மென் பொருள் பொறியியலாளரார்களாக என உயர்தகைமைகள் பெற்றுப் பெற்றோருக்குப் பெருமை சேர்க்கின்றனர். இவரது கணவரின், மற்றும் பிள்ளைகளின் பாரிய ஒத்துழைப்பு இவரது அர்ப்பணிப்பான சேவைக்கு உறுதுணையாக அமைகின்றமைபோற்று தற்குரியது.

இவ்வாறாக பக்கச்சாராத, பழிவாங்கும் நோக்கமற்ற அர்ப்பணிப்பான சேவையை வழங்கி வந்த நல்லுள்ளங்கொண்ட அதிபர் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் ஓய்வுக் காலம் சிறக்கவும், மேலும் அவரது சேவை சமூகத்திற்குக் கிடைப்பதற்கு அவர் உடல், உள ஆரோக்கி யத்தைப் பெறுவதற்கு ஆண்டவனின் ஆசியை வேண்டிக் கொள்கின்றோம்.

***ஆசிரியர் நலன் புரிச்சங்கம் சார்பில்***
***தலைவர் திருமதி. ச. சண்முகநாதன்***
**யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுமையும் அர்ப்பண சிந்தனையும் மிக்க அதிபர்

இந்து சமுத்திரத்தின் நித்திலமென எல்லோராலும் போற்றிப்புகழப்படும் ஈழமணித்திரு நாட்டின் வடபால், யாழ்ப்பாண தீபகற்பத்தின் தீவுகளுக்கெல்லாம் சிகரமாய் மிளிரும், நன்செய் புன்செய் நிலவளம் மிகுதியாய் இல்லாவிடினும் பொன் செய் மனத்தினரின் புண்ணிய பூமியாம் நயினாதீவில் எண்ணிய தெல்லாம் கைகூடும் இறையருள் மிக்க தண்ணளி மரபில் வந்துதித்த எங்கள் இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் அதிபர் திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களின் மணிவிழா மலரில் எனது கருத்துப்பதிவு இடம் பெறக் கிடைத்தமை ஒரு பெரும் பேறாகும்.

நூற்றாண்டிற்கு மேலாக கல்விப்புலத்தின் கலங்கரை விளக்கமாய் திகழும் எமது வித்தியாலயத்தின் முதல்வராக சுமார் ஒரு தசாப்த காலமாக அரும் பெரும் பணியாற்றி 2019.04.26ல் ஓய்வு பெறும் எங்கள் வித்தியாலய அதிபர் அவர்கள் அதிபர் சேவையில் ஒரு தனித்துவமான நிர்வாக பாரம்பரியத்தை கட்டியெழுப்பிய ஒரு அதிபராவார். மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோரையும் ஒரு முக்கோணமாய் ஒன்றிணைத்து கல்வி வளர்ச்சியில் இப்பாடசாலையில் கணிசமான அளவு வெற்றியும் கண்டவர். எனினும் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்னும் அரச கொள்கைக் கேற்ப பாடசாலையை அபிவிருத்தி செய்வதில் பாடசாலைச் சமூகத்தின் குறைந்த விழுக்காடு ஒத்துழைப்பானது ஒரு துர்ப்பாக்கியமே.

மிகக் குறைந்த அளவிலான பௌதீக வளங்களுடன் கூடிய எமது பாடசாலையில் தமது பிள்ளைகளை ஒப்படைத்த பெற்றோரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு ஆசிரிய குழாத்தை கட்டியெழுப்புவதில் அவர் காட்டிய அக்கறையும் செயற்திறனும் விதந்து போற்றப் பட வேண்டிய ஒரு விடயமாகும். மாணவர்களின் இயல்பூக்கமான துறைசார் ஆற்றல்களை இனம் கண்டு அவர்களை அத்துறைகளில் பிரகாசிக்க வைக்க எண்ணும் அவரது விருப்புணர்வு அவர்தம் தூர நோக்கான சிந்தனைக்கு எடுத்துக் காட்டாகும்.

எமது பாடசாலை ஆசிரிய குழாத்தின் எதிர்கால படிநிலை வளர்ச்சிகளுக்கு ஏதுவாக நிர்வாகத்தில் சட்டத்திற்கமைவான தளர்வுகளுக்கு இடமளிக்கும் அதேவேளை ஒரு சிறந்த நிர்வாகியாகவும் திகழ்ந்து, மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி நெறிபிறழா ஒழுக்க விழுமியங்களையும் பின்பற்றும் இயல்பினராக மாணவர்கள் திகழ வேண்டும் என்பதிலும் அவர் குறியாக இருந்தார். மொத்தத்தில் ஒரு சிறந்த வித்தியாலய முதல்வராக தனது சேவைக்காலத்தின் இறுதி நாள் வரை பணி யாற்றி ஓய்வு பெறும் அதிபர் அவர்களது எதிர் காலம் சீரும் சிறப்பும், பேரும் புகழும் மிக்கதாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

*திருமதி. சு. பஞ்சலோகரஞ்சன்*
**ஓய்வுநிலை ஆசிரியர்,**
**யா/இளைய தம்பி இ.வித்தியாலயம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உள்ளத் தனையது உயர்வு"

**"வெள்ளத்தனையது மலர்நீட்டம் – மாந்தர்தம்**
**உள்ளத்தனையது உயர்வு"**

என்றார் வள்ளுவ நாயனார். அவரது குறளமுதம் அன்றும், இன்றும், என்றும் பொருள் பொதிந்த மாணிக்கம் ஆகும். அதாவது ஒரு பூமரத்திற்கு எவ்வளவு நீர் இறைக்கிறோமோ அவ்வளவு உயர்வாக நீண்டு வளரும். அதே போல மனிதர்களது மனம் எவ்வளவு உயர்வாக நினைக்கின்றதோ அவ்வளவுக்கு அவன் வாழ்வில் உயர்வடைவான் என்பதை உணர்த்துகின்றது. மனிதனை இயக்கும் ஆளி (Switch) மனம் என்றால் மிகையாகாது. **"மனம் உண்டானால் இடம் உண்டு"**, **"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து"** என்ற பொன்மொழிகள் இதனையே குறித்து நிற்பவை ஆகும். மனிதன் உயர்ந்த மனிதர்களை முன் மாதிரியாக வைத்து, அந்த இலட்சியத்தை மனதிற் கொண்டுதான் முன்னேறுகின்றான். இதனையே **"வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடி"** என்று சொல்வார்கள்.

மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து 3000 பாடல்களை உள்ளடக்கிய திருமந்திரத்தை பாடியவர் திரமூலர். அதில் ஒரு பாடல்

**"ஒன்றென்றிரு தெய்வம்**
**உண்டென்றிரு உயர்செல்வம் எல்லாம் ...............**
**மனமே உனக்கு உபதேசமிதே"**

என்று பாடியுள்ளார். அதிலிருந்து மனத்திற்கு தான் இயக்குகிறசக்தி உண்டு என்பதை அறியலாம்.

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்....."**

என்றும் பாடியுள்ளார். உள்ளமே பிரதானமான உறுப்பு என்பதை இதிலிருந்து அறியலாம்.

**"அறஞ் செய விரும்பு"** என்றார் ஔவையார். **"மனத்துக் கண் மாசிலனாதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற"** என்றார் திருவள்ளுவ நாயனார். அறமாவது மனம் மாசில்லாது இருப்பதே என்பது தான் அவர் கூறியதாகும். அதாவது உளத்தூய்மையே அறம் என்றார். அறம் செய்ய பொருள் பொன், பணம் எதுவும் தேவையில்லை. உளத்தூய்மையுடன் இருந்தால் அதவே அறமாகும் என்றார்.

யா/இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் மகுடவாசகம் **"உள்ளத்தனையது உயர்வு"** என்பதாகும். கல்வி கற்பதனால் மனம் பண்பட்டு உள்ளம் உயர்வாக எண்ணவேண்டும் என்பதையே இது உணர்த்துகின்றது. இப்பாடசாலைக்கு அதிபராகப் பதவியேற்ற திருமதி வரதலட்சுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரேசபிள்ளை அவர்கள் இப்பாடசாலையை முன்னேற்ற வேண்டும் என்ற உயர்ந்த உள்ளத்துடன் அனவரதமும் பணியாற்றினார். அவரது காலத்தில் பாடசாலை எல்லா விதத்திலும் பல்வேறு முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. தமிழ்த்தினம், ஆங்கில தினம், சமூகவிஞ்ஞானப்போட்டி, விரைவு கணிதம், தரம் 5 புலமைப் பரிசில், தரம் 11 மாணவர் பெறுபேறு ஆகிய ஒவ்வொரு துறைகளிலும் இளையதம்பி இந்து வித்தியாலயம் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளது என்றால் மிகையாகாது. நல்ல குடும்பத்தலைவியாக, சிறந்த அம்மாவாக இருந்து கொண்டு அதே சமயம் தான் பொறுப்பேற்ற பணியையும் திறம்படச் செய்தவர். சிறந்த ஆசிரியராக நல் அதிபராகப் பணியாற்றி அகவை அறுபதை எட்டியுள்ளார். பல நன்மாணக்கரை, சிறந்த சமுதாயச் சிற்பிகளை உருவாக்கியவர். அவரிடம் கல்வி பயின்ற பலர் நல்ல நிலையில் இருந்து கொண்டு தமது ஆசானை வாழ்த்தி வணங்கி நிற்கின்றார்கள்.

எந்த ஒரு செயலையும் எடுத்த எடுப்பில் செய்யாது பலருடன் கலந்தாலோசித்து சீர்தூக்கிப் பார்த்தே செய்வார். உண்மையில்

**"எண்ணித்துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவமென்பதிழுக்கு"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இணங்க செயலாற்றுபவர். சித்திரமும் கைப்பழக்கம் என்பார்கள். இவரது எழுத்துக்களின் அழகும், அளவும் யாரையும் மெய்சிலிர்க்கச் செய்யும். எந்தச் சர்ந்தர்ப்பத்திலும் கிறுக்கல் எழுத்தாக எழுத மாட்டார். அழகாக யாருக்கும் எளிதில் புரியும்படி எழுதுவார். அத்திறமை அவருடைய உயர்வுக்கும் பெருமைக்கும் காரணமானது எனலாம்.

மணிபல்லவம் என்று புகழப்படும் நயினை நாகபூசனி அம்மன் அருளாட்சி புரியும் புனித பூமியிலே அவதரித்தவர். உண்மையிலே அந்த அம்பாள் தான் மனித உருவெடுத்து வந்தாரோ என்று எண்ணும் படியான தோற்றப் பொலிவைக் கொண்டவர்.

**"மெய்வருத்தம் பாரார், கண்துஞ்சார், பசிநோக்கார்**
**கருமமே கண்ணாயினார்"**

என்று சொல்வார்கள். அவ்வாறான ஒருவராகத் தான் எமது அதிபர் அவர்களும் திகழ்ந்தார். அவரது அயராத உழைப்பால் இளையதம்பி இந்து வித்தியாலயம் கடந்த பத்து வருடங்கள் சிறந்து விளங்கியது என்றால் அது மிகையாகாது. அவரும் அவரது துணைவரும் நீண்டகாலம் தேக ஆரோக்கியத்துடன் மகிழ்வாக பிள்ளைகளின் குடும்பத்தினரின் சீர்சிறப்புக்களுடன் வாழ நயினை நாகபூசணி அம்பாளின் அருளாசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

நன்றி

*திருமதி.த. இலட்சுமி காந்தன்*
**ஓய்வு நிலை ஆசிரியை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையதம்பி இந்துவில் இனிய பதிவுகள்......

01.07.2009 அன்று யா/இளையதம்பி இந்து வித்தியாலய ஆசிரியர்களின் ஆரார்த்தியுடன் இன்றைய மணிவிழா நாயகி திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள் அன்று மருத்துவபீட மாணவராக இருந்த தன் புதல்வனுடன் அயற் பாடசாலை அதிபர்களுடனும் வரவேற்கப்பட்டார்.

இப் பாடசாலையில் அதிபராக கடமையேற்ற விழா நாயகி அன்றைய தின உரையின் போது தான் இப்பாடசாலையில் தன்னாலான அர்ப் பணிப்புடன் கூடிய சேவையை ஆற்றுவேன் எனக்கூறிக் கொண்டார் அதற்கிணங்க பாட சாலையில் புதிய அதிபரின் வரவானது பாடசாலை யில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது குறைந் தளவிலான பௌதீக வளங்களையும், வறுமை யில் வாழும் மாணவர்களையும், கூலித் தொழி லில் ஈடுபடும் பெற்றோர்களையும் கொண்ட இப் பாடசாலையானது இவருக்கு பெரும் சவாலாக அமைந்தது. எனினும் அவரது விடாமுயற்சியும், இம் மாணவர்களையும் இப் பாடசாலையையும் எவ்வாறாவது முன்னேற்றத் தூண்டியது எனலாம்.

தான் பாடசாலையைப் பொறுப்பேற்றவுட னேயே கட்டிடங்கள் அனைத்தையும் பலவர்ணப் பூச்சுக்களுடன் கண்ணைக் கவரும் வகையில் கவின் நிலையாக்கினார். அத்துடன் திருத்தி யமைக்கப்பட்ட கழுத்துப்பட்டியும் நேர்த்தியுடன் கூடிய சீருடையும் மாணவர்களை ஓர் உன்னத நிலைக்கு இட்டுச் சென்றது. அத்துடன் பல்வேறு தொண்டு நிறுவனங்களை அணுகி மாணவர் களுக்கு தேவையான கற்றல் உப கரணங்கள், காலணிகள் என்பவற்றையும் பெற்றுக் கொடுத்து மாணவர்களை இருந்த நிலையிலும் இன்னும் ஒருபடி உயர்த்தி பெருமகிழ்ச்சியடைந்தார்.

இவ்வாறாக இப் பாடசாலை சிறுசிறு மாற்றங் களை தினமும் பெற்று அழகிய கலைக் கூடமாக மாற்றப்பட்டது. மேலும் கணனி அறை, சமைய லறை, மாணவர்களுக்கு ஒழுங்காக சீராக அமைக்கப்பட்ட குழாய் நீர் வசதி திருத்தப் பட்ட மலசலகூடம், பாடசாலை வளவிற்கான மதில் கள் என்பவை அமைத்த பெருமையும் அதிபர் அவர்களையே சாரும்.

பாடசாலையுடன் தொடர்புபட்ட உதவியாளர் களையும், பழைய மாணவர்களையும் இனம் கண்டு அவர்களை பாடசாலைச் சமூகத்துடன் ஒன்றிணைத்து அவர்கள் மூலம் சுவாமி அறை, மேடை என்பவற்றை திருத்தி அழகாக்கியதுடன் பாடசாலைச் சுவர்களில் ஓவியம் வரைதல் போன்ற செயற்பாடுகளையும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் செய்து முடித்து வெற்றி கண்டார்.

பாடசாலை பௌதீக வளமேம்பாடு ஒரு புறமும் மாணவரின் அடைவுமட்ட மேம்பாடு இன்னொரு புறமாகவும் முன்னேற்ற மடைந்து காணப்பட்டது எனலாம் அதாவது மாணவர் களின் ஆன்மீக மேம்பாட்டை விருத்தி செய்வதற் காக பல்வேறு சமய தொண்டு நிறுவனங்களை உள்வாங்கி அவர்களின் மூலம் நற்சிந்தனை, தியானங்கள் என்பவற்றை மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்து மாணவர்களுக்கு பெருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டாற்றினார். சமயப்பற்றும் கடவுள் நம்பிக்கையும் கொண்ட இவர் மாணவர்களையும் அவ் வழியில் வளர்ப்பதற்கு காட்டும் அக்கறைக்கு இவரால் இங்கு நடாத்தப்படும் காலைப் பிரார்த்தனை சான்றாக அமைகின்றது.

மேலும் மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தை மேம்படுத்துவதற்காக தன்னாலான முழு ஒத்துழைப்பும் வழங்குவார். கல்வி திணைக்களத்தினாலும் சரி, வேறு நிறுவனங்களினாலும் சரி நடைபெறும் போட்டிகளில் எல்லாம் மாணவர்களை பங்கு பற்ற வைப்பதற்காக அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி நீங்கள் ஒரு விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல உங்களால் எல்லாம் முடியும் என அடிக்கடி கூறி அவர்களை உற்சாகப்படுத்தி அவர்களை சவால்களை எதிர் கொள்ளும் மாணவர்களாக வழிப்படுத்தி வளர்த்துள்ளார் என்பதற்கு இன்று இப்பாடசாலையில் இருக்கும் மாணவர்கள் சான்றாக அமைகின்றனர்.

இவ்வாறான அதிபரின் அர்ப்பணிப்பான சேவைக்கு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள், க.பொ.த (சா/த) பெறுபேறுகள் என்பன சான்றாக அமைகின்றன. அத்தோடு அதிபர் அவர்களின் நிர்வாக திறனில் அவர் தன்னுடைய ஆளுமையை வெளிப்படுத்த தவறவில்லை அதாவது கோவைப்படுத்தல், ஆவணப்படுத்தல், ஒழுங்கமைத்தல், நேர்த்தியான முத்துப் போன்ற எழுத்துக்களால் பதிவு செய்தல் போன்ற செயற்பாடுகளில் அவருக்கு நிகர் அவரே தான் என்று கூறினால் மிகையாகாது.

மணிவிழா நாயகியாம் அதிபர் திருமதி. வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்கள் தான் கடமையேற்ற நாள்முதல் தான் ஓய்வு பெறும் வேளையில் கூட அதாவது இளைப்பாறுவதற்கு ஒருவாரம் இருக்கும் வேளையிலும் சரஸ்வதி சிலை நிர்மாணிப்பு, பாடசாலை வாயில் அமைப்பு, பாடசாலை வாயில் முகப்பு வளைவு, நீர்வடி இயந்திரம் பொருத்துதல் போன்றவற்றை அமைப்பதற்கு காரணகர்த்தாவாக இருந்து செயற்பட்ட தன்மையானது அவர் ஓய்வு பெறும் வரை ஓயாது உழைத்தமைக்கு சான்று பகருகின்றது.

அந்த வகையில் நான் பார்த்த முதல் பெண் அதிபராகவும், பொன் அதிபராகவும் அவர் என்றும் என் மனதில் நிலைத்திருப்பார்

***திருமதி. ய. ஜெயக்குமார்***
ஆசிரியர்,
யா/திருநெல்வேலி றோ.க.த.க.பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் எனக்கோர் குழந்தை ......

முத்தையா சோதிமணி முதல் மகளாய்ப் பிறந்தாள்
மூவிரண்டு சோதரரின் முகம் பார்த்து மகிழ்ந்தாள்
வித்தகத்தில் வர்த்தகத்தை வேட்கையுடன் பயின்றாள்
உத்தமமாம் குருத் தொழிலில் உன்னதமாய்த் திகழ்ந்தாள்

கற்றவர்கள் நெஞ்சமதில் கலையாத கோலம்
கதிரேஸ் மாஸ்ரரவர் காதல்புரி மனையாள்
நற்றவத்தில் பூத்த மலர் மூன்று அதன் மணத்தில்
நாளெல்லாம் மகிழ்த்திருப்பாள் நல்லதொரு தாயாய்

ஆசிரியப் பணி தொட்டாள் அறிவுலகைப் படைத்தாள்
அருக்கன் போல் அவள் ஒளியில் விழித்தெழுந்தவர் பலபேர்
சீரிய நல் உலகமொன்றைச் சிந்தனையில் நிறுத்தி
சிறந்த பெரும் சேவை செய்தாள் ஆசிரியராக

ஆசிரியப் பணியிலுயர்ந் ததிபரென ஆனாள்
ஆளுமையாய் அப்பணியின் அணிகலனாய் மிளிர்ந்தாள்
எழில் குன்றி நின்ற யாழ் இளையதம்பிச் சாலையதை
எழும்பி நடமாட வைத்த திவளுடைய சேவை

அன்போடு அறம் கலந்த அறிவுலகைப் படைக்கும்
ஆசிரியப் பணிதொட்டு அதிபராய் விடுத்தாள்
அறுபதைத் தாண்டுகின்றாள் அவள் எனக்கோர் குழந்தை
அணைத்துவிடத் தாவுகின்றேன் அவள் அருகில் இல்லை

வாழ்த்துரைக்க வந்தவர்கள் வரிசையினில் நின்று
வளமாக வாழ்க என வாழ்த்துகிறார் இன்று
வாழ்நாளில் நீ செய்த அளப்பரிய தொண்டு
வாழ வைக்குகும் பலபேரை வையகத்தில் என்றும்
"வாழ்க வளமுடன்"

*திருமதி. திலகவதி ஆறுமுகம்*
*குஞ்சியம்மா*
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைப் பதிவுகளிற் சில











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய மாணவி Dr. தாரணி குருபரன் அவர்களால்
அன்பளிப்புச் செய்யப்பட்ட பான்ட் வாத்தியம் மற்றும்
அணியினருடன் மணி விழா நாயகி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பாடசாலை அதிபர் கதிரேசபிள்ளை வரதலட்சுமி அவர்களின் பணி நிறைவு வாழ்த்துரை

அதிபர் அலுவலகத்தை அழகுற வடிவமைத்தீர்கள்
ஆசிரியர் கூட்டத்தையும் அடிக்கடி நடாத்துவீர்கள்
பழைய மாணவர் சங்கத்தை வலம் பெற வைத்தீர்கள்
பாடசாலை அபிவிருத்திக்குழுவையும் பண்புடன் கையாண்டீர்கள்
விசேட கல்வி அலகை விசேடமாகக் கவனிப்பீர்கள்

விருப்புடனே யாவரையும் பள்ளி வர வைத்தீர்கள்
பரிசளிப்பு விழாவையும் பாங்குடனே நடாத்துவீர்கள்
விளையாட்டுப் போட்டியையும் விமர்சையாகச் செய்வீர்கள்
மலசல கூடத்திற்குச் சென்றால் வழுக்கி விழாமல் வடிவமைப்பீர்கள்
மாணவர் குடிநீரிடத்தையும் வண்ணமாய் வடிவமைத்தீர்கள்
பாடக்குறிப்பு எழுதாதவர்களையும் எழுத வைத்தீர்கள்
வடை, பாயாசத்தோடு வாண்மையுடன் உணவழிப்பீர்கள்
கையெழுத்து கொப்பிகளை கையருகில் வைத்திருந்து மலையளவு
விடயத்தையும் திணையளவு சாதித்தீர்கள்
மாணவர் பாராளுமன்றத்தை மாண்புடன் நடாத்தினீர்கள்

பெற்றோர் சந்திப்பை அடிக்கடி நடாத்தினீர்கள்
பிள்ளைகளின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்தீர்கள்
நேரப்பதிவு இயந்திரத்தை நேரத்துடனே பூட்டினீர்கள்
இணைபாடவிதானத்தில் இன்பம் செலுத்தினீர்கள்
வரவொழுங்கை வலியுறுத்தி வகுப்பாசிரியருக்கு உதவினீர்கள்
நின்றவை இருந்தவை எல்லாம் லொக் புக்கில் பதித்தீர்கள்
மொத்தத்தில் நிர்வாகம் செய்வது எப்படி என நிதானத்துடன் அனைவருக்கும் உணர்த்தினீர்கள்

தலைமைத்துவம் என்பதையே தன்னிகர் இல்லாததாக
ஆற்றிய கதிரேசபிள்ளை வரதலட்சுமி அம்மணி
100 ஆண்டுகள் அவரது குடும்பத்துடன் நோய் நொடி இன்றி சந்தோஷத்துடனும்
சௌபாக்கியத்துடனும் வாழ அன்போடு கோடி வாழ்த்துக்கள்

***திருமதி. சந்திரமோகன் நிவேதினி***
பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் சிகரமாய் உலாவரும் காரிகையே ....

அன்பின் சிகரமாய்
கடமையின் பிறப்பிடமாய்
திடமான மனதுடைய
கடின உழைப்பாளி அம்மையே
(அன்பின் சிகரமாய்)

சிறந்த அன்னையாய்
அன்பின் சகோதரியாய்
உண்மையின் உறைவிடமாய்
உலாவரும் காரிகையே
(அன்பின் சிகரமாய்)

பரந்த மனப்பாங்குடன்
சிரம் நிமிர்ந்த சேவையுடன்
கடமையே கண்ணியமாய்
நிறைவான ஆற்றலுடையவரே
(அன்பின் சிகரமாய்)

சாடிக்கேத்த மூடியாய்
கதிரேசபிள்ளையின் பத்தினியாய்
பதி போற்றும் உத்தமியாய்
வரம் பல பெற்ற வரதலட்சுமியே
(அன்பின் சிகரமாய்)

முத்தான மூன்று பிள்ளைகளுடன்
குடும்பத்தின் கடமையையும்
ஓடுகிற வாழ்க்கைச் சக்கரத்தில்
கடும் உழைப்புடன் வெற்றி கண்டீர்
(அன்பின் சிகரமாய்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்தவன் டாக்டராய்
அடுத்தவன் IT யில் வல்லவனாய்
இளையவள் கடைக்குட்டியை
மென்பொருள் பொறியியலாயராக்கியே பெருமை கண்டீர்
(அன்பின் சிகரமாய்)

வைத்தீஸ்வராக் கல்லூரியில்
எழுத்தறிவித்த இறை ஆசானாய்
அன்புடன் கொண்ட கண்டிப்புடன்
உன்னத வெற்றி பெற்றீரே
(அன்பின் சிகரமாய்)

மாணாக்கர் பலரின்
மனங்களில் இன்றும்
நீறு பூத்த நெருப்பாக
சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நாயகியே
(அன்பின் சிகரமாய்)

சிறந்த தாயாய்
பக்குவமான பத்தினியாய்
கடமையுடன் கூடிய ஆசிரியராய்
நிர்வாகத் திறமை கொண்ட அதிபரே
(அன்பின் சிகரமாய்)

பல முகங்களில் உலா வந்து
தரணி போற்றும் நாயகியாய்
பிரியாது விடைபெறும் இந்நாளில்
குடும்பத்தாருடன் பார்வதி பரமேஸ்வரன் போல்
நீடுழி வாழ வாழ்த்துகின்றேன்.

நன்றி

***திருமதி. தில்லைரஞ்சினி கணேசமூர்த்தி***
ஆசிரியை
யா/உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்தாய்

உலகின் அழியாச் செல்வமாம்
கல்விச் செல்வமதை
நலமாய் எமதூர் பெற்றிடவே
தமது பணியைச் செய்திட்டார்.

யாழ் இளையதம்பி இந்து
வித்தியாலயத்தை
சூழ் ஒளிவீசி வளர்த்திடவே
அயராது இவர் உழைத்திட்டார்.

புலமை பரிசில் பரீட்சையிலே
பலரை மிளிர வைத்திட்டார்.
கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையிலும்
நல்விதப் பேறுகள் பெற வைத்தார்.

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிவுடன் என்றும் நடந்திடுவார்
ஆலம் விழுது போல் அனைவரையும்
கரம் கொடுத்தெம்மைக் காத்திடுவார்.

கலங்கரை விளக்காகக் கரைசேரவைப்பார்
பலவித கலைகளில் பரிமளிக்க வைப்பார்.
செயற்பட்டு மகிழ்ந்வோம் நிகழ்வதனை
திறம்படச் செய்து சிறாரை மகிழ்விப்பார்.

முப்பெருந் தேவியர் அருள்பெற்று
எப்போதும் நல் வாழ்வு பெற்று
பல்லாண்டு காலம் பணி செய்து
சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

ஆண்டவன் அருள் பெற்று
அகல் விளக்கெனச் சுடர்விடவே
மணி விழா நன்னாளில் நாம்
மகிழ்வுடனே வாழ்த்துகின்றோம்.

***திருமதி. உ. பேரானந்தம்***
பழைய மாணவி யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்
ஓய்வு நிலை ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைப் பதிவுகளிற் சில








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழா நாயகியின் சேவைக்காலத்தில் பாடசாலை நிகழ்வுகளின் சில பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவாழ்வு வாழ்க என வாழ்த்துகின்றோம்

கல்விக் கூடத்தில் திறம்படப் பணி செய்த
ஆர்வமும் திறனும் ஆற்றலும் நிறைந்த
அதிபராம் வரத லட்சுமியே
மணிவிழா நாயகியே !

நின்றுசீர் வாழும் இளையதம்பி - தமிழ் இந்து வித்தியாலயமாம்
நிறைவுடன் நிலைத்த இப் பள்ளி
என்றுமே - எய்தாப் புதுநிலை எய்தி
இருந்த காலம் நின்னுடைத்தே - நீவிர்கேளும்

கருத்திலே எமை செயற்படுத்த எண்ணி
சொல்லில் திறமையின் செறிவில்
தனிச் சிறப்புக் கொடுத்தீர் - அதனால்
எம் மனம் புண்பட்டதில்லை

அன்புதனை ஆயுதமாக்கி - எம்மை
அரவணைத்து அறிவூட்டி வழிகாட்டி
தரத்திலும் சிறந்து தகுதிகள் நிறைந்து
அகவை அறுபதை அடைந்து நிற்கும்
உருவினுள் உறை உத்தமியே
உண்மைக்காய் வாழும் வரத லட்சுமியே

அன்புறவே உதவி நல்கி - கவினுறவே
பெருவாழ்வு பெற்று வாழி !
இப்புவியில் இணையில்லா அதிபர் - நீங்களென
இங்குள்ளோர் நாளும் போற்ற
நிறை வாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
வாழி ! வாழி !

அன்புடன் வாழ்த்தும்
தரம் 11 மாணவர்கள் சார்பில்
***ம. விபோசினி***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமை வடித்த அதிபர்

மாதா ! பிதா ! குரு ! தெய்வம் ........
இந்த வரிசையில் எந்த இடம் உங்களுக்கு?
அரவணைப்பில் அன்னையாய் ...
அறிவுரை கூறுவதில் தந்தையாய் .......
அறியாமை அகற்றுவதில் ஆசிரியராய் ....
அருளோடு காக்கும் தெய்வமாய் ....

நான்கையும் ஓரிடத்தில் உம்மிடத்தில்
கண்டேன் - தாயவள் நீங்களென்றோ
இலட்சுமி எனக்குப் பிடித்த தெய்வம்
வரதலட்சுமி எமை வடித்த அதிபர் !

தெய்வத்தின் பெயர் கொண்டதனால் - எமக்கு
அதிபரை பிடித்ததா - அன்றி
அதிபரின் பெயரால் - அந்த
தெய்வத்தைப் பிரடித்ததா? புரியவில்லைத்தாயே

சோதித்துப் பார்க்கிறேன் என்ற இறைவனிடம்
சாதிக்க வைக்கின்றேன் என சவால் விடுத்த
உன்னத அன்பின் உயிர் வடிவம் நீங்கள் ....
உங்கள் பிரிவினில் தான் உணர்கின்றேன்

அளவுக்கு மீறினால் அன்பும் கூட நஞ்சு என்று
எனினும் நேசிப்பரெல்லாம் நம்முடன் நிலைத்துவிட்டால்
பிரிவின் மொழியும், அன்பின் வலியும் தெரியாது போய்விடும்.
அன்று வேறொரு கூட்டில் வாழ்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் மாடப்புறா - இன்று
மணிப்புறாவாக, மணப்புறாவாகத் திகழ்கின்றது
அதனை எண்ணி மகிழ்கின்றேன்.

வாழ்த்துதற்கு வயதில்லை - அதனால்
நானும் வாழ்த்துகின்றேன்
உங்கள் உள்ளம் போல் - வாழ்ந்து
வழிகாட்ட இறைவனை வணங்குகின்றேன்
உறவின் பாலமதை விருட்சமாக்க
வாழ்க பல்லாண்டு

தங்கள் அன்புக்குரிய மாணவன்
*தெ.திசங்கள்*
*தரம் - 11*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் தரமேம்பாட்டிற்கு அதிபரின் பங்களிப்பும், பொறுப்பும்


***கலாநிதி. திருமதி. ஜெயலட்சுமி இராசநாயகம்***
**தலைவர்,**
**கல்வியியற்றுறை,**
**யாழ் பல்கலைக்கழகம்**


## அறிமுகம்

நவீன நூற்றாண்டின் கல்வி சார் சென்நெறிகள் ஒவ்வொரு வரிடமும் கல்வி தொடர்பான விழிப்புணர்வையும், புத்தாக்க சிந்தனைகளையும் ஏற்படுத்தி வருகின்றன. இதனால் கல்வியுலகில் மாற்றங்கள் தவிர்க்க முடியாததுடன் வளர்ச்சி வேகமும் அதிகரித் துச் செல்கின்றன. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்ட கல்வி சார்ந்த மாற்றங்களையும், குறிக்கோள்களை யும் நிறைவு செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு நிறுவனமே பாடசாலையாகும். இங்கு மாணவர்கள் தம் எதிர்கால வளர்ச்சிக்கேற்ப பல்வேறு வகையான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். மாணவர்கள் மத்தியில் தலைமைத்துவம், குழுவாகச் செயற்படுதல், கருத்து ஒருமைப்பாடு, செய்முறை ஒழுங்கமைப்புத் திறன்கள், ஏனையோரிடத்தில் அக்கறை கொள்ளல், நீதி, நேர்மை, சேவை, அன்பு போன்ற விழுமியங்களை பாடசாலைகளினூடாகவும், கலைத் திட்டத்துடன் இணைந்த இணைப்பாடவிதான செயற்பாடுகளை வளர்ப்பதன் மூலமாகவும் வளர்க்க முடிகின்றது. ஒரு பிள்ளை தனது வாழ்க்கைக் காலத்தில் பெற வேண்டிய அனைத்துப் பயிற்சிகளையும் பெற்றுக்கொள்கின்ற ஒரு இடமாகப் பாடசாலை விளங்க வேண்டும். எல்லா நாடுகளும் பாடசாலைக் கல்வியினூடாக நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்த முடியும் என நம்புகின்ற நிலையிலே அதற்கென திட்டமிட்ட கல்விச் செயற்பாடுகளை முன் னெடுத்து நடைமுறைப்படுத்தும் பாரிய பணியும் பாடசாலைகளைச் சார்ந்ததாகும். கல்வியின் குறிக்கோள்களையும், இலக்குகளையும் அடைந்து கொள்வதற்காக உருவாக்கப்பட்ட கல்விசார் நிறுவனமே பாடசாலையாகும். இத்தகைய நிறுவனத்தின் சகல நடவடிக்கைகளையும் நிர்வகிக்கும் நிர்வாகி அப் பாடசாலையின் அதிபராவார்.

## தர மேம்பாடு – வரைவிலக்கணம்

குறிப்பிட்ட ஒரு பாடசாலையோ அல்லது ஒரு நிறுவனமோ ஒப்பீட்டளவில் இதுவரை உள்ள நிலையில் இருந்து ஒரு படி மேலே வளர்ச்சி பெறுதல் அந் நிறுவனத்தின் தர மேம்பாடு ஆகும். அதாவது தரமான உள்ளீடுகளைப் பெற்று அதன் மூலம் சிறப்பான செயற்பாடுகளை மேற்கொண்டு தரமான வெளியீடுகளை வழங்கும் நிலையில் பாடசாலைகள் அமைய வேண்டும். கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் நுகரப்படும் எல்லாப் பொருட்களும் தரமான உள்ளீடுகளாகும். அதேவேளை தரமான உள்ளீடுகள் ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்படும் பட்சத்தில் அதன் விளைவு தரமான வெளியீடுகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர்களின் வகிபங்கு

தரமான பாடசாலைக்கு தரமான கல்வி என்பதற்கு இணங்க ஒரு பாடசாலையின் கல்வி சார்ந்த வெற்றிக்கு அங்கு கடமையாற்றும் அதிபரும் ஆசிரியர்களும் முக்கிய பங்குதாரர் களாக விளங்குகின்றார்கள். இன்று பாடசாலை கள் மத்தியில் போட்டி அதிகரித்து வருகின்றது. இதனால் பாடசாலைகள் வளர்ச்சியை எதிர் கொள்கின்றன. கல்வியின் தரம் பெரும்பாலும் ஆசிரியர்களையே சார்ந்துள்ளது. ஆகவே தரமான கல்வி எல்லாப் பிள்ளைகளுக்கும் வழங்கப்படு கின்றதா என்ற வினாவிற்கு விடையளிப்பவர் பாடசாலை அதிபராகையால் இவ் விடயத்தில் தரம் என்பதை உறுதி செய்தல் அதிபரின் கடமையாகும். ஆகவே அதிபர் சிறந்த ஒரு முகாமையாளராக விளங்க வேண்டுமானால் பாடசாலையின் கல்வி அபிவிருத்தியிலும், ஏனைய செயற்பாடுகளிலும் அக்கறை யுடைய ஒருவராக விளங்க வேண்டும். பாடசாலையினூ டாக சமூகத்தின் பாரிய வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு செயற்படும் அதிபர் பல்வேறு வகிபா கங்களை ஏற்றுச் செயற்பட வேண்டும். நவீன தேவைகளைக் கருத்திற் கொண்டு பொருத்த மான மாற்றங் களையும், தந்திரோபாயங்களை யும் எதிர் கொண்டு பாடசாலையை விளைதிற னுடை யதாக மாற்ற வேண்டும்.

அதிபர் என்பவர் முதல் நிலை முகாமை யாளராவார். பாட சாலையின் எந்த விளைவிற் கும் பதில் கூற வேண்டிய கடமைப்பாடு அவருக் குண்டு. பாடசாலையில் கிடைக்கும் வளங்களை மிகவும் உச்சமாகப் பயன்படுத்தி அப் பாட சாலையை வினைதிறன் உடைய ஒரு பாட சாலையாக மாற்றியமைப்பதும் ஒரு அதிபரின் சிறந்த முகா மைத்துவத்திலேயே தங்கியுள்ளது. இன்று பாடசாலைகள் பல் வேறு வழிமுறை களிலும் முயன்று தமது செயற்பாட்டை முன் னேற்றகரமான பாதைக்கு திசை திருப்பியுள் ளன. பாடசாலைகள் குறிக்கப்பட்ட இலக்கினை அடைதலையே தம் குறிக்கோளாகக் கொண் டுள்ளன. ஆனால் பாடசாலை எச் சமூகத்தில் அமைந்துள்ளதோ அது அச் சமூகத்தின் பண் பாடு, மக்கள் வாழ்க்கை முறைகள், சமூகத்தின் தேவைகள் போன்றவற்றைக் கருதியே தம் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். அத்தகைய நிலையிலேயே பாடசாலையானது தரமேம்பாட்டை உறுதி செய்து கொள்கின்றது.

தரம் (Quality) என்ற சொல் உயர் அடைவைக் குறிப்ப தாகும். இந்த உயர் அடைவு என்பது பல விடயங்களை உள்ளடக்கியது. சொல்லாற்றல், எண்ணாற்றல், ஒன்றைப்பார்த்து அதனை உருவாக்குதல், புதியன படைத்தல், கற்பனை செய்தல், தவறின்றி செய்தல் போன்ற மனிதத் திறமைகளும் ஆற்றல்களும் பலவாகும். இத்தகைய செயற்பாடுகள் எல்லாம் கல்வியில் முக்கியமான அம்சங்களாகக் கருதப்பட்டு அவற்றில் தேர்ச்சி பெறும் நிலை ஏற்படும் போது அது தான் உயர் அடைவாகக் கருதப்படும். இன்று தொழில் நுட்பரீதியான முன்னேற்றங்கள் கல்வி நிலைக்கு ஒரு சவாலாக அமைந்து விட்டன. இதனால் அதிபர்களின் பணி மிக முக்கியமாகக் கருதப்பட்டு அவர் ஒரு முதன் நிலை முகாமையாளராகக் கருதப்படுகின்றார். இதனால் நிர்ப்பந்தமான சூழல் ஒன்று அவரைச் சூழ உள்ளது. இதனால் பாடசாலைகளை வழி நடத்தும் அதிபர் களது சிறந்த தலைமைத்தவப் பண்பு பாடசாலையின் தர விருத்திக்கு முக்கிய மானதொரு அம்சமாகக் காணப்படுகின்றது.

## அதிபரின் கடமைகளும் பொறுப்புக்களும்

ஒரு பாடசாலையில் நடைபெறும் கல்வி சார்ந்த அனைத்து விடயங்களுக்கும் பொறுப் பானவர் அதிபரேயாவார். அங்கு இடம் பெறும் கல்வி சார்ந்த விடயங்களை உரிய முறையில் திட்டமிட்டு, அதன் வளர்ச்சிக்குத் தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுத்து அதன்படி செயற்படுத்தப்படுகின்ற திட்டங்களை மதிப்பீடு செய்து தனது நிர்வாகத்தைத் திறம்பட நடாத்துவதால் அவர் ஒரு மேலான்மையாள ராகச் (Management executive) செயற்படுகின் றார். பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள், மாணவர் கள் ஆகியோரையும் இங்கு இடம் பெறும் கல்வி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்பவரா கவும் (Supervisor) செயற்படுகின்றார். இந் நிலையில பல கடமைகளை அவர் நிறைவேற்ற வேண்டிய வராயுள்ளார்.

- கட்டளையிடுபவர் (Dictator) பாடசாலை யின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக வும், ஏனைய புற வேலைகள் தொடர்பாக வும் பல உத்தரவுகளைப் பிறப்பிக்கும் ஒரு ஆணையாள ராவார்.
- ஒழுங்கை நிலை நாட்டுபவர் (Disciplination) கல்விச் செயற்பாடுகள் தவிர்ந்த ஒழுக்கம் தொடர்பான விடயங்களிலும் அக்கறையு டையவராகின்றார்.
- மேலாளர் (Manager) நாளாந்தம் பாடசாலை வேலைகளை மேற்பார்வை செய்கின்றார்.
- செயலாளர் (Executive) பாடசாலை வேலைகள் தொடர்பான பல முடிவுகளை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்து கின்றார்.
- ஒருங்கிணைப்பாளர் (Co.ordinator) பாட சாலையின் சகல வேலைகளையும் இயல் பாகவும் விரைவாகவும், திறமையாகவும் நடைபெற ஒரு பாலமாக விளங்குகின்றார்.
- தலைவர் (Leader) பாடசாலையானது குறிக்கப்பட்ட இலக்கை நோக்கிச் செல்வ தற்காக அதனை முன்னின்று வழி நடத்திச் செல்கின்றார்.

சமூகத்தில் நாளாந்தம் துரித மாற்றங்கள் நிகழ்ந்தவண் ணமேயுள்ளன. அதே போன்று பாடசாலையாகிய சமூகத்திலும் மாற்றங்கள் எற்படுகின்றன. அத்தகைய உயர்வு நோக்கிய மாற்றங்களை எதிர் கொண்டு அதன் மூலம் பாடசாலையின் தரத்தை மேம்படுத்த அதிபர் முன்வர வேண்டும். தனது பாடசாலை எதிர் காலத்தில் எத்தகைய வளர்ச்சி பெற வேண்டும் என்பது தொடர்பான தொலைநோக்கு ஒன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய மாற்றங் களும், செயற்பாடுகளும் சரியான நேரத்தில் இடம் பெறுகின்றதா என்பதையும் உறுதிப்படுத் திக் கொள்ள வேண்டும். தன்னுடைய அயராத சேவையினால் சிறந்த கல்வித் தரத்தை பேணுவ தில் உறுதியாக இருக்க வேண்டும்.

கல்வியில் மாற்றம் என்பது தவிர்க்க முடியா தது. இவ்வகையில் தொடர்ச்சியான மாற்றங் களைச் சந்தித்துவரும் கல்விச் செயற்பாடு களை முகாமை செய்யும் நிறுவனங்களாகப் பாடசாலைகள் செயற்படுகின்றன. பாடசாலை கள் உயர் வினைதிறனுடன் இயங்க வேண்டு மெனில் அதிபர் தந்திரோபாயச் சிந்தனை உடையவராக இருக்க வேண்டும். பாடசாலை யின் உயர் நோக்கங்களை அடைய வேண்டி யும் அதன் உச்சப்பயனை அதிகரிப்பதற்கும் பொருத்தமான முகாமைத்துவ நடவடிக்கை களை அதிபர் மேற்கொள்ள வேண்டும். ஒரு சிறந்த பாடசாலை ஒன்று இயங்குகின்றது என்றால் அங்கு அதிபரின் செயற்பாடு சிறப்பான தாக இருக்கும். ஏனெனில் ஒரு மோசமான அதிபரின் கீழ் ஒரு சிறந்த பாடசாலை இயங்க முடியாது. அதே போன்று ஒரு சிறந்த அதிபர் பாடசாலையை மோசமான நிலையில் வைத்தி ருக்கமாட்டார்.

பாடசாலையின் முன்னேற்றம் அல்லது பின்னடைவு என்ற இரண்டு செயற்பாடுகளுக்கும் காரண கர்த்தாவாக விளங்கும் அதி பர்கள் தமது ஆசிரியர்களின் செயற்பாட்டை வினைத்திறனு டையதாக மாற்ற வேண்டும். அதிலே தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் வெற்றி தங்கியுள்ளது. பாட சாலைக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதில் அவர் சளைக்கக் கூடாது. அவர் உயர்ந்த ஒரு பண்பாளராக விளங்க வேண்டும். அவரிடம் இருக்க வேண்டிய முக்கிய பண்புகளாவன.

- அடக்கமும் பண்பும்
- நடப்புத் தன்மை
- நேர்மை
- நெகிழ்ச்சிப் போக்கு
- நடுவு நிலைமை
- அர்ப்பணிப்பு
- அறிவாண்மை
- தலைமைத்துவம்

போன்ற உயர் பண்புகள் எல்லாம் வாய்க் கப் பெற்றவராக இருக்க வேண்டும். பாடசாலை யின் வளர்ச்சி சார்ந்த மாற்றத்துக்கான செயல் களில் ஈடுபடுபவராக இருக்க வேண்டும். ஆசிரி யர் களிடையே சமூக உறவை வளர்ப்பதோடு பாடசாலைக்கும் சமூகத் திற்கும் இடையில் நெருங்கிய உறவை ஏற்படுத்துபவராக விளங்க வேண்டும். ஆசிரியர்களின் செயற்பாடுகளை அவதானிப்பவராக இருக்க வேண்டும். அவர் களின் சுதந்திர செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கக் கூடாது. எனினும் தனது நேரடி மேற் பார்வையின் கீழ் ஆசிரியர்களைக் கண்காணிப்ப வராக இருக்க வேண்டும்.

ஒரு நல்ல அதிபர் சிறந்த நடிகராவர். தனது நடிபங்கினை நன்கு புரிந்து கொண்டு அவர் செயலாற்ற வேண்டும். கல்விக் கோட்பாடுகள் தொடர்பாக அவற்றை முழுமையாக அறிவ தோடு அதனை அமுல்படுத்த முன்வர வேண்டும். சிறந்த அறிவாளியான, சுறுசுறுப்பான நல்ல சிந்தனையுடைய ஒரு அதிபரே பாடசாலை தொடர்பாக ஒரு நிர்வாகியாகவும் (Director), ஒழுங்கமைப்பாளராகவும் முகாமையாளரா கவும் (Manager) செயற்படக் கூடியவராவர். பாடசாலையில் பேணப்பட வேண்டிய யாவும் பாதுகாப்பாக இருக்கின்றது என்பதை அதிபர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே எந்த ஒரு நிறுவனமும் அது பரந்து விரியும் போது நவீன முகாமை முறைகளை மேற்கொண்டாலே ஒழிய அதன் செயற்பாடு திறன்மிக்கதாய் திகழ முடியாது. ஆகவே தனது முகாமையின் கீழ் தகுந்த ஆசிரியர்களை நியமித்து வழிகாட்டி மேற்பார்வை செய்து கல்வியின் தரத்தை அதிகரிக் கச் செய்ய வேண்டும். தனது முகாமையின் கீழ்

- பாடசாலைகளை நிர்வகித்தல் வேண்டும்.
- கல்விப் பணிகளை முன்னெடுத்தல் வேண்டும்.
- கல்வி வளர்ச்சிக்குத் திட்டமிடல் வேண்டும்.
- இலக்குகளை எய்தும் நோக்கம் இருக்க வேண்டும்.
- சேவை மனப்பான்மை உடையவராக இருக்க வேண்டும்.
- சமூகத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டு அதற்கேற்ப கல்வி நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளை அவர் தன் முகாமையின் கீழ் செயற்படுத்த வேண்டும்.

இன்று கல்வியில் அளவுப் பெருக்கம் (Quantity) ஏற்பட்டு வருகின்றது. இதனால் கல்வி நிலையங்கள் எண்ணிக்கையில் பல மடங்கு அதிகரித்துள்ளது. இந் நிலையில் அரசும் கல்விக்கான முதலீட்டை பல மடங்கு அதிகரித் துள்ளது. எத்தகைய வசதிகள் கல்வியுலகில் ஏற்பட்டுள்ள போதும் பாடசாலையின் கல்விச் செயற்பாட்டை முன்னின்று திட்டமிட்டு நடத்தி வரும் அதிபரின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்த தாகும். எனவே ஒரு தலைமை அதிபர் ஒருவர் ஆசிரியர் தொடர்பான பொறுப்புக்கள், மாணவர் தொடர்பான பொறுப்புக்கள், பாடசாலைகள் தொடர் பாகச் செய்யும் வேலைகள், நிதிப் பொறுப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், பொதுமக்கள் தொடர்பான பொறுப்புக்கள் போன்ற பல விடயங்களை மதிப்பீடு செய்யும் பணியையும் முன்னெடுத்துச் செல்கின்றார்.

**முடிவுரை**

இன்று உலகம் மிக வேகமாக மாறிக் கொண்டு செல்கின்றது. இதில் சிறப்பாக வாழ வேண்டுமானால் அதற்கப் பொருத்தமான பயிற்சியை இளம் சந்ததியினர் பெற்றக் கொள்ள வேண்டும். இதனால் அவர்களின் எதிர்கால வாழ்க்கையை மையமாகக் கொண்டு பாடசாலைக் கல்வி திட்டமிட்டு வழங்கப்பட வேண்டும். கல்வி நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் ஆசிரியர்களாக இருந்த போதும், அவற்றை வகுப்பறையில் செயல்படுத்துபவர்கள் ஆசிரியர்களாக இருந்தாலும் அச் செயற்பாடுகள் யாவும் செம்மையுற நடைபெறுவதற்குரிய சிறந்த முகாமை செயற்பாடுகளை முன்னெடுப்பவர் அதிபராவர். பாடசாலைச் செயற்பாடுகளில் இன்று அதிபரின் பங்கும், பொறுப்பும் அதிகரித்து விட்டது. சிறந்த நிர்வாகச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி கல்வியின் தரம் என்ற சிந்தனையை முன்னிருத்தி அதனை நோக்கி முன்னேறி அவ் விலக்கை அடைந்து கொள்வதென்பது சாதாரண செயற்பாட்டினால் நிறைவேற்ற முடியாது. ஆகவே கல்வியின் தரத்தைப் பேண வேண்டுமானால் அது அப் பாடசாலையில் அதிபரின் அதி சிறந்த செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது எனலாம்.

அடிக்குறிப்புக்கள்

1. கல்வியின் புதிய செல்நெறிகள்.
2. தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப பாடசாலை மட்டத்தில் பெற்றோரின் பங்களிப்பு

இன்றைய காலகட்டத்தில் சர்வதேச ரீதியிலும் குறிப்பாக வளர்முக நாடுகளிலும் கல்விச் செயற்பாட்டில் அதிகம் கவனத்தை ஈர்க்கும் அம்சமாக ஆரம்பக்கல்வி அமைகிறது.

இதில் பிள்ளைகளின் ஆரம்பக் கல்விப் பருவம் என்பது அவர்களின் பெற்றோரின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஏனைய புற அமைப்புக்களான அரசாங்கம் சமூக நிறுவனங்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றின் பங்களிப்பு இருந்தபோதும் அவை இரண்டாவது நிலையிலேயே பங்களிப்புச் செய்கின்றன.

பிள்ளைகளின் உடல், உள ஆரோக்கியம், கல்வி முன்னேற்றம், மகிழ்ச்சிகரமான கல்வி, ஆளுமை விருத்தி என்பவற்றில் பெற்றோரின் பங்களிப்பு நேர்முறையாகவும் எதிர்மறை யாகவும் காணப்படுகின்றது. இவை பிள்ளைகளின் மேற் கூறப்பட்ட செயற்பாடுகளில் ஆழமான செல்வாக்கைச் செலுத்துவதால் இத்தகைய அம்சங்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

அண்மைக்காலங்களில் குழந்தை உரிமை, குழந்தை நலன், குழந்தைகளின் பாதுகாப்பு, குழந்தை நேயம் போன்ற எண்ணக்கருக்கள் கல்வியுலகில் முனைப்புடன் கையாளப்படுகின்றன. அதே போல் சர்வதேச நிறுவனங்கள் இலங்கை போன்ற வறிய நாடுகளில் ஆரம்பக்கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென வற்புறுத்தியும் உதவியும் வருகின்றன. ஐக்கிய அமெரிக்காவில் வெளியிடப்பட்ட சொல்மன் அறிக்கையில் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு மிக முக்கியமானது என வற்புறுத்தப்பட்டுள்ளது.

பிள்ளைகள் அனைவருமே சிறந்த உடல் ஆரோக்கியத்தையும் உள ஆரோக்கியத் தையும் கொண்டிருப்பது அவசியம். இந்த இரண்டையும் பேணுவதிலும் அதன் அடிப்படையில் பொருத்தமான காலத்தில் சிறந்த கல்வியை மகிழ்ச்சிகரமான சூழலில் அவர்கள் பெறுவதை உறுதிப்படுத்தப் படுவதும் பெற்றோரின் கடமையாகும். பெற்றோர் பொருளாதார வசதியுடையவர்களாகவும் கற்றவர்களாகவும், உயர்மனப்பாங்கு உடையவர்களாகவும் தன்னம்பிக்கை என்பவற்றைத் தரும் உயர் தொழில்களில் உள்ளோராகவும் அமையும் போது அவர்களது பிள்ளைகள் பாதுகாப்பான சூழலையும் சிறந்த கல்வியையும் பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு.

வடக்கு கிழக்கில் அதிக கவனயீர்ப்புக்குரியவர்களாக சிறார்கள் வந்துள்ளனர். உலகம் முழுவதும் ஐம்பது மில்லியன் சிறுவர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அவர்களது சம்மதமின்றி அவர்களுக்குத் தெரியாமலே அவர்கள் வாழும் சூழல் பாதிப்படைந்து வருகின்றது. இதனை ஆரம்பப்பாடசாலை மட்டத்தில் துவக்கமாகக் காண முடிகின்றது. இதனால் ஆரம்பப்பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக பெற்றோரின் பங்களிப்பை கவனத்திற்கு எடுப்பது இங்கு நோக்கமாகும். ஆரம்ப பாடசாலை சிறுவர்கள் 05-10 வயதிற்கு உட்பட்டவர்களாக உள்ளனர். இவர்கள் தூய உள தொழிற்பாட்டுத்தரத்தில் இயங்குவார். எரிக்சனின் கருத்துப்படி இவர்களது உள சமூக நிலைமை யானது தன் முனைப்பு தாழ்வு மனப்பாங்கு கொண்டதாக அமையும் கோல்பேர்க் ஆய்வுப்படி நல்ல பிள்ளைகளாக இருப்பது இவர்களது ஒழுக்க நிலையாகும். இவர்களது இயல்புகளாக அமைவன கூடிய அளவு அறிவியல் செயற்பாடுகளிலும் குழு விளையாட்டுக்களிலும் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பதாகும்.

இவ்வயதுப் பிள்ளைகள் அனைவருமே சிறந்த உடல் ஆரோக்கியத்தையும் உள ஆரோக் கியத்தையும் கொண்டிருப்பது அவசியம் . இந்த இரண்டையும் பேணுவதிலும் அதன் அடிப்படையில் பொருத்தமான காலத்தில் சிறந்த கல்வியை மகிழ்ச்சிகரமான சூழலில் அவர்கள் பெறுவதை உறுதிப்படுத்துவது பெற்றோரின் கடமையாகும். முன்னர் கூறியது போல பெற்றோர் பொருளாதார வசதி உடையவர்களாகவும், கற்றவர்களாகவும், உயர் மனப்பாங்கு தன்னம்பிக்கை என்பவற்றைத் தரும் உயர் தொழில்களில் உள்ளோராகவும் உள்ள போது அவர்களது பிள்ளைகள் பாதுகாப்பான சூழலையும் சிறந்த கல்வியையும் பெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் இலங்கையில் வடக்கு கிழக்கு போன்ற பாதிப்பிற்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள பெற்றோர்களில் பெரும்பாலா னவர்கள் இதற்கு எதிரான நிலையில் வாழ்கின்றனர். பிள்ளைகளது பலவீனங்கள், நலக்கேடுகள் என்பன பிள்ளைகளின் கல்வியில் குறிப்பாக ஆரம்பக் கல்வியில் அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான பெற்றோர் தொடர்பாக பின்வரும் அம்சங்கள் குறிப்பிடத்தக்கன.

- வறியவர்கள்.
- ஒழுங்கான தொழில் மற்றும் வருமானம் இல்லாதவர்கள்.
- கல்வியறிவு அற்றவர்கள்.
- ஒற்றை நிலைப் பெற்றோர்( தாய்/தந்தை இல்லாதிருத்தல்).
- மது போதைக்கு அடிமையாக இருப்போர்.
- தினமும் தமக்கிடையே சண்டையிடும் பெற்றோர்.
- பெற்றோர் மறுமணம் புரிதல்.
- தொழில் அல்லது வேறு காரணங்களுக்காக வீட்டிற்கு வெளியே அதிக நாட்கள் தங்கியிருக்கும் பெற்றோர்.
- சுயமகிழ்ச்சி, சுயமுன்னேற்றம் சுயசமூக நிலைக் கௌரவம் என்பவற்றில் அதீத ஈடுபாடு உடைய பெற்றோர்.
- பிள்ளைகளின் கல்வி பற்றிய விழிப்புணர்வு மற்றும் அறிவு குறைந்தவர்கள்
- யுத்தம், இடம் பெயர்வால் பாதிக்கப்பட்டவர்கள்
- இவ்வாறான பெற்றோரை பிள்ளைகளின் கல்வி, நலன், பாதுகாப்பு நோக்கிப் பலவீனமானவர்கள் என்று குறிப்பிட முடியும். இத்தகைய பெற்றோரின் பிள்ளைகளே ஆரம்பப பாடசாலை மட்டத்தில் பிள்ளைகளின் கல்விக்கு உரிய பங்களிப்பை வழங்க முடியாதவர்களாக உள்ளனர்.

பலவீனமான பெற்றோர் அவர்கள் பிறந்து வளர்ந்த அரசியல் சமூக பொருளாதார, குடும்பக் காரணிகளால் பொதுவாக நிர்மாணிக்கப்படுகின்றனர். எனினும் இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்கள் போன்ற நீண்ட காலம் யுத்த பாதிப்பிற்கு உட்பட்ட பிரதேசங்களிலும் வெள்ளப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கு பூமியதிர்ச்சி, கடும்வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களிற்கு உட்படும் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளால் பாதிக்கப்படும் பெற்றோரும் பலவீனமாகின்றனர். எது எவ்வாறாயினும் பெற்றோர்களின் சாதக அல்ல பாதக நிலைமைகளே ஆரம்பப் பாடசாலை பிள்ளைகளின் கல்வியில் அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடியன.

ஆரம்பக்கல்வி அடைவுகள் பிள்ளைகளின் நுண்மதி சார்ந்ததாக இருப்பது உண்மைதான். ஆனால் அத்தகைய நுண்மதியை வளர்ப்பதற்கான சூழலையும் வசதிகளையும் பெற்றோர் வழங்காதவிடத்து எதிர்காலத்தில் நுண்மதியினால் நுட்பமான குற்றங்களை செய்பவர்களைத் தான் சமூகம் கொண்டிருக்கும். தமக்கும் சமூகத்திற்கும் தேசத்திற்கும் சிலசமயங்களில் முழு மானிட குலத்திற்கும் நன்மை தரக்கூடியவற்றை உருவாக்குவதில் பங்கேற்பவர்களாக குழந்தைகளை மாற்ற வேண்டுமானால் அதிகம் பெற்றோரின் பங்கு முக்கியமானது.

பெற்றோர் இருவரும் பலவீனமானவர்களாக உள்ள போது பிள்ளைகள் உரிய வயதில் பாடசாலைகளில் அனுமதி பெறாது விடுகின்றனர். ஊழியம் செய்யும் சிறுவர்கள் ஆகின்றனர். இத்தகைய விரும்பத்தகாத தீமைமிகுந்த பரப்பிற்குள் சிறுவர்கள் செல்லாது தடுப்பதற்கு பிள்ளைகளுக்கான பெற்றோரின் பங்களிப்பு அவசியமாகின்றது.

வசதியான வருமானம் மிக்க கல்வி கற்ற. சமூகமேல் நிலையிலுள்ள உயர்நிறுவனத் தொடர்புகள் கொண்ட பெற்றோர்களின் பிள்ளைகள் அதிகமாக்க கற்கும் வசதிமிக்க முழுமையான ஆரம்ப பாடசாலைகள் நகர்ப்புறங்களில் உள்ளன. அவை தொடர்ச்சியாகவே சாதனையாளர் பட்டயலில் இடம்பெறுகின்றது. அமைச்சும் வணிக வங்கிகளும், பாடசாலை சார் அமைப்புக்களும் ஊடகங்களும் அப்பிள்ளைகளை பெருமைப்படுத்தி மகுடம் சூட்டுகின்றன. இந்த அசாதாரண பெருமையும் குதூகலமும் பிள்ளைகளின் நுண்மதி மற்றும் இடையறாத கற்றல் என்பவற்றால் மாத்திரம் உருவானதல்ல. அவர்கள் நல்ல பெற்றோர்களைக் கொண்ட அதிஷ்டக்காரர்கள் என்பதை சில சமயங்களில் கவனத்திற்கு எடுக்கத்தவறி விடுகின்றோம்.

கிராமங்களில் உள்ள ஒதுங்கிய பிரதேசங்களில் வறிய பின்னணியில் போக்குவரத்து தொடர்புகள் அற்ற பகுதிகளில் இயங்கும் ஆரம்பபாடசாலைகளின் பெற்றோர்கள் உரிய பங்களிப்பைச் செய்வதில்லை. அது பற்றி அவர்கள் உணர்ந்ததும் இல்லை. அது பற்றிய விழிப்புணர்வு பெற்றோர்களிடம் உருவாக்கப்பட்டதும் இல்லை. இதனால் அப்பிள்ளைகள் ஆரம்ப பாடசாலைப் பருவத்திலே உரிய நலன்களையும் மகிழ்ச்சியையும் பெற முடியாதவர்களா கின்றனர். அவர்களது பிரச்சனைகளை வெளிக்கொணர்வதில் ஊடகங்களிற்கு அதிக அக்கறையில்லை. ஏனெனில் ஊடகங்களின் வியாபார நலப்பாடுகளில் அவர்கள் பங்களிப்புச் செய்வதில்லை. நாளாந்தம் அவர்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் வாங்குவதில்லை. தொலைக்காட்சிப்பெட்டிகளை வைத்திருப்பதில்லை. ஊடக முகவர்களுடன் தொடர்புகள் இல்லை. இதனால் சில நலிவுற்ற ஆரம்ப பாடசாலைகளும் அப்பிள்ளைகளும் கொண்டிருக்கும் பிரச்சினைகளும் அவர்களது பெற்றோர்களின் இயலாமை மற்றும் ஈடுபாடின்மை பற்றிய அம்சங்களும் வெளிக்கொண்டு வரப்படுவதில்லை. அத்தகைய ஆரம்பப்பாடசாலைப் பிள்ளைகள் அவர்களிற்குத் தெரியாமலே அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் தீமைக்கு உட்படுகின்றனர். கல்வி நிறுவனங்களி லிருந்து பிரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றனர். உயர்ந்த கல்வியின் நலன்களில் இருந்து தம்மைத் துண்டித்துக் கொள்கின்றனர். இதனால் வாழ்நாள் முழுவதும் வறிய விவசாயிகளாக அல்லது தொழிலாளர்களாகத் தமது வாழ்க்கைத் தொழிலை நிர்ணயித்துக்கொள்கின்றனர்.

பாடசாலைகள் அரசினால் நிர்வகிக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது. ஆனாலும் பெற்றோர், நடைமுறையில் பாடதுணை நூல்கள் அப்பியாசப் புத்தகங்கள், பேனா,பென்சில் போன்றவற்றிற்கும் பஸ் கட்டணம், சீருடைக்கும் பணம் ஒதுக்க வேண்டியுள்ளது. வசதிக்கட்டணங்களையும் வெவ்வேறு விழாக்களிற்கான மாணவர் பங்களிப்பையும் செலுத்த வேண்டியுள்ளது. இதற்கான பணவசதி பல பெற்றோர்களிடம் இல்லை. இதனை பாடசாலை கட்டாயப்படுத்தி செலுத்துமாறு கேட்கும் போது அம் மாணவர்கள் சிறுதொழில்களுக்குச் செல்லுதல், சிறு களவுகளில் ஈடுபடுதல், பிச்சை எடுத்தல், போன்றவற்றைச் செப்புமாறு தூண்டப்படுகின்றனர். இது அவர்களது கண்ணோட்டத்தையும் வாழ்க்கை முறைகளையும் தவறாகத்திசை திருப்பி விடுகின்றது.

ஆகவே ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்வி மேம்பாடு பற்றிச் சிந்திக்கும் அனைவரும் கவனிக்க வேண்டிய சில முக்கியமான விடயங்கள் உள்ளன.

- வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட பெற்றோரின் பொருளாதார மேம்பாடு
- அவர்களிடையே கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- உரிய வழிகாட்டல் ஆலோசனைகளை கிராமிய மட்டத்தில் வழங்குதல்.

மேற்படி விடயங்களில் கல்வி நிர்வாகத்துறையினர், தொண்டர் நிறுவனங்கள், சமூக நிறுவனங்கள், நலன் விரும்பிகள் அனைவரதும் ஒன்றிணைந்த செயற்பாடுகள் பொருத்தமானவையாக அமையும்.

பெற்றோரிடம் காணப்படும் மிகப்பெரிய குறைபாடு தமக்குக் கிடைக்கும் உதவிகளையும் சர்ந்தர்ப்பங்களையும் உரிய முறையில் பயன்படுத்தாமையாகும். ஆகவே பெற்றோர் இது விடயத்தில் தெளிவு பெற வேண்டும். தமது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காகவும், வாழ்க்கை முன்னேற்றத் திற்காகவும் தம்மிடம் உள்ள குறைபாடுகளையும் அறியாமையையும் சோம்பேறித்தனத்தையும் போக்கிக்கொள்ள வேண்டும். தமக்குக் கிடைக்கும் வழிகாட்டல் ஆலோசனைகள், பொருளாதார உதவிகள் என்பவற்றை உரிய முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தமது சுயமுயற்சிகள் மூலமும் தம் பொருளாதாரத்தை மேம்படுத்த முயற்சிக்க வேண்டும்.

வறுமையும் அறியாமையும் தான் மனித முன்னேற்றத்தின் எதிரிகள் என்பதை உணர்ந்து தம்பிள்ளைகளின் எதிர்காலம் செழிப்புறும் வகையில் பெற்றோர் தம் வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பிரச்சனைகளும் துன்பங்களும் தற்காலிகமானவையே. எமக்கு ஏற்படும் பிரச்சனைகள், துன்பங்களில் பெரும்பாலானவற்றிற்கு நாமே காரணங்களாக உள்ளோம் என்பதை யும் உணர வேண்டும். மாணவர்களின் ஆரம்பக் கல்வியில் தமது அதிக பங்களிப்பை செலுத்த வேண்டும்.

***திருமதி. மாலினி சுரேஸ்***
ஆசிரியர்
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடசாலைகளின் போக்கும் அவை பற்றிய விமர்சனங்களும்

முன்னைய காலங்களில் ஒவ்வொரு நாடும் தனது புவி வளம், சமூக பொருளாதார, கலாச்சார நிலைமைகளுக்கேற்ப தனித்துவமான கல்வியின் இலக்குகள் வகுக்கப்பட வேண்டும் என்று கருதப்பட்டது. ஆனால் இன்று தொழில்நுட்ப தொடர்பாடலின் வளர்ச்சிப் போக்கும் உலக மயமாதலின் விளைவாக உலகில் உள்ள சகல நாடுகளும் தமது பொருளாதார வளர்ச்சியில் பல சமமின்மைகளைக் கொண்டிருக்கின்றன என்பதில் பல கல்வியியலாளர்கள் ஒருமித்து நிற்கின்றனர். கல்வியின் இலக்குகள் வரையப் படல் வேண்டும் என்ற கருத்து இன்று உலக நாடுகளுக்கிடையில் வலுப்பெற்று வருகின்றது.

கல்வியானது நான்கு தூண்களின் அடிப் படையில் மனித குலம், தனியாள் வேறுபாடுகள், நாடுகள் என்பவற்றின் அடிப்படையில் எதிர்கால வளர்ச்சிக்கான கல்வியின் பங்கு பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பாடசாலைக் கல்வியானது மனித வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து விடையங்களையும் கொண்டிருப்பதாக 21ம் நூற்றாண்டுக்கான கல்வி பற்றி ஆராய்ந்த சர்வதேச ஆணைக்குழுவின் அறிக்கை எடுத்துக் கூறுகின்றது. இவ்வறிக்கை கூறிய நான்கு தூண்களாவன

**1. அறிவைப்பெறும் வகையில் கற்றல்**

சில பாடங்களில் ஆழமான அறிவு, பரந்த பொது அறிவு, பிற்கால வாழ்வில் சுயமாக கற்க உதவும் திறன்கள் பற்றிய அறிவு என்பவற்றை இதில் உள்ளடங்குவதை காணலாம்.

**2. செய்வதற்குக் கற்றல்**

பாடசாலைகளின் பாட நெறிகளினூடாகவும், சமூக, குழு வேலை அனுபவங்களினூடாகவும் தொழில் திறன்கள், வெவ்வேறு நிலைமைகளில் பணிபுரியவும் குழுக்களில் சேர்ந்து வேலை செய்யவும் தேவையான பரந்த தகைமைகள் போன்றவற்றை இது சுட்டி நிற்கின்றது.

**3. வாழக் கற்றல்**

கல்வியானது ஒருவரின் நினைவாற்றல், காரணங்காணுதல், உடல் ஆற்றல், தொடர் பாடல் திறன்கள் என்பவற்றை கருத்தில் கொண் டிருந்து இதனூடாக பாடசாலைக் கல்வியானது ஒருவரின் சில அடிப்படை விழுமியங்களைக் கொண்டு தனது ஆளுமையை விருத்தி செய்யும் ஆற்றல், கூடிய சுயாதீனத்துடனும் பொறுப்புட னும் தொழிற்பட கற்றுக் கொடுக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**4. இணைந்து வாழக்கற்றல், மற்றவர்களு டன் சேர்ந்து வாழக்கற்றல்**

இந்த நான்காவது விடயம் தொடர்பாக பாட சாலை பாடத்திட்ட அமைப்பினூடாக அமைதி யாக வாழவும் மற்றவர்களை மதிக்கவும், பிறரைப் புரிந்து கொள்ளவும், தனியாட்களும் சமூகங்களும் நாடுகளும் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலைமையை ஏற்றுக் கொண்டு வரவேற்றும் மனப்பாங்கை குறிக்கின்றது.

சர்வதேச ரீதியாக பயன்படுத்தக் கூடிய கல்வியின் நான்கு தூண்கள் பற்றிய இப்பரிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரையை அடியொற்றி இலங்கையின் கல்வி இலக்குகள் அண்மைக்காலங்களில் வகுக்கப் பட்டன. தொடர்பாடல், சமூக, உயிரியல், பௌதீக சுற்றாடல், அறவொழுக்கம், சமயம், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், கற்பதற்கான திறன் களைக் கற்றல் என்னும் பல்வேறு விடயங்கள் தொடர்பான தேர்ச்சிகளை மேம்படுத்தல் போன் றவை இவ்விலக்குகளில் உள்ளடங்குகின்றன.

பாடசாலைக் கல்விக்கு சர்வதேச ரீதியாக வும் தேசிய ரீதியாகவும் வகுக்கப்பட்ட புதிய கல்வியின் இலக்குகளில் படைப்பாற்றல் திறன்கள், துருவி ஆராயும் திறன்கள், அணியா கச் சேர்ந்து பணியாற்றும் திறன்கள், அறிவைப் புதுப்பித்துக் கொள்ளவும் அதனைப் பரிசீலனை செய்யவும் தேவையான திறன்கள் என்பனவும் அடங்குகின்றன. அதாவது இன்றைய பாட சாலைகள் பல நவீன கல்வி இலக்குகளை நிறை வேற்றுமாறு கோரப்படுகின்றன.

இவ்வாறான மாறுபட்ட நவீன இலக்குகளை நிறைவேற்றும் அளவுக்கு இன்றைய பாடசாலை கள் செயற்றிறனையும் ஆற்றலையும் கொண்ட வையா என்பது இன்றைய கல்வியாளர்களின் கேள்வியாகும். பாடசாலைகளின் கல்வி நிர்வாக கட்டமைப்பு கடந்த ஆறு தசாப்த காலத்தில் பல மாற்றங்களுக்கு உள்ளான போதிலும் தற்போ தைய முகாமைத்துவ முறைமைகள் இவ்வுயர்ந்த இலக்குகளை அடையப் போதுமானதல்ல. அடிப்படையில் தேசிய நலன்களுக்கு மாறுபட்ட குடியேற்ற ஆட்சியாளர்களின் நலன்களை நிறைவேற்ற உருவாக்கப்பட்ட கல்வி நிர்வாக முறைமை, ஒரு சுதந்திர நாட்டின் மேம்பாடு கருதிய கல்வியின் நோக்குகளை அடையப் போதுமானவையல்ல என்ற கருத்து வலுப் பெற்றுள்ளது.

## கல்வியில் அரசியல் தலையீடு

இலங்கையில் கல்வித்துறையில் உயர் பதவிக்கான நியமனங்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள் போன்றவற்றில் வெறுக்கத் தக்க அளவில் அரசியல் தலையீடுகள் நிலவி வருகின்றது. பாடசாலைத் தலைமை அதிகாரி கள் எனக் கூறப்படும் இன்றைய பாடசாலை முகாமையாளரான அதிபர்களில் பல்லாயிரக் கணக்கான அதிபர்கள் இப்பதவியை வகிக்கத் தகுதியற்றவர்கள் என முன்னாள் கல்வியமைச் சர் ஒருவரின் கருத்தாகும். இப்படியான தலைமை அதிகாரிகளைக் கொண்டு உயர்ந்த இலக்குகளை அடைய முடியாது என்பது யதார்த்தமாகும்.

## இயைபாக்கம் அற்ற கல்விக்கட்டமைப்பு

கல்வி முறைகளை, பாடத்திட்டம் போன்ற கலைத்திட்ட முறைகளை அமுல்படுத்தும் கல்வி அமைச்சு, மாகாணக்கல்வி அதிகார பீடங்கள், அமைச்சுக்கள் இதன் கீழ் இயங்கும் ஏனைய அமைப்புக்களுக்கிடையில் சரியான ஒத்துழைப்பு இன்மை கல்வியில் பாரிய பின்ன டைவை ஏற்படுத்துகின்றது. இத்துடன் கல்வி அதிகாரரிகளிடமும் அதிபர்களிடமும் காணப்ப டும் வினைத்திறனின்மை, தராதரமின்மை, ஆசிரியர் களிடம் காணப்படும் ஊக்கமின்மையும் காரண மாக அமைகின்றது.

இது மட்டமல்லாது இன்றைய ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டிற்கு மேலதிகமான நிர்வாக செயற்பாடுகள், பாடசாலை - சமூக உறவை மேம்படுத்தல், பாடசாலை விழாக்கள், மாணவரின் நலலோன்பில் பங்கெடுத்தல் கட்டாயமாக்கப்படுகின்றது. கற்பித்தலுக்காகப் பணிக்கப்பட்ட ஆசிரியர்கள் பலர் இன்று அப் பணியை விட்டுப்புறந்தள்ளி ஏனைய பாடசாலை வேலைகளில் ஈடுபட்டே தமது பணியையும் முடித்து ஓய்வு பெறுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரீட்சைகளின் ஆதிக்கம்

இலங்கையின் கல்வி முறையில் ஆதிக்கம் செலுத்தும் முக்கிய விடயம் பரீட்சைகளின் ஆக்கிரமிப்பாகும். தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைகளின் ஆரம்பமாகும் இவ்விடயம் க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) வரை நீண்டு செல்கின்றது. க.பொ.த (உ/த) கற்பதற்கு ஏற்ற சில கல்வித் தகைமைகளே போதுமானது. ஆனாலும் பல பாடசாலைகள் இத்தகுதிகளை ஏற்றுக் கொள்வதில்லை. இதன் மூலம் பாடசாலைகளின் ஏற்றத்தாழ்வுகளை பெற்றோரும் தீர்மானிக்க வழிவகுக்கின்றது. அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற எண்ணக் கரு இதனால் பின்தள்ளப்படுகின்றது.

இலங்கையின் தொழில்வாய்ப்புக்கள் அனைத்தும் கல்வித் தகைமைகளுக்கே முன்னுரிமை வழங்குகின்றது. எனவே விதிக்கப் பட்ட கல்வித்தகுதிகளைப் பெற உதவும் பரீட்சைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மாணவரின் கல்விக்காலம் பரீட்சைக்குத் தன்னை ஆயத்தப்படுத்தலிலேயே கழிகின்றது. பாடசாலைகளின் சாதனைகள் அவைபெறும் பரீட்சை முடிவுகளைக் கொண்டே மதிப்பீடு செய்யப்படுகின்றன. பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்கள் கல்வியின் இலக்குளை அடைந் திருப்பார்களா? கல்வியின் இலக்குகளாக வகுக் கப்பட்ட தகைமைகள் அனைத்தையும் உயர்ந்த புள்ளிகளைப் பெற்ற மாணவன் கூட பெற்றுள் ளானா? என்பது கேள்விக்குறியே. பரீட்சையின் ஆக்கிரமிப்பும் முக்கியத்துவமும் மாணவர் களையும் ஆசிரியர்களையும் மட்டுமன்றி முழுக் கல்வி முறையையும் வேறு வகையில் திசை திருப்பி விடுகின்றன. முழுச்சமூகமும் கல்வித் தகுதிகளை சான்றிதழ்களை மட்டும் விரும்பும் வகையில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. கற்பதற்குக் கற்றல், இணைந்து வாழக்கற்றல் என்னும் உன்னதமான இலக்குகள் அடிபட்டுப்போகின்றன.

பரீட்சை நோக்கின் முக்கியத்தவத்தினா லேயே இன்று தனியார் கல்வி நிலையங்கள் பாடசாலைக்கு சமாந்தரமான வகையில் முக்கி யத்துவம் பெறுகின்றது. ஆரம்பக்கல்வி தொடக் கம் உயர்தரம் வரை நீண்டு பரந்து செல்கின்றது. இத்தகைய தனியார் கல்விச் செயற்பாடுகள் கல்வியின் தேர்ச்சி, கல்வியின் வளர்ச்சி என்பவற் றிற்கு எதிராகவே செயற்படுவதாக கல்வியாளர் கள் வலியுறுத்துகின்றனர்.

பாடசாலைகள் பிள்ளைகளின் படைப்பாற் றல், புத்தாக்க சிந்தனைகள், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், கற்கும் திறன் போன்றவற்றை வளர்க்கும் தொலை நோக்குடையவை. ஆனால் இன்றைய பாடசாலைகள் உரிய இலக்குகளை அடைய முடியாது சமூகத்தின் ஒட்டு மொத்த கல்வித் தேவை, இலக்குகளை குழப்பி ஒரு மாயையான தோற்றத்தை பிரதிபலித்து இயங்கிக் கொண்டிருப்பதை இன்றை இளம் சமூகத்தின் செயற்பாடுகள் பறைசாற்றி காலத்தின் கண்ணா டியில் பாரத்து கல்விச் சமூகமே தலைகுனியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை யாரும் ஏற்க முடியாத யதார்த்தமாகும்.

***திருமதி. தில்லைரஞ்சினி கணேசமூர்த்தி***
ஆசிரியர்,
யா/உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகை என்னும் பகையை வெல்வோம்

*திருமதி. சு. கங்காதரன்*
ஆசிரியர்
யா/இளையதம்பி இந்து.வி

மருத்துவ உலகில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியானது மனிதனின் ஆயுட்காலத்தை நீட்டிச் செல்கிறது. இருப்பினும் தற்காலத்தில் உயிர்கொல்லி நோய்களுடனான மனிதனின் போராட்டங்கள் அதிகரித்து வருகின்றது. தற்காலத்தில் இலங்கையில் புற்றுநோயின் தாக்கம் விசுவரூபமாக மாறியுள்ளது. அரசு புகை தொடர்பான நோய்களின் சிகிச்சைக்கு 22 சதவீதம் செலவு செய்கிறது.

இன்றைய இளைஞர் சமுதாயம் புகைத்தலில் அதிகளவில் ஈடுபடுகின்றனர். சிகரெட், பீடி, புகையிலை போன்றவற்றை தாராளமாக பயன்படுத்துகின்றனர். ஆக்கபூர்வமாக சிந்திக்க வேண்டியவர்கள் இவ் அழிவுப் பாதையை நாடுகின்றனர். கற்றல் செயற்பாடுகளிலிருந்து இடைவிலகியோ நம் தொழில்புரியும் வாலிபர்களுமே புகைத்தலுக்கு அதிகளவில் அடிமையாகியுள்ளார். புகைத்தலில் ஏன் அதிகளவில் நாட்டம் கொள்கின்றனர் என்று சுற்று சிந்தித்தால்,

சினிமா மோகத்தில் இளைஞர் சிக்கியுள்ளனர். நடிகர்கள் போல பாவனை செய்து தமது வாழ்வை, பணத்தை வீணடிக்கின்றனர். மேலும் சகபாடிகளின் நட்பினால் தீய பழக்கத்திற்கு ஆளாகின்றனர். சிலர் அற்ப மகிழ்ச்சிக்காகவும் வேறு சிலர் பொழுது போக்கின்றாகவும் சிகரெட் புகைக்கின்றனர்.

1847ம் ஆண்டு பிலிப் மொரிஸ் என்ற அமெரிக்கரே முதன்முதலாக சிகரெட் தயாரிக்கும் நிறுவனத்தை ஆரம்பித்தார். ஆரம்ப காலத்தில் இராணுவ வீரர்களே அதிகளவில் பயன்படுத்தினர். 1953இல் புகையிலை, சிகரெட் பாவனை மூலம் பலவகையான புற்றுநோய்கள் ஏற்படுகின்றது என டாக்டர் எமல்.எல்.வைண்ட் ஸ் கண்டு பிடித்துள்ளார்.

புகையிலையிலுள்ள "நிக்கொட்டின்" என்ற இரசாயனப் பொருள் மனிதனை அடியாக்கி விடுகிறது. சிகரெட்டின் 400க்கு மேற்பட்ட கொடிய இரசயான சேர்வைகள் நிறைந்துள்ளன. மெதேன், அமோனியா, போமல்டிகைட்டு எதனோல் என்பனவும் கொடிய புற்றுநோய்க் காரணிகளான கட்மியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசற்றோன், பொலோனியம் போன்றனவும் செறிந்துள்ளது. பூச்சிக் கொல்லிகளாகவும் வெடிகுண்டு களாகவம் பயன்படும் இச் சேர்வைகள் கொடிய நஞ்சுகளாகும் என்பது உங்களுக்கு தெரியுமா?

புகைத்தலின் போது 15% புகை பிடிப்பவரின் உடலினுள்ளும் 85% புகை சுற்றியுள்ள வரையும் சூழலையும் சென்றடைகிறது. சுவாசப் பாதையூடாக சென்ற புகையினால் மூளையின் கலங்களில் நிக்கொட்டின் படிவதால் சிறியளவில் உற்சாகம் தோன்றுவது வாய், உதடு, களம், தொண்டை, நுரையீரலில் என்பன நிறம் மாறி கலங்கள் செயலிழக்கின்றன. இக் கொடிய பழக்கத்தினால் வாய்ப்புற்று நோய் நுரையீரல் புற்று நோய்கள் உருவாகின்றன. நுரையீரல் புற்றுநோய்க்கான 85% காரணியாக புகைத்தல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாவிலுள்ள சுவையரும்புகள் பாதிக்கப்படுகின்றன. புகைப்பவர்களின் முகம் ஆணிவேரான இளைஞர்களின் ஆரோக்கியம் கெட்டு வாழ்க்கை சின்னா பின்னமாகிறது.

உலகளவில் 6 நிமிடத்திற்கு ஒருவர் புகைபிடிப்பதனால் இறக்கின்றனர். 2030ம் ஆண்டளவில் ஆண்டுக்கு 1 கோடி மனித உயிரை அழிக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன. புகைபிடிப்பவர்களில் 70 சதவீதத்தினர் வளரும் நாடுகளில் உள்ளனர். ஆட்கொல்லியான புகைத்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவே உலக சுகாதார தாபனம மே மாதம் 31ம் திகதியை சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினமாக பிரகரடனப்படுத்தியுள்ளது.

புகைத்தலினால் மாரடைப்பு, பக்கவாதம், மலட்டுத்தனம், நீரிழிவு புற்றுநோய் போன்ற தொற்றாத நோய்கள் உயிருக்கு உலை வைக்கின்றன. இப் பழக்கத்தினால் குடும்பத்தில் வறுமை, நோய் என்பன தலைவிரித்தாடும். சிறுவர்களின் கல்வி தடைப்படும் எதிர்காலம் பாதிப்படையும். வாழ்க்கைத் தரம் குறைவடையும். நிலைத்து நிற்கம் அபிவிருத்தி நோக்கி பயணிக்கும் இலங்கையின் பொருளாதாரம் பின்னடைவை சந்திக்கும்.

எதுவித நன்மையையும் தராத இத் தீய பழக்கங்களை நாம் ஏன் கைவிடமுடியாது? புதிய உலகைப் படைக்க பிறந்த இளைஞர்களே நாம் முதலில் மனவுறுதியை ஏற்படத்த வேண்டும். புகைத்தல் பொருட்களை தீண்டுவதில்லை என உறுதி கொள்வோம். ஏற்கனவே புகைத்தலுக்கு அடிமையானவர்கள் அத்தகைய சூழல், பொருட்கள் சந்தர்ப்பங்களை தவிர்த்தல் மிக மிக அவசியம் விற்றமின்கள் கனியுப்புக்கள் நிறைந்த உணவுகளை உண்பது சிறந்தது. மேலும் விளையாட்டுக்கள் உடற்பயிறசிகளில் ஈடுபட்டு எமது மூளையையும் உடலையும் புத்துணர்ச்சி பெற வைக்கலாம். இவற்றை எமது மனதில் நிறுத்தி, புதிய மலர்களாகிய நாம் புதுயுகம் படைப்போம் வாரீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

மணிவிழா நாயகி திருமதி.வரதலட்சுமி கதிரேசபிள்ளை அவர்களின் சேவையினைப் பாராட்டுவதற்காகவும், அவரின் அர்ப்பணிப்பான சேவையினைப் போற்றுவதற்காக எடுக்கப்படும் இம் மணிவிழாவிற்கு ஆதரவு வழங்கிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு இந் நன்நாளில் எம்மால் வெளியிடப்படும் "வரதோதயம்" எனும் மலரிற்கு ஆசிச் செய்திகளை வழங்கிய மதகுருமார்கள், அரச அதிகாரிகள், ஆகியோருக்கும் வாழ்த்துச் செய்திகளை தந்துதவிய கல்விச் சமூகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் பல்துறை சார்ந்த ஆக்கங்களை வழங்கிய பேராசிரியர்கள், கல்வியலாளர்கள் ஆகியோருக்கும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் மணிவிழா மலருக்கான நிதியுதவி வழங்கிய அன்புள்ளங்களையும் இந்நேரத்தில் நினைவு கூர்ந்து நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதேவேளை இம் மணிவிழா மலரானது அழகிய ஓர் வரதோயமாக மிளிர்வதற்கு செவ்வை பார்த்து தந்துதவிய திரு.ந.மயூரன், அதிபர், யா/புங்குடுதீவு றோ.க.த.த.க பாடசாலை அவர்களுக்கு நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம். மேலும் மலரினை சிறந்த முறையில் அச்சிட்டுதவிய "மதிகலர்ஸ் பிறிண்டேர்ஸ்" ஸ்தாபனத்தாருக்கும் உளங்கனிந்த நன்றிகள்.

இறுதியாக இவ் மணிவிழா நிகழ்வானது சிறப்புற நடந்தேறுவதற்கு ஆக்கமும் ஊக்கமுமளித்து எம்முடன் இணைந்து செயலாற்றிய அனைத்து உள்ளங்களிற்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து பேருவகை அடைகின்றோம்.

நன்றி

***மணிவிழாக் குழுவும்***
***பாடசாலைச் சமூகமும்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரதோதயம் மணிவிழா மலர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Printed by : Mathi Colours, Nallur. 021 2229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org